Sangathamil
# சங்கத்தமிழ்
குரல் – 17 சர்வதேச மின் செய்தித்தாள் 15 ஜனவரி 2022




# இந்தியாவுடன் நல்லுறவைப் பேண விரும்புகிறோம்

“தென்னாசிய பிராந்தியத்தில் இந்தியாவின் வல்லாதிக்க முக்கியத்தவத்தை நாம் ஆங்கீகரிக்கிறோம். இந்தியாவின் இந்து சமுத்திர சமாதானக் கொள்கையை வரவேற்கி றோம். இந்தியாவின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள் கையை மதிக்கி றோம். இந்தியாவின் பூகோள அரசியல் நலன்களையும் வெளி யுறவுக் கொள்கையையும் கௌர விக்கிறோம்.




இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒரு சர்வதேச உடன்பாடு என்ற அந்தஸ்தைக் கொண்டிருப்பதால் இந்த ஒப்பந்தத் தில் இந்தியாவின் சர்வதேச கொள்கைகளையும் பூகோள தேசிய நலன்களையும் பிரதிபலிக்கும் அம்சங்கள் அனைத்தையும் நாம் ஆதரிக்கிறோம். அதே சமயம் இந்த ஒப்பந்தம் ஈழத்தமிழர் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு அளிப்பதாகவோ அன்றி அவர்களது நலன்களைப் பேணுவதாகவோ அமையவில்லை. என்பதே எமது நிலைப்பாடாகும். ஈழத்தமிழர் நலன்கள் பேணப்படும் வகையில் இந்திய அரசு நடவடிக்கைகளை எடுக்குமாயின் இந்த ஒப்பந்த அமுலுக்கு நாம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்.

ஈழத்தமிழரின் துயரைத் துடைக்க வேண்டிய தார்மீகக் கடைப்பாடு இந்திய அரசுக்கு உண்டு. இராணுவப் பலாத்காரப் பாதையைக் கைவிட்டு, தர்மத்தின் பாதையில் சென்று இந்த தார்மீகக் கடமையை பாரதம் பூர்த்தி செய்து வைக்கும் என நாம் கருதுகிறோம்.” - அரசியற் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள்.

**உலகப் பரப்பெங்கும் பரந்து வாழும்
சங்கத்தமிழ் வாசகர்கள், ஆதரவாளர்கள்,
அனுசரணையாளர்கள், தாய்த் தமிழ் உறவுகள்,
அனைவருக்கும் மற்றும் வர்த்தக பெருமக்களுக்கும்
எமது இனிய தமிழ் புத்தாண்டு,
தமிழர் திருநாள் தைப்பொங்கள்
நல்வாழ்த்துக்கள்...!**



## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

MORTGAGE ALLIANCE
Access Inc.
Independently Owned & Operated | FSCO: 11404
For All Your Mortgage Needs
• Purchase • Refinance
• First | Second Mortgage • Equity Line of Credit
Siva Sethunathan, B.A.
Mortgage Agent
416 725 1732
8130 Sheppard Ave E Suite 209
Toronot, ON M1B 3W3

NISHANTHAN LAW OFFICE
SERVICES
• Purchasing a Residential Property
• Selling a Residential Property
• Residential Mortgage Refinancing
• Wills and Powers of Attorney
NOTARY SERVICES
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

Ideal Auto Tech
Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING
PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு தேடி வந்து செய்து கொடுக்கப்படும்
வீடுகள், கொண்டோக்கள், வாடகை வசிப்பிடங்கள், விட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...
இந்த விளம்பரத்தாலோ எந்த வேளைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

Annai's PRAGATI
SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
Master Healer
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment), Spagyric Alchemist (CAN), Alchemist (IND), Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1647-278-3100

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

K.S PAINTING & HARDWOOD
PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

GRAND OFFER
this Offer Only December 31st to January 31st, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copys
Inside 32 Pages, B&W 20lb with colour glossy cover
c $ 310.00
Design Only
c $ 9.99 / sq. ft (c$ 34.99 / ft.)
Large Format Digital Printing
1000 Business Cards
with out design c $ 59.99 One Side - 16pt Card Stock
with out design c $ 29.99 One Side,10pt Card Stock
We print all kind of products
Call Me : Silver Print House - 647 712 1266

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

SELVAM
GENERAL PEST CONTROL
Cockroaches, Silverfish, Carpet Beetles, Moths, Fleas
Rodents, Spiders, Wasps/Bees/Hornets & Ants...
எலி, பூச்சி தொல்லையிலிருந்து விடுபட
உடங்களுக்கு உதவிட 24 மணி நேரமும்
7 நாட்களும் இலவச மதிப்பீட்டுடன் 100 வீத
உத்தரவாதத்துடன் சேவையாற்றிட அழையுங்கள்
இந்த விளம்பரத்தாலோ எந்த வேளைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயுட் காப்புறுதி,
வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கு அழையுங்கள்
Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)
வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை
Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086

MT CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
• AUDIT • REVIEW ENGAGEMENT • NOTICE TO READER • BUSINESS ADVISORY • CONTROLLERSHIP SERVICES
• CORPORATE TAXES • PERSONAL TAXES • FINANCIAL PLANNING • CRA AUDITS • PAYROLL • BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 304 - 5200 Finch Ave East, Scarborough, ON M1S 4Z5
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM




# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**மனதின் ஆழத்து உள்ளுணர்வுகளை வார்த்தைகளில் சித்தரிப்பது கடினம். அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஓர் உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விபரிக்க முடியாது. எனது அன்புத் தம்பி கிட்டுவின் இழப்பும் அப்படித்தான். அவனது மறைவு எனது ஆன்மாவை பிழிந்த ஒரு சோக நிகழ்வு. அதனைச் சொற்களால் வார்த்துவிட முடியாது**



தமிழீழத்தில் விடுதலைப் புலிகளை அழித்துவிடலாம் ஆனால் விடுதலைப் புலிகள் படைத்துவிட்ட புரட்சிகர சகாப்தத்தை அவர்களது வீர வரலாற்றை அவர்கள் எதற்காக மடிந்தார்களோ அந்தப் புனித லட்சியத்தை எந்தச் சக்தியாலும் அழித்துவிட முடியாது

தமிழீழத் தேசிய தலைவர் வே. பிரபாகரன்


## சங்கத்தமிழ்

### தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**முகநூல்** (Facebook)

Sangathamil Canada


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சி யும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# கிட்டுவின் இழப்பு இலையின் உதிர்வல்ல மலையின் சரிவு




ஆரம்ப காலத்தில் இருந்தே இன்னொரு வரலாற்று நாயகன் என்றால் அவர்தான், என்றுமே கலகலப்பாக உற்சாகம் மிகுந்து காணப்படும் கிட்டு. நாம் இந்தியாவிற்கு 1981 இலே சென்றபோது அவரை விடுதலைப்புலிகளின் மதுரைமுகாமில் முதற்தடவையாக சந்தித்தோம். இளமைப்பருவத்தில் குறும்புக்காரராக விளங்கிய கிட்டு, தமிழ் நாட்டு உள்ளூர் வாசிகளின் பழைமைக்கொள்கைகளைக் கிண்டல் செய்து சவால்விட்டு மகிழ்வார். ஒரு தடைவ வேதியர்க்கு உரிய புனிதப்பூணூல் தரித்து உண்வு விடுதி ஒன்றுக்குள்நுழைந்து ஆட்டிறைச்சிக்கறியும், கோழிப் பொரியலும் தருவித்து, அங்கிருந்த சைவ உணவினர் வியப்போடும் வெறுப்போடும் பார்த்துக் கொண்டிருக்க, கிட்டு தனது அசைவ உணவை நன்கு சுவைத்து உண்டார். தலைமைப் பண்புகள் அபரிதமாக நிறைந்த ஒரு இளைஞரே கிட்டு என்பதில் சந்தேகமே இல்லை.

1983ற்கும், 1987ற்கும் இடைப்பட்ட காலத்தில், யாழ்ப்பாணத்தில் அவர் விடுதலைப்புலிகளின் ஆயுத எதிர்ப்பு இயக்கத்திற்கு தலைமை தாங்கி பல இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்தார். இதனால் ஒரு துணிகரமான கெரில்லாப் போராளியாகவும், போர்த்தற்திரோபாயத்தில் ஒரு விற்பன்னராகவும் மக்களிடையே அவர் புகழீட்டினார். கட்டிறுக்கமான ஒழுக்கக்கட்டுப்பாட்டுடன் கலகலப்பான அவரது சுபாவமும் ஒத்திசைந்து அவருக்கு ஒரு கவர்ச்சிகரமான ஆளுமையைக் கொடுத்தது எனலாம்.

ஆனால் கிட்டுவைப் பற்றி எண்ணும் பொழுதெல்லாம் போராளிகள் மீதும், மக்கள் மீதும், தமிழரின் தாயகம் மீதும் உணர்ச்சி பூர்வமாக அவர் கொண்டிருந்த அளவு கடந்த நேசம் தான் நினைவுக்கு வருகிறது. 1985 இலே எம்மைச் சந்திக்க கிட்டு சென்னைக்கு வந்த போது பாலாவையும் என்னையும் தம்மோடு கூட்டிக்கொண்டு யாழ்ப்பாணம் தீரும்ப அவர் திட்டமிட்டு வந்தார். அங்கே எம்மைப் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும் என்பதுடன் தாம் நேசித்த யாழ்ப்பாணத்தை எனக்குச் சுற்றிக்காட்டவும் கருதியிருந்தார்.

* * *

முல்லைத்தீவு அளம்பில் காடுகளில் அமைந்திருந்த 1:4 பாசறையில் கிட்டுவைக் கண்டதும் எமக்கு மகிழ்ச்சியைத் தந்தது. 1988ல் தமிழ் நாட்டில் இருந்து நாம் தப்பிச்சென்ற சில நாட்களில் தமிழ்நாட்டில் இடம் பெற்ற ஒரு சுற்றிவளைப்பில் அப்போது, சென்னையில் இருந்த கிட்டுவும் அகப்பட்டு, பாதுகாப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். பின்னர் இவர் யாழ்ப்பாணத் தடுப்புக்காவலுக்கு இடமாற்றம் பெற்றார். ஆயினும் அவருடைய உடல் ஊனத்திற்கு வழுங்கப்படும் ஒரு சலுகையாக இந்திய அமைதிப்படைத் தலைமைப் பீடம் தடுப்புக்காவலில் இருந்து அவரை விடுவித்தது. அவர், உடனடியாக முல்லைத்தீவுக் காடுகளில் இருந்த பிரபாகரன் அவர்களிடமும், புலிப் போராளிகளிடமும் சென்றார். பிரபாரகன் அவர்களுடன் இந்தத் தருணத்தில் உளவியல் ரீதியாக, போராளிகளுக்கு உற்சாகம் ஊட்டுவதில் கிட்டு தமது தீரத்தைத் காட்டினார். புதிதாகக் கற்கவேண்டும் என்பதிலும் ஒருவர் தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனபதிலும் கிட்டு எப்பொழுதுமே பேரார்வம் கொண்டவர். போராளிகளுக்கு அவர் வகுப்புகள் நடத்தினார். அவர்களுடைய நடவடிக்கைகளிலும் ஈடுபாடு காட்டினார். நிழற்படம் பிடிப்பதில் கிட்டு சூரர். நாம் அங்கு தரித்திருந்த போது பிரபாகரன் அவர்களையும் எம்மையும் பல கோணங்களில் படம் பிடித்தார்.

* * *

ஒக்ரோபர் முற்பகுதியில், பிரபாகரன் அவர்களை நேரில் சந்தித்து ஆலோசனை பரிவதற்காக, முல்லைத்தீவுக் காடுகளுக்கான இரண்டாவது பயணத்தை மேற்கொண்டோம். கிட்டுவின் துண்டிக்கப்பட்ட காலுக்குச் சிகிச்சை பெறுவதற்காக அவரை இலண்டனுக்கு அனுப்பத் தாம் விரும்புவதாக இந்தப் பயணத்தின்போதே பிரபாகரன் அவர்கள் பாலாவிடம் கூறினார். தம்மை வெளிநாடு அனுப்பத் தீர்மானிக்கப் பட்டிருப்பதை அறிந்ததும் கிட்டுவின் மனம் ஊசலாடியது. சரியான உறுப்புப் பொருத்தல் கிடைத்தால், இலகுவாக நடக்கவும், தடையின்றி நடமாடவும் முடியும் என்பது அவருக்கு மகிழ்ச்சியே. ஆனால் தாம் வெகுவாக நேசிக்கும் தமது போராளிகளையும் தாய் நாட்டையும் விட்டுப் பிரிவது அவருக்கு சஞ்சலத்தைக் கொடுத்ததால், பிரிவை அவரால் நினைத்துக் கூடப்பார்க்க முடியவில்லை. தமது போராளிகளுக்கு பயிற்சி வழுங்கும் பணியில் கிட்டு ஒளிர்ந்தார்: அவர்களுடைய ஈடுபாடுகளில் அவர்களை ஊக்குவித்தார். அவர்களை உற்சாகமாக ஈடுபடுத்த புதிய திட்டங்களையும் அறிமுகப்படுத்தினார். எனவே, பிரிய வேண்டிய நாள் நெருங்க, அவரும் சரி, அவருடைய போராளிகளும் சரி, கலகலப்பின்றிச் சோர்வாகக் காணப்பட்டார்கள். நான் பார்த்த பரிதாபத்துக்கு உரிய காட்சிகளில் ஒன்று. அளம்பில் காட்டில் இருந்து கிட்டுவை வெளியே கூட்டிச்சென்ற நாளன்று, அந்த வரலாற்று நாயகன், பிரபாகரன் அவர்களுடைய தோளில் முகத்தைப் புதைத்து தேம்பியழுதது தான். அவரை ஒரு கதிரைப்பல்லக்கில் இருந்திய அவருடைய போராளிகள் அவரை உலங்கு வானூர்தி வரை தோளிலே சுமந்து சென்றார்கள். இந்த வடிவிலே தான் பாலாவை அவர்கள் முன்னர் தோளில் சுமந்தமையை நினைவு கூர்ந்தேன்,



கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் கிட்டு - சிந்தியா பதிவுத் திருமணத்தை அடேல் பாலசிங்கமும், அன்ரன் பாலசிங்கமும் நடத்தி வைத்தனர்.

காட்டுக்குள் இருந்து வெளியே கொண்டு வரப்படும்போது, தமக்கே உரிய நேர்த்தியில், கிட்டு தமது போராளிகள் முன், கலக்கத்தை முகத்தில் காட்டாது கலகலப்பாக வேடிக்கையாகப்பேசி தமது பாசத்தை அவர்கள் மீது கொட்டினார். கிட்டு கொழும்பை அடைந்ததும் அவரைப் பிரித்தானிய தூதரகத்திற்குக் கூட்டிச் சென்றோம். பிரித்தானியத் தூதருடன் கலந்துரையாடிய பின், பிரித்தானியாவுக்கான கிட்டுவின் வீசா அனுமதி அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், லண்டன் புறப்படும் முன், கிட்டு ஒரு முக்கிய விடயத்தை கவனிக்கவேண்டியிருந்தது. இந்திய அமைதிப்படைப் பாதுகாப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட பின் முல்லைத்தீவுக் காடுகளுக்கு சென்றதிலிருந்து, மருத்துவ மாணவியான அவருடைய காதலி சிந்தியாவிடம் இருந்து அவர் பிரிந்து வாழவேண்டியதாயிற்று. சிந்தியாவோடு மீண்டும் இணைய வேண்டும் என்று அவர் தவித்தார். அவரைச் சந்திக்க சிந்தியா யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குப் பயணம் புரிந்தார். அங்கே திருமணம் செய்ய அவர்கள் தீர்மானித்தார்கள். சடங்கிலே கலந்து கொள்ள கிட்டுவின் தாயார் வல்வெட்டித்துறையில் இருந்து கொழும்பிற்கு அவசரமாக வந்தார். சிந்தியாவின் பெற்றோர் ஏற்கெனவே கொழும்பில் இருந்தார்கள். பேச்சு வார்த்தையின் போது புலிப்பிரதி நிதிகள் தரித்திருந்த விடுதியின் அறை ஒன்றிலே ஒக்ரோபர் மாதம் 25ம் திகதி, கிட்டுவுக்கும், சிந்தியாவுக்கும் பதிவுத்திருமணம் நடைபெற்றுது. சில நாள் கழித்து கிட்டு லண்டனுக்கு விமானம் மூலம் பயணமானார்.

* * *

இந்தியக்கடற்படையின்ரின் கரங்களில் சிக்கி, 1993 இலே, துயர்தரும் வகையில் அவர் மரணம் அடைந்தார். அதையடுத்து அவருடைய சொந்த ஊரான வல்வெட்டித்துறையில் பிரமாண்டமான அளவில் துயராஞ்சலி ஒன்று நடைபெற்றது. ஒரு இலட்சத்துக்கு மேலான மக்கள் அந்த வைபவத்தில் திரண்டிருந்தார்கள். வெறுமே அஞ்சலி செலுத்த அல்ல. அந்த மண்ணின் மைந்தன் மீது இருந்த ஆழமான அன்பையும் மதிப்பையும் வெளிக்காட்டவே பெரும் திரளாக மக்கள் அங்கு அணி திரண்டனர்.



- திருமதி அடேல் பாலசிங்கம் - ஈழநாதம் 16-22-01.2004

திருமதி அடேல் பாலசிங்கம் அவர்கள்
"சுதந்திர வேட்கை" நூலில்
கேணல். கிட்டுவைப் பற்றி எழுதிய சில கருத்துக்களை
அவரது 29 ஆம்
ஆண்டு நினைவாக இங்கு
பிரசுரிக்கப்படுகின்றது.

# நினைவுடனும், கனவுடனும் காலத்தின் ஒவ்வொரு அசைவுடனும் இருக்கும் அவர்கள்

**கேணல் கிட்டு**
**லெப். கேணல் குட்டிசிறி**
**மேஜர் மலரவன்**
**கப்டன் ஜீவா**
**கப்டன் குணசீலன்**
**கப்டன் நாயகன்**
**கப்டன் றொசான்**
**லெப். அமுதன்**
**லெப். நல்லவன்**
**லெப். தூயவன்**





பட்டத்து யானையையும்
வீர வாள்களையும் இழந்து
பத்து (பல) ஆண்டகள் முற்றிற்று.
கொற்றவையின் குங்குமத்தை
கடலிற் கரைத்து தசாப்தமாயிற்று
கரையெங்கும் பூபரவி
நம்பிக்கை விதைத்து
அலைமீதேறி வருவாரெம் குமாரர்களென
காத்திருந்தோம்.
திசையெங்கும் அளந்து வந்த காற்றை
சிறைபிடிக்க நின்றது இமயம்.
காற்றா கைவிலங்கிட ஒப்பும்?
ஆழிநடுவே தீயாயிற்று.
கரையிருந்த எமது காதுகளில்
கூர்வேல் சொருகியது
வங்கக் கடலலை.
சோகத்தைத் தாங்குதல் எளிது
துரோகத்தைத் தாங்குதல் எங்கனம்?
காலப்பேய் ஆகப்பட்டதனைத்தையும்
அள்ளி வாயுண்டு போகிறது.
எஞ்சுவது எமக்கு நினைவுகள் மட்டுமே.
இருக்கவேண்டியன இல்லையெனவும்
போகவேண்டியன கண்முண்னெனவும்
நெடுநாளாய்.
சித்திரபுத்திரனின் கணக்கெங்கோ பிசகிறது.
கிட்டு
குட்டிச்சிறி
கூடவந்த தோழர்கள்
பெயரினை மட்டும் அறிந்தவர் பெருகியும்
நேரினில் தெரிந்தவர் அருகியும்
பூத்து விட்டது புதிய தலைமுறையொன்று
இது நியதியெனினும்
காத்தவராயன் இன்றும் எம்மொடிருக்கிறானே
வாயினில் பாட்டாய்
வெடியரசன் வாழ்கிறானே எம்முடன்
காலினில் கூத்தாய்
ஆரியப் பூமாலைக்கு அழிவில்லை என்பதாய்
கோயில் வீதியில் குதிக்கிறாளே இன்றும்
காக்கைவன்னியன் கற்பனைப் படைப்பென
எழுதியவனேஒப்புக் கொடுத்த பின்னும்
உயிருடன் தானே உலவுறான் எம்முடன்.
எம் காலத்து அதிசையங்கள் மட்டும்
“எல்லாம்கற்பனை“ என்றாகி
போவரோ எனும் அச்சமெழுகிறது
அடி நெஞ்சில்.
கிட்டு
ஆற்றலால் நிமிர்ந்த உயரமென்றானான்
மலை போல்.
குட்டிச்சிறி
நம்பிக்கை சுமந்துவிரிந்தான்
கடல் போல.
மற்றத்தோழர்களென்ன குறைவா?
பற்றியெரிவோம் எல்லோரும் எனும் கட்டலைக்கு
பணிந்த ஒன்றுக்காகவே
எத்தனை வீரர்கள் அவர்கள்
வஞ்சனை செய்தது வல்லாதிக்கம் மட்டுமா?
நெஞ்சிலிவரின் நினைவகற்று வோமெனில்
நாமும் தான்.
கிட்டு.

தலைவனை நெஞ்சிற் பொத்தியவன் மட்டுமல்ல...
நரம்போடும் குருதிக்கலங்கள்
ஒவ்வொன்றினுள்ளும்
கலந்து வைத்தவன்.
விடுதலைக்காக தலைவனை நேசித்து
பின்னர்
தலைவனுக்காக விடுதலையைப் பூசித்தவன்.
தோளிற் கைபோட்டால்
தோழமையின் ஆழம் தெரியும்
அக்கணங்களில்.
சிரசேறிய செருக்குடன் தான்
பகைவரெம் வாசல் வந்தனர்.
கிட்டு வழிமறித்த பின்னரே
ஆணவம் தவறென அறிந்தனர்.
வீரத்துக்குச் சான்றிருந்தது முன்னரும்
எம் கண்ணெதிரே நின்றதும்
கையெடுத்து மகிழ்ந்ததும்
கிட்டு என்ற வடிவுதானே.
கோபம் ஒரு குற்றமல்ல
உண்மை மனிதரின் உயிர்.
எனக்கு கோபமே வருவதில்லையென
எங்கேயும் ஒரு குரல் கேட்டால்
அவன் ஞானி.
அல்லது கசபோக்கிலி.
கிட்டு உண்மைமனிதனாகவே ஒளிர்ந்தான்
இறக்கும் இறுதி நொடிவரை.
குட்டிச்சிறியும்
ஒன்பது தோழரும் அவ்வாறே
மானுடவாழ்வு சாவுடன் முற்றுமெனின்
அது வாழ்வல்ல.
நெடுநாள்நினைவாய் நிலைக்கனும்.
கிட்டு எம் நினைவுடன்
கிட்டு எம் கனவுடன்
கட்டு எம் காலத்தின் ஒவ்வொரு அசைவுடன்
இணைந்திருந்து போனான்.
இனியும் இருப்பான் எம்முடன்.
இருப்பார்கள் இனியும் அவர்கள் எம்முடன்.
ஊழிக்கடைவரை.

-புதுவை இரத்தினதுரை-




# கூட்டாட்சி தொடர்பில் சிந்தியுங்கள் என மோடியே கூற நாம் 13ஐ கோருவதா?

**நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன்**

ஜனவரி 02, 2022



தமிழ் பேசும் கட்சிகள் இணைந்து பாரதப் பிரதமரிற்கு எழுதும. கடிதம் தொடர்பில் இன்று ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

1987இல் யாருக்காக ஒப்பந்தம் எழுதப்பட்டதோ அவர்களோடு போரிடுவதாகவே இறுதியில் அந்த ஒப்பந்தம் இருந்தது. அதனால் இந்த 13ஆம் திருத்தச் சட்டத்தால் எமக்கு எந்த முன்னேற்றமும் கிடையாது. இந்தியா எப்போதும் இலங்கையை பூகோள ரீதியில் கரிசணையாக இருந்தாலும் ஆட்சி அதிகாரத்தில் இந்திய மாநில அதிகாரத்திற்கு மேலதிகமாக இருக்க கூடாது என்பதிலும் இந்தியா குறியாக இருக்கின்றது. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் அடிப்படையில் சூழலில் வேறுபாடு உண்டு.

கூட்டாச்சி தொடர்பில் சிந்தியுங்கள் என 6ஆண்டுகளிற்கு முனபே பாரதப் பிரதமர் நரேந்திர மோடியே கூறிய நிலையில் நாம் இன்றும் அந்த 13ஐ கோரப் போகின்றோமா என்ற பெரும் கேள்வியும் உள்ளது.

ஜெயலலிதா நிறைவேற்றிய கண்டனத் தீர்மானத்தை குறைக்கும் வகையிலான ஓர் கோரிக்கையினையா நாம் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்ராலினிடம் முன் வைக்கப் போகின்றோம். இதனை ஏன் கட்சியில் இன்னும் விரிவாக பேசவில்லை.

அரசியல் தீர்வு தொடர்பில் தெளிவான பார்வை இருந்திருக்க வேண்டும். அதற்கு தெளிவாக பயணிக்க வேண்டிய கூட்டமைப்பும் குழம்பியிருக்கின்றதோ என்ற எண்ணம் பலரிடம் தோன்றுகின்றது.

முதலில் எழுதிய கடித்த்தில் சமஸ்டி வடிவில் எமது கோரிக்கைகளை உள்ளடக்கிய பல விடயங்கள் இருந்தன. ஆனால் தற்போது இரண்டாவதாக எழுதிய வரைபில் பல விடயம் நீக்கப்பட்டிருப்பதனால் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு அதனை முழுமையாக நிராகரித்துள்ளது.

தேர்தலை நடாத்துமாறு கோர பாரதப் பிரதமரிற்கு கடிதம் எழுத வேண்டிய அவசியமோ நியாயமோ இல்லை ஏனெனில் இந்த அரசு போன்று நாம் தேர்தலைக் கண்டு பயப்பிடவில்லை. தேர்தலிற்கு கூட்டமைப்பு தயாராகவே இருக்கின்றது. வெளியில் ஓர் மாயை உண்டு அதாவது ரெலோ கொண்டு வந்த நல்ல விடயத்தை தமிழ் அரசுக் கட்சி எதிர்ப்பதாக எண்ணுகின்றனர். இந்த 13 கோருவது தான் அந்த நல்ல விடயம்.

இந்தியாவின் கொல்லைப்புறம் வரையில் இன்னுமோர் நாடு வந்த பின்பும் அயல் நாட்டின் உள் விவகாரத்தில் தலையிட மாட்டோம் என இந்தியா தொடர்ந்தும் கூறப் போகின்றதா என்பதனை இந்தியாதான் சிந்திக்க வேண்டும்.

இதனால் வரைபு தொடர்ந்தும் தயாரிக்கும் பணியில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை என்பதே நிலைப்பாடு. நேற்றைய வரைபு எமது அபிலாசையினையோ தீர்வையோ கொண்டிருக்கவில்லை என்பதனை பகிரங்கமாக கூறுகின்றேன்.

ரவூவ் ஹக்கீமைப் பொறுத்தமட்டில் அவரது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களே அவரது கட்டுப்பாட்டில் இல்லாத நிலையில் தமிழர்களின் தீர்வு விடயத்தில் எவ்வாறு தீர்வை முன்வைப்பது.

எங்களுடைய கொள்கையோடு நில்லுங்கள் என நாம் அவர்களை நிர்ப்பந்திக்க முடியாது அதேபோல் தமது நிலைப்பாட்டுடன் ஒத்துபோக வேண்டும் என அவர்கள் எம்மை திணிக்க முடியாது. என்றார்.

# தமிழ் தேசியக்கட்சிகளால் முன்னெடுக்கப்படும் முயற்சிக்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும்

**மலையக மக்கள் முன்னணியின் தலைவர் கலாநிதி. வே . இராதாகிருஷ்ணன்**

ஜனவரி 09, 2022



இந்திய பிரதமருக்கு அனுப்படவுள்ள கூட்டு ஆவணத்தில் நாம் கையொப்பமிடாவிட்டாலும், தமிழ் தேசியக்கட்சிகளால் முன்னெடுக்கப்படும் முயற்சிக்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும். அவர்களின் நடவடிக்கைக்கு எதிராக நிற்கமாட்டோம்." - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் இன்று (ஞாயிற்றுக்கிழ்மை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு," இந்த அரசுக்குள், அரசியல் ரீதியிலும் தற்போது நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது. இராஜாங்க அமைச்சு பதவியில் இருந்து சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டுள்ளார்.

மறுபுறத்தில் மைத்திரிபால சிறிசேனவும் கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றார். எனவே, அரசு வெகு விரைவில் கவிழும் என்பதேயே நாட்டில் இடம்பெறும் அரசியல் சம்பவங்கள் மூலம் உணர முடிகின்றது.

எதிர்காலத்தில் புதிய கூட்டணிகள் உருவாகலாம். புதிய பயணம் பற்றி மைத்திரிபால சிறிசேனவும் கருத்து வெளியிட்டுள்ளார். அந்தவகையில் நாமும் தேர்தலுக்கு தயாராகவே இருக்கின்றோம். தேர்தலை மட்டும் எதிர்ப்பார்த்து வருபவன் தலைவர் கிடையாது, நாளை சமூகதாயம் பற்றி சிந்திப்பவனே உண்மையான தலைவர். அவ்வாறானவர்களுக்கே நாம் ஆதரவு வழங்க வேண்டும்.

அதேவேளை, தமிழ் பேசும் கட்சிகள் இணைந்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தன. அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பை பெறுவதற்கே ஆரம்பத்தில் இணக்கம் காணப்பட்டிருந்தது.

அதன்பின்னர் சமஷ்டி, சுயநிர்ணயம் உள்ளிட்ட விடயங்களும் உள்வாங்கப்பட்டன. இதனால் மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகள் ஆவணத்தில் கையொப்பமிடவில்லை.

ஆனாலும் தமிழ்த் தேசியக் கட்சிகளால் முன்னெடுக்கப்படும் முயற்சிக்கு நாம் முழு ஆதரவை வழங்குவோம். அதற்கு தடையாகவோ - எதிராகவோ நிற்கமாட்டோம்.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தால் நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது. 20 மூலம் அது நீக்கப்பட்டது. அதனால் ஏற்பட்டுள்ள அவல நிலையை மக்கள் இன்று உணர ஆரம்பித்துள்ளனர். இந்த உண்மையைதான் மைத்திரி இன்று கதைக்கின்றார். ஆனால் 52 நாட்கள் அவர் அரசியல் சூழ்ச்சி செய்திருக்காவிட்டால், இன்றும் அவரே ஜனாதிபதி. என்றார்



"श्रीलंका में व्यवस्थित जातिसंहार चल रहा है, हम इसे बर्दाश्त नहीं कर सकते हैं या हम मूक दर्शक नहीं हो सकते हैं"।

-1983 में
ब्लैक जुलाई दंगों के दौरान
भारत की प्रधानमंत्री माननीया इंदिरा गाँधी

"It is a Systematic genocide going on in Sri Lanka We cannot tolerate it or we cannot be a Silent spectator"

Indira Gandhi
Prime Minister of India
July-1983.

# வடகிழக்கு கட்சிகளின் பயணத்துக்கு தடையாக இருக்கப்போவதில்லை

## முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்

ஜனவரி 07, 2022

இந்திய பிரதமருக்கு, இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் பேசும் கட்சிகளின் விண்ணப்ப கடிதம்" என்று ஆரம்பிக்கப்பட்ட கூட்டு செயற்பாட்டில், சமீபத்தைய இந்திய வம்சாவளி மலையக தமிழரின் அபிலாசைகளையும் உள்ளடக்குவதில் சிக்கலை எதிர்கொண்டதாலும், எனவே எமது பங்களிப்பு வடகிழக்கு தமிழ் கட்சிகளின் சுதந்திர செயற்பாட்டுக்கு பாதகமாக இருப்பதை உணர்ந்ததாலும், இந்த செயற்பாட்டுக்கு வெளியில் நின்று அவசியமான ஒத்துழைப்புகளை வழங்குவோம்.

இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் என்ற பொதுநோக்கில், இந்த செயற்பாட்டை ஆரம்பித்த ஏற்பாட்டாளர்கள் செல்வம் அடைக்கலநாதன் எம்பி, தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்பி, இணைப்பாளர் சுரேன் குருசுவாமி ஆகியோருக்கு எமது வாழ்த்துகளை தெரிவிக்கிறோம்.

அதேவேளை பொது இணக்கப்பாட்டின் மூலம் பொது ஆவணம் தயாரிக்க முடியாமையை கருத்தில் கொண்டு மலையக தமிழரின் அபிலாஷைகளை முன்னிறுத்தி பாரத பிரதமர், இலங்கை ஜனாதிபதி, தமிழக முதல்வர் உள்ளிட்ட அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தலைவர்களுக்கும் தனித்தனியாக, தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் ஆவண கடிதம் எழுதப்படும் என்ற தமிழ் முற்போக்கு கூட்டணியின் முடிவுகளை கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்கள் பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, முதல் கலந்துரையாடல் "இலங்கை அரசியலமைப்பில் ஏற்கனவே உள்ள 13வது (13யு) திருத்த சட்டத்தை முற்று முழுதாக நடைமுறைப்படுத்தி, அர்த்தமுள்ள அதிகார பகிர்வை உறுதி செய்து, மாகாணசபை தேர்தலையும் விரைந்து நடாத்த இலங்கை அரசை வலியுறுத்த, இந்தியாவை ஒருமித்து தமிழ் பேசும் மக்களின் கட்சிகள் கோருதல்" என்ற அடிப்படையிலான அழைப்பின் பேரிலேயே ஏற்பாட்டாளர்களால் இந்த கூட்டு செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலை கழகம், தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் தேசிய கட்சி ஆகிய வடகிழக்கு தமிழ் கட்சிகளுடன் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய கட்சிகளும் நவம்பர் இரண்டாம் திகதி நடைபெற்ற முதல் கலந்துரையாடலில் கலந்துக்கொண்டன.



நோக்கம்:
இலங்கை அரசமைப்பில் இடம் பெற்றுள்ள ஒரே அதிகார பரவலாக்கல் சட்டமான 13ம் திருத்தம் என்பதை இறுதி தீர்வாக கருதி இந்த பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் இலங்கை அரசாங்கம், இந்த குறைந்தபட்ச சட்டத்தைக்கூட முழுமையாக அமுல் செய்யாமல் இழுத்தடிப்பதுடன், இச்சட்டமூலம் மாகாணசபைகளுக்கு வழங்கிய அதிகாரங்களை யும் கூட வாபஸ் பெறுகிறது என்ற உண்மை உலகிற்கு அதிகாரபூர்வமாக ஒட்டுமொத்த தமிழ் பேசும் கட்சிகளால் அறிவிக்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கமே எமது பொது நோக்காக இருந்தது.

இலங்கை தமிழரசு கட்சி உள்வாங்கல், இந்த செயற்பாட்டில், இலங்கை தமிழரசு கட்சியும் உள்வாங்கப்பட வேண்டும் என்பதை ஆரம்பம் முதல் வலியுறுத்தி கூட்டமைப்பின் தலைவரை நேரடியாக, தமுகூ மனோ கணேசனும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீமும் சந்தித்து அழைப்பு விடுத்ததையும், தமிழரசு கட்சியை தவிர்த்து விட்டு விண்ணப்ப கடிதத்தில் கையெழுத்திடும் யோசனையை, தமிழ் முற்போக்கு கூட்டணியாகிய நாம் நிராகரித்தோம் என்பதையும் ஏற்பாட்டாளர்கள் நன்கறிவார்கள்.

பொது ஆவணகடிதம்:
ஆரம்பத்தில், பாரத பிரதமருக் கான கடித வரைபு, அனைத்து கட்சிகளும் ஏற்றுக் கொள்ளும், பொது குறைந்தபட்ச நிலைப்பாடுகளை கொண்ட விண்ணப்ப கடிதமாக சுமார் ஒன்றரை பக்கத் தில் வடிவமைக்கப்பட்டது. எனினும் தொடர்சியாக நடைபெற்ற கலந்துரையாடல்களின் போது, தமிழ் தேசிய அரசியலின் சமகால வரலாறு முழுமையாக அதில் எழுதப்பட்டு, எட்டு பக்கங்களை கொண்ட நீண்ட ஆவணக்கடித வரைபாக மாற்றப்பட்டது. இதன் பின்னுள்ள நியாயப்பாட்டை எம்மால் புரிந்துக்கொள்ள முடிகிறது.

ஆனால் ஒட்டு மொத்த தமிழ் பேசும் மக்கள் சார்பான கடிதம் என்பதால், இதே நியாயப்பாட்டின் அடிப்படையில், இக்கடிதத்தில் மலையக தமிழ் மக்களின் அபிலாஷகளும் உள்ளடக்கப்பட வேண்டிய இயல்பான தேவைப்பாடு எழுந்தது. மேலதிகமாக இந்த ஆவணக் கடித வரைபு, இறுதி வடிவம் பெறமுன்னரே ஊடகங்களின் வெளிப்படுத்தப்பட்டு வாதப்பிரதிவாதங்களை தமிழ் பேசும் அரசியல் சமூக பரப்புகளில் ஏற்படுத்தியது. பொது ஆவணகடிதம் நிராகரிப்பு.

இந்நிலையிலேயே, கடந்த வருடத்தின் இறுதி நாளான்று, தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களது கொழும்பு இல்லத்தில், தமுகூ தலைவர் மனோ கணேசன் உட்பட கட்சி தலைவர்கள், பிரதிநிதிகள் கூடி ஆராய்ந்து எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் மறுநாள் இவ்வருடத்தின் முதல் நாள், கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் எம்பியின் கொழும்பு இல்லத்தில் கூடி புதிய கடித வரைபு தயாரிக்கப்பட்டது.

ஆனால், இந்த ஆவணக்கடித வரைபு, உடனடியாகவே இலங்கை தமிழரசு கட்சியின் தலைமை சார்பாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனால் கடும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டதை நாம் அறிந்தோம்.

மலையக தமிழரின் அபிலாஷைகளை முன்னிறுத்தி ஆவணக்கடிதம்:
ஆகவே, பொது ஆவணம் தயாரிக்க முடியாமையை கருத்தில் கொண்டு சமீபத்தைய இந்திய வம்சாவளி மலையக தமிழரின் அபிலாஷைகளை முன்னிறுத்தி பாரத பிரதமர், இலங்கை ஜனாதிபதி, தமிழக முதல்வர் உள்ளிட்ட அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தலைவர்களுக்கும் ஆவணக்கடிதம் எழுத தமிழ் முற்போக்கு கூட்டணி முடிவு செய்துள்ளது.

வடகிழக்கு உடன்பிறப்புகளுக்கு எமது ஒத்துழைப்பு தொடரும்:
இப்பின்னனணிகளிலேயே, தேவையற்ற முரண்பாடுகளை தவிர்க்கும் நோக்கில், "வடகிழக்கு தமிழ் கட்சிகளின் இந்த செயற்பாட்டுக்கு வெளியில் நின்று ஒத்துழைப்புகளை வழங்குவோம்" என்ற முடிவை நாம் எடுத்துள்ளோம். வடகிழக்கு உடன்பிறப்புகளுக்கு, வரலாறு முழுக்கவும் இதை நாம் செய்துள்ளோம். இனியும் செய்வோம். "உரிமைக்கு குரல் கொடுப்போம் உறவுக்கு கை கொடுப்போம்" என்ற எமது கொள்கை தொடரும்.

# திருகோணமலை பெரியகுளம் பகுதியில் விகாரை அமைப்பதற்கு முயற்சி மக்கள் ஆர்ப்பாட்டம்!

ஜனவரி 07, 2022

திருகோணமலை பெரியகுளம் பகுதியில் விகாரை ஒன்றினை அமைப்பதற்காக அப்பகுதியில் அமைந்துள்ள கடைகளை அகற்றித்தருமாறு உப்புவெளி காவல் நிலையத்தில் பௌத்த துறவி ஒருவரால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதை அடுத்து குறித்த பகுதிக்கு வருகைதந்திருந்த காவல் துறையினர் அக்கடைகளை அகற்றுமாறு அறிவுருத்தியிருந்த நிலையில் ஒன்று திரண்ட அப்பகுதி வாசிகளால் குறித்த போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டத்தில் பொதுமக்களோடு இணைந்து பாராளுமன்ற உருப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

நாடு இக்கட்டான சூழ்நிலையில் காணப்படும் இக்கால கட்டத்தில் அரசு இவ்வாறான திட்டமிட்ட குடியேற்றங்களை நிறுவுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக இருப்பதுடன். தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பரவலான பெரும்பான்மையினக் குடியேற்றங்களை நிறுவுவதற்காக அரசால் முன்னெடுக்கபடும் இவ்வாறான செயற்பாடுகளை தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததுடன் பாராளுமன்ற உருப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களும்










## ஒன்ராரியோ அரசு கோவிட் – 19 பரவலைக் கட்டுப்படுத்த இராண்டாம் நிலை முடக்க விதி அறிவிப்பு



ஜனவரி 05, 2022

ஒன்ராரியோவில் கோவிட்-19 பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக இரண்டாம் கட்ட முடக்க நிலைக்கட்டுப்பாடுகள் கடந்த புதன் கிழமை அதிகாலை நடைமுறைக்கு வந்தன.

இந்தக்கட்டுப்பாடுகள் எதிர் வரும் 26ஆம் திகதி வரை மூன்று வாரங்களுக்குத் தொடரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சமூக ஒன்று கூடல்களில் உட்புறமாக இருந்தால் ஐந்து பேரும், வெளிப்புறமாக இருந்தால் பத்துப் பேரும் அனுமதிக்கப்படுவார்கள். பணியாளர்கள் வீடுகளில் இருந்து பணியாற்ற வேலை கொள்வோர் அனுமதிக்க வேண்டும். உணவுச்சாலைகள் போன்ற வற்றில் அமர்ந்திருந்து உணவு அருந்துவது தடை செய்யப்பட்டுள்ளது. உள்ளரங்கங்களில் நடைபெறும் திருமணங்கள், இறுதிநிகழ்வுகள், மதநிகழ்வுகள் போன்றன 50 சதவீதமான கொள்ளளவுடன் இடம் பெறவேண்டும். வணிக நிறுவனங்களிலும், வணிக வளாகங்களிலும் 50 சதவீதமானோர் அனுமதிக்கப்படுவார்கள். திரையரங்குகள், நாடக அரங்குகள், உடற்பயிற்சிக்கூடங்கள் போன்றன மூடப்படுகின்றன. சூதாட்ட விடுதிகள் மூடப்படுகின்றன. மருத்துவமனைகளில் வளங்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், அத்தியா வசியமற்ற சத்திரசிகிச்சைகளும், அவசரமற்ற சத்திர சிகிச்சைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

## ‘தமிழ் சமூக மையம்’ இப்பொழுது கனடாவில் பதிவு செய்யப்பட்ட அறக்கொடை நிறுவனமாக உதயம்

ஜனவரி 06, 2022



தமிழ் சமூக மையமானது கனடா வருமான முகவாண்மையால் அறக்கொடை நிறுவனமாகப்பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற நற்செய்தியைப் பகிர்ந்து கொள் வதில் தமிழ் சமூக மையத்தின் இயக்குனர் சபை பெருமகிழ்வடைகிறது.

கடந்த ஒரு வருட காலமாக இயக்குனர் சபையானது இதற்கான விண்ணப்பம் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வந்துள்ளது. அறக்கொடை நிறுவனமென்ற நிலை, பல நன்மைகளை தமிழ் சமூகமையத்திற்கும், குமுகத்திற்கும் வழங்குகிறது.

*நன்கொடையாளர்கள் வரி விலக்குப்பெறும் வகையிலும், நன்கொடைகளை ஊக்குவிக்கும் வகையிலும், எம்மால் நன்கொடைகளுக்கான பற்றுச்சீட்டுகளை வழங்க முடியும்.

*கட்டுமானத்திற்கான செலவிலிருந்து எம்மால் ஒன்றிணைந்த விற்பனை வரியை(HST) மீளப்பெறமுடியும்.

*ஏனைய பதிவு செய்யப்பட்ட அறக்கொடை நிறுவனங்களிடமிருந்து தமிழ் சமூகமையமானது நன்கொடைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

*தமிழ் சமூகமையமானது வருமானவரி விலக்குப் பெறும். தமிழ் சமூகமையம் கடந்த ஆண்டிலே 26.3 மில்லியன் டொலர்கள் அரச நிதியுதவி பெற்றும், வடிவமைப்புக்கு முந்திய ஆய்வை வெளியிட்டும் முன்னேற்றங்களைக் கண்டிருந்த நிலையிலே, இவ்வாண்டு அறக்கொடை நிறுவனமாகப் பதிவு பெற்றுள்ள செய்தி வெளிவருகிறது. இவ்வாண்டு தமிழ் சமூகமையத்திற்கான நிதித்திட்டத்தை உருவாக்குவதிலும், நிதிதிரட்டல்ப் பரப்புரையை ஆரம்பிப்பதிலும், ரொரன்றோ மாநகரிடம் மண்டலப்படுத்தல் மற்றும் திட்ட அமைவிட விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான முன்னேற்பாடுகளிலும் கவனம் செலுத்தப்படும்.

செயற்றிட்டத்தின் முன்னேற்றங்கள் பற்றி இயக்குனர் சபை குமுகத்திற்கு உடனுக்குடன் அறியத்தரும். செயற்றிட்டம் பற்றிய விபரங்களை அறிந்துகொள்ள நீங்கள்:
www.tamilcentre.ca என்ற இணையத்தளத்தை நாடலாம்



## எனது மகன் ஒரு பொறியியலாளர் இன்று சிறையில்

### தமிழ் அரசியல் கைதியின் தந்தை

ஜனவரி 14, 2022

எனது மகன் ஒரு பொறியியலாளர் ,அத்துடன் ஒரு எழுத்தாளரும் கூட இன்று வரை சிறையில் வாடுவதாக , தமிழ் அரசியல் கைதியின் தந்தையொருவர் கவலை தெரிவித்துள்ளார்.

சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, யாழ்ப்பாணத்தில் விடுதலை பொங்கல் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

நிகழ்வுகள் யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்துக்கு முன்பாக அமைந்துள்ள, தமிழர் ஆராய்ச்சி படுகொலை நினைவுத் தூபிக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

இதன் போது அவர் கருத்து தெரிவிக்கையில்,
நான் யாழ்ப்பாணம் அல்வாயில் வசிக்கின்றேன். எனது மகன் சிவலிங்கம் ஆரூரன் 2008 ஆம் ஆண்டு கொழும்பில் சந்தேகத்தின் அடிப்படையில் பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

தற்போது கொழும்பு மகசின் சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

இன்று வரை விடுதலை செய்யப்படவில்லை.எனது மகன் சிறந்த எழுத்தாளன், இதுவரை 5 நாவல்கள் மற்றும் ஒரு சிறு கதை எழுதியுள்ளார்.

அதற்கு அவருக்கு விருதுகளும் கிடைத்துள்ளது. இப்போதும் சிறையில் அவர் எழுதிக்கொண்டு தான் இருக்கின்றார் – என்றார்.

அரசியல் கைதிகள் குடும்பத்துடன் இணைய வேண்டும் என பிரார்த்தித்து, குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினால் **‘விடுதலை பொங்கல்’** நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில், மக்கள், உறவினர்கள், அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.







# தமிழக செய்திகள்



# தமிழகத்தில் முழு ஊரடங்கு

ஜனவரி 09. 2021



தமிழகத்தில் கொரோனா பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் உள்ளது. ‘ஒமைக்ரான்’ வைரசும் அசசுறுத்துகிறது. இந்தநிலையில் கொரோனா தொற்று பரவலை தடுப்பதற்கு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என்று மாநில அரசுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டது. கட்டுப்பாடுகளை விதிக்காவிட்டால் கொரோனா பரவல் மேலும் அதிகரிக்கக்கூடும் என்று மருத்துவ வல்லுனர்களும் அறிவுறுத்தினர்.

இதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழகத்தில் கடந்த 6-ந்தேதி முதல் இரவு 10 மணியில் இருந்து காலை 5 மணி வரை இரவு நேர ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. ஞாயிற்றுக்கிழமையான இன்று முழு ஊரடங்கு அமல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

சாலைகள் வெறிச்சோடின - இதன்படி இன்று தமிழகத்தில் முழு ஊரடங்கு அமலுக்கு வந்தது. முழு ஊரடங்கு காரணமாக இன்று காய்கறி, மளிகை, இறைச்சி கடைகள், ஜவுளி, நகை கடைகள், வணிக நிறுவனங்கள், திரையரங்குகள் திறக்கப்படவில்லை.‘டாஸ்மாக்’ மதுபான கடைகளுக்கும் விடுமுறை விடப்பட்டுள்ளது. பொதுப்போக்குவரத்து மற்றும் மெட்ரோ ரெயில் சேவை இயங்காது. ஆனால் மின்சார ரெயில் மட்டும் குறைந்த எண்ணிக்கையில் இயங்குகின்றன ஓட்டல்களில் பார்சல் சேவை மட்டும் வழங்கப்படுகின்றன.

இரயில், விமான பயணிகள் சொந்த மற்றும் வாடகை வாகனங்களில் செல்ல அனுமதி அளிக்கப்படுகிறது. ஆனால் போலீசாரின் வாகன சோதனையின்போது பயணச்சீட்டை காண்பிக்க வேண்டும்.

கொரோனா ஊரடங்கு கட்டுப்பாடுகளை கண்காணிக்கும் பணியில் தமிழகம் முழுவதும் 60 ஆயிரம் போலீசார் ஈடுபட்டுள்ளனர். சென்னையில் 10 ஆயிரம் போலீசார் ஈடுபட்டுள்ளனர். மேம்பாலங்கள் அடைக்கப்பட்டு, சிக்னல்கள் நிறுத்தப்பட்டுள்ளன. ஊரடங்கு காரணமாக வாகன போக்குவரத்து கணிசமாக குறைந்து விட்டது. சென்னை உள்பட தமிழகத்தின் முக்கிய நகரங்களில் உள்ள பிரதான சாலைகளும் ஆரவாரம் இன்றி வெறிச்சோடி காணப்படுகின்றன.

அவசிய தேவை இல்லாமல் வாகனங்களில் ஊர் சுற்றினால் வழக்குப்பதிவு செய்யப்பட்டு வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்று போலீசார் எச்சரித்துள்ளனர். எனவே தமிழக அரசின் கொரோனா கட்டுப்பாடுகளை கடைப்பிடித்து பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று போலீசார் சார்பில் வேண்டுகோளும் விடுக்கப்பட்டுள்ளது.

# இலங்கை – இந்திய கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன் பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

**இராமேஸ்வரம் மீனவர் சங்க தலைவர் ஜேசுராஜா**

ஜனவரி 05, 2022

இலங்கை- இந்திய நடுக்கடலில் இலங்கை கடற்படையின் பிரச்சினையின்றி இந்திய மீனவர்கள் மீன் பிடிக்க மத்திய, மாநில அரசுகள் இலங்கை அரசுடன் பேசி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் சார்பாக கோரிக்கை முன் வைப்பதாக இராமேஸ்வரம் மீனவர் சங்க தலைவர் ஜேசுராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையின் கைது நடவடிக்கைக்கு அஞ்சி கடந்த 13 நாட்களுக்கு பின்பு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களுக்கு போதிய மீன் வரத்து இல்லாத நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை (4) காலை மீண்டும் கரை திரும்பியுள்ளதாக இராமேஸ்வரம் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்விடயம் தொடர்பாக இராமேஸ்வரம் மீனவர் சங்க தலைவர் ஜேசுராஜா மேலும் தெரிவிக்கையில்,
இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் புதுக்கோட்டை இருந்து மீன்பிடிக்கச் சென்ற 68 தமிழக மீனவர்களையும் அவர்கள் சென்ற 10 படகுகளையும் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையினர் கைது செய்து இலங்கை சிறையில் தடுத்து வைத்துள்ளனர்.

இலங்கை சிறையில் உள்ள 68 தமிழக மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த 13 நாட்களாக தொடர்ந்து வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் கடந்த 30ம் திகதி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகள் மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை விடுதலை செய்ய துரித நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளனர்.



இதையடுத்து மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை கைவிட்டனர்.

இதையடுத்து நேற்று திங்கட்கிழமை (3) காலை சுமார் 400 க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீனவர்கள் மீன்பிடிக்க சென்றுள்ளனர்.

மீனவர்கள் தனுஷ்கோடி கச்சத்தீவுக்கும் இடையே மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது அப்பகுதியில் கடல் ரோந்து பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை மீன் பிடிக்க விடாமல் விரட்டியுள்ளனர்.

மேலும் நேற்று திங்கட்கிழமை (3) மாலை முதல் தொடர்ந்து கடலில் வீசி வரும் கடும் காற்று காரணமாக படகுகள் எல்லை தாண்டி சென்று விட்டால் இலங்கை கடற்படையினர் கைது செய்து விடுவார்கள் என்ற அச்சத்தில் மீனவர்கள் மீன் பிடிக்காமல் பாரிய நஷ்டத்துடன் கரை திரும்பினர்.

மீன் பிடிக்க சென்ற மீனவர்கள் மீன் வரத்து இல்லாமல் கரை திரும்பியதால் படகு ஒன்றுக்கு சுமார் 70 ஆயிரம் ரூபாய் முதல் 80 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நடுக்கடலில் இலங்கை கடற்படையின் பிரச்சினையின்றி மீனவர்கள் மீன் பிடிக்க மத்திய, மாநில அரசுகள் இலங்கை அரசுடன் பேசி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 56 தமிழக மீனவர்களை விடுவிக்கக்கோரி மு.க.ஸ்டாலின் கடிதம்

ஜனவரி 07, 2022

இலங்கை சிறையில் உள்ள 56 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய அரசுக்கு மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதி உள்ளார்.

இலங்கை சிறையில் இருந்து 12 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்த மத்திய அரசுக்கு நன்றி எனவும் 56 மீனவர்களை பாதுகாப்பாக இந்தியாவுக்கு அழைத்து வர தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டும் என முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

மேலும் 75 மீன்பிடி படகுகளை மீட்கவும் நடவடிக்கை எடுக்க வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதி உள்ளார்.






# தமிழ்நாட்டில் 06.01.2022 இரவு நேர ஊரடங்கு ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழகத்தில் முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும்

05.01.2022

06-01-2022 முதல் தமிழகத்தில் இரவுநேர ஊரடங்கு அமலுக்கு வருவதாக தமிழக அரசு தெரிவித்திருக்கிறது.

தமிழகத்தில் நாளுக்கு நாள் கொரோனா பரவல் அதி கரித்து வருகிறது. நேற்று ஒரு நாள் பாதிப்பு ஆயிரம் உயர்ந்து, புதிதாக 2,731 பேருக்கு தொற்று உறுதியானது. குறிப்பாக தலைநகர் சென்னையில் பாதிப்பு வேகமாக அதி கரித்துவருகிறது. சென்னையில் நேற்று முன்தினம் 876 பேர் பாதிக்கப்பட்ட நிலையில், நேற்று இது 1,489-ஆக அதிகரித்துள்ளது. ஒமைக்ரான் பரவலும் அதிகரித்து வருகிறது.

கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் இன்று ஆலோசனையில் ஈடுபட்டார். இந்தக் கூட்டத்தில் மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், மருத்துவத்துறைச் செயலாளர் ராதா கிருஷ்ணன், மருத்துவ நிபுணர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.

இது தொடர்பாக சிறிது நேரத்துக்கு முன்பு செய்தியாளர் களை சந்தித்த மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், "தமிழகத்தில் கொரோனா பரவல் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அதனால், இனி ஞாயிற்றுக் கிழமை களில் முழு ஊரடங்கு அமல்படுத்தப்படவிருக்கிறது. அதன் காரணமாக ஞாயிற்றுக்கிழமைதோறும் நடைபெற்று வரும் தடுப்பூசி முகாம் இனி சனிக்கிழமைகளில் நடை பெறும்" என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், 06-01-2022 முதல் தமிழகத் தில் இரவு நேர ஊரடங்கு அமலுக்கு வருவதாக தமிழக அரசு தெரி வித்திருக்கிறது. இது தொடர்பாக அரசு வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "மாநிலம் முழுவதும் 6.01.2022 முதல் வார நாள்களில் இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை ஊரடங்கு அமல்படுத்தப்படும்.

இந்த நேரத்தில் அனைத்து வணிக வளாகங்கள், வணிக நிறுவனங்கள், கடைகள், உணவகங்கள் போன்றவை செயல்பட அனுமதி இல்லை. எனினும் இந்த இரவு நேர ஊரடங்கு கட்டுப்பாட்டின் போது, பின்வரும் அத்தியாவசிய செயல்பாடுகள் மட்டும் அனுமதிக்கப்படும்.

* மாநிலத்திற்குள் பொது மற்றும் தனியார் பேருந்து போக்குவரத்து சேவைகள்.

* மாநிலங்களுக்கு இடையேயான பொது / தனியார் பேருந்து சேவைகள்.

* அத்தியாவசிய பணிகளான பால் வினியோகம், தினசரி பத்திரிகை வினியோகம், மருத்துவமனைகள், மருத்துவ பரிசோதனை கூடங்கள், மருந்தகங்கள், ஆம்புலன்ஸ் மற்றும் அமரர் ஊர்தி சேவைகள் போன்ற மருத்து வத்துறை சார்ந்த பணிகள், ஏடிஎம் மையங்கள், சரக்கு வாகனங்கள் மற்றும் எரிபொருள் வாகனங்கள் இரவு நேரத்திலும் அனுமதிக்கப்படும்.

*பெட்ரோல் மற்றும் டீசல் பங்குகள் 24 மணி நேரமும் தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப்படும்.

* உற்பத்தி தொழிற்சாலைகள், தகவல் தொழில்நுட்ப




சேவை உள்ளிட்ட நிறுவனங்கள் செயல்படலாம். பணிக் குச் செல்லும் பணியாளர்கள் தொடர்புடைய நிறுவனங் களால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டையை வைத் திருக்க வேண்டும். இருப்பினும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் பணியாளர்கள் வீட்டிலிருந்து பணிபுரிய அறிவுறுத்துமாறு தொடர்புடைய நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வரும் 09-01-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழகத் தில் முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும். இருப் பினும், அத்தியாவசியப் பணிகளான மருத்துவ பணிகள், மருந்தகங்கள், பால் விநியோகம், ஏடிஎம் மையங்கள், சரக்கு வாகனப் போக்குவரத்து மற்றும் பெட்ரோல், டீசல் பங்குகள் இயங்க அனுமதிக்கப்படும்.

* பொதுப் போக்குவரத்து மற்றும் மெட்ரோ ரயில் இயங்காது.

* 09-01-2022 (ஞாயிறு) முழு ஊரடங்கின் போது, உணவகங்களில் பார்சல் சேவை மட்டும் காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை அனுமதிக்கப்படும்.

* 09-01-2022 மற்றும் வார நாள்களில் இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை விமானம், ரயில், மற்றும் பேருந்துகளில் பயணிக்க மக்கள் தங்கள் சொந்த வாகனங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

* மழலையர் காப்பகங்கள் தவிர மழலையர் விளையாட்டு பள்ளிகள் நர்சரி பள்ளிகள் செயல்பட அனுமதி இல்லை.

* அனைத்து பள்ளிகளிலும் ஒன்றாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை நேரடி வகுப்புகள் நடத்த தடை விதிக்கப்படுகிறது.

* பொதுத் தேர்வுக்கு செல்லும் மாணவர்களின் எதிர்கால நலன் மற்றும் தடுப்பூசி செலுத்திக் கொள்ள ஏதுவாக 10, 11 மற்றும் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கு நேரடி வகுப்புகள் தொடர்ந்து நடைபெறும்.

* அரசு, தனியார், மருத்துவ மற்றும் துணை மருத்துவ கல்லூரிகள் தவிர அனைத்து கல்லூரிகள், தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் தேர்வு எழுதும் பொருட்டு ஜனவரி 20-ம் தேதி வரை விடுப்பு அளிக் கப்படுகிறது.

* பயிற்சி நிலையங்களுக்கு தடை விதிக்கப்படுகிறது.

* பொருட்காட்சி மற்றும் புத்தகக் கண்காட்சிகள் ஒத்தி வைக்கப்படும்

* பொது மற்றும் புறநகர் ரயில்களில் உள்ள இருக்கை களில் 50 சதவிகிதம் மட்டும் பயணிகள் அமர்ந்து பய ணிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

* மெட்ரோ ரயிலில் 50 சதவிகித இருக்கைகளில் மட்டும் பயணிகள் அமர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

* அனைத்து அரசு மற்றும் தனியார் அமைப்புகளால் நடத் தப்படும் பொங்கல் மற்றும் கலை விழாக்கள் ஒத்திவைக் கப்படுகின்றன.

* பொழுதுபோக்கு, கேளிக்கை பூங்காக்கள் செயல்படத் தடை விதிக்கப்படுகிறது.

* அனைத்து கடற்கரைகளிலும் பொதுமக்கள் நடைபயிற்சி மேற்கொள்ள மட்டும் அனுமதி வழங்கப்படும்.

* அனைத்து வழிபாட்டு தலங்களிலும் வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு ஆகிய நாள்களில் பொதுமக்களுக்கு அனுமதியில்லை.

* சமூக கலாசார மற்றும் அரசியல் கூட்டங்கள் போன்ற பொது மக்கள் கூடும் நிகழ்வுகளுக்கு தற்போது நடை முறையில் உள்ள தடை தொடரும்.

* மீன் மற்றும் காய்கறி கடைகளில், குறிப்பாக வார இறுதி நாள்களில் பொதுமக்கள் கூட்டம் கூடுவதை தவிர்க்க ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் மீன் மற்றும் காய்கறி சந்தை அமைக்க சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

* தற்போது செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த பேருந்து நிலையங்களில் இருந்து செல்லும் பேருந்துகளை மண் டலம் வாரியாக பிரித்து வெவ்வேறு இடங்களிலிருந்து பேருந்துகளை இயக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள போக்குவரத்து துறை மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

* கடைகள், வணிக நிறுவனங்கள், தனியார் நிறு வனங்கள், வணிக வளாகங்கள், திரையரங்குகள் அனைத்து சேவை துறைகள் போன்ற பொதுமக்கள் செல் லும் இடங்களில் பணிபுரியும் பணியாளர்கள் உரிமை யாளர்கள் அனைவரும் இரண்டு தடுப்பூசி கட்டாயம் செலுத்தியிருக்க வேண்டும்.

*அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் 09.01.2022-க்குள் கட்டாயம் தடுப்பூசி செலுத்தி அதற்கான சான்றிதழை தொடர்பு அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அங்கு செல்லும்போது அலுவலக அடையாள அட்டை மற்றும் தடுப்பூசி சான்றிதழை உடன் வைத்துக் கொள்ள வேண் டும்.

# சிங்கள மக்களை பாதுகாப்பது எனது முக்கிய கடமை, அவமானங்களை தாங்கும் மனோபலம் எனக்குள்ளது

**சிங்கள ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச**

ஜனவரி 02, 2022

தன்னை அவமதிப்பவர்கள் தான் நாட்டிற்கு ஆற்றிய சேவையில் சிறிதளவை கூட செய்யவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நான் நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்ற அன்றைய தினம், நான் பெரும்பான்மை சிங்களவர்களின் ஜனா திபதி என்பதை அறிவித்தேன் என அவர் தெரிவித்துள் ளார்.

நாட்டின் முதற்பிரஜையாக தன்னை தெரிவு செய்வதற்காக பல தியாகங்களை செய்த சிங்களவர்களின் பாதுகாப்பும் அவர்களது பாரம்பரியத்தை பாதுகாப்பதும் எனது தலை யாய பொறுப்பு என நான் உறுதியாக நம்புகின்றேன் என வும் அவர் தெரிவித்துள்ளார்.

நான் தொடர்ச்சியாக அந்த நோக்கத்திற்காக என்னை அர்ப்பணித்துள்ளேன் என்பதை நான் விசேடமாக தெரி விக்கவேண்டும், நான் பெற்றுக்கொண்ட பௌத்த போத னைகளும்உத்வேகமும் இந்த நாட் டில் ஏனைய மக்கள் சந்தேகமின்றி அச்சமின்றி வாழக்கூடிய சூழ்நிலை யை உருவாக்குவதற்கு எனக்கு உதவின எனவும் கோத்தபாய ராஜ பக்ச தெரிவித்துள்ளார்.

இரண்டு வருடம் உலகை ஆக்கிர மித்த பெருந்தொற்றை எங்களால் முற்றாக கட்டுப்படுத்த முடிந்தது என தெரிவித்துள்ள ஜனாதிபதி பெருந் தொற்று நாட்டில் ஏற் படுத்திய பொரு ளாதார சமூக நெருக்கடிகள் காரண மாக சிலர் என்னை அவமதித் தாலும் இது போன்ற அவமானங் களை சமமனதுடன் தாங்கும் வலிமை எனக்குள்ளது எனவும் தெரி வித்துள்ளார்.

என்னை அவமதிப்பவர்கள் எனது வாழ்க் கையில் நாட்டிற்கு நான் செய்த சேவையில் சிறிதை கூட செய்யவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# உலக செய்திகள்

## தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தமிழரின் அடிப்படை உரிமையான சுயநிர்ணய உரிமையை மீறுவதாக அமைய முடியாது

அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

ஜனவரி 08, 2022

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தமிழரின் அடிப்படை உரிமையான சுயநிர்ணய உரிமையை மீறுவதாக அமைய முடியாது என அனைத்துலக ஈழத் தமிழர் மக்களவை தெரிவித்துள்ளது.

அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஒற்றையாட்சி முறையில் தமிழர்களுக்கு பாதுகாப்பில்லை: இலங்கையின் ஒற்றையாட்சி குடியரசு அரசியலமைப்பு, முதலில் 1972 இல் உருவாக்கப்பட்டு 1978 இல் அனைத்து திருத்தங்களுடனும் அமுல்படுத்துப்பட்டது. இந்த அரசியல் அமைப்பானது தமிழ் மக்களின் பங்களிப்பு இல்லாமலேயே இயற்றப்பட்டது. 1947 இல் கொண்டுவரப்பட்ட சோல்பரி அரசியலமைப்பு ஈழத் தமிழர்களின் ஆணையைக் கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இது குறைந்தபட்சப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு விதியைத் (பிரிவு 29) தமிழர்களுக்கு வழங்கியது. மேலும் இந்த அரசியலமைப்பால் வழங்கப்படும் பாதுகாப்புக்கள் மீறப்பட்டால், ஐக்கியராச்சியத்தில் உள்ள கோமறை மன்றத்தில் (Privy Council) மேன் முறையிடும் உரித்தை தமிழர்களுக்கு வழங்கியிருந்தது. இலங்கைக் குடியரசின் 1972ம் ஆண்டு அரசியலமைப்பு பிரித்தானிய முடி அரசுடனான உறவுகளைத் துண்டித்ததோடு இங்கிலாந்தில் உள்ள கோமறை மன்றத்தில் (Privy Council) தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்தவொரு அத்துமீறல் களிற்கும் மேல்முறையீடு செய்யும் தமிழ் மக்களின் உரிமையைப் பறித்தெடுத்தது.

இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்புச் சட்டமானது இலங்கைத் தீவில் தமிழ்த் தேசியம் இருப்பதை முறையாக அங்கீகரிக்கத் தவறிவிட்டது. சிங்கள மொழியையும் பௌத்த மதத்தையும் அரசு முதன்மைப்படுத்தியதனூடாக, சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கான அடிப்படையை அரசியலமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தியது. பல் தேசிய இனங்களின் உண்மையான சமத்துவத்தை உறுதி செய்யாத அரசியலமைப்பாகும். இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் இலங்கைத் தீவில் தமிழ்த் தேசியத்தின் இருப்பை சிதைக்கும் நோக்கிலான கொள்கையை முன்னெடுத்து வருகின்றன. தமிழர்களைத் துன்புறுத்துதல், பாகுபாடு காட்டுதல், அரச வன்முறை, அரசால் கட்டவிழ்த்து விடப்படும் குழு வன்முறைகள், இனப்படுகொலைகள், நில அபகரிப்புகள், மறுதலிக்கப்பட்டு வரும் தமிழர் உரிமைகள் என்பன திட்டமிட்டு தொடர்ந்து இடம் பெறுகின்றது. எனவே, தமிழ்த் தேசியத்தை அங்கீகரிக்காத எந்த ஒரு தீர்வுத் திட்டத்தாலும் இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்று வரும் தமிழ் இன அழிப்பை தடுத்து நிறுத்த முடியாது.

13வது திருத்தச் சட்டம்: இந்திய-இலங்கை ஒப்பந் தத்தில் இருந்து பெறப்பட்ட இலங்கை அரசியலமைப் பின் 13வது திருத்தம் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங் குவதற்கான தொடக்கப் புள்ளியாகக் கூடக் கருத முடியாது என்பதே நிதர்சனமான உண்மை. 13வது திருத்தம் ஈழத் தமிழர் தேசத்தின் அத்தியாவசிய கூறுகளை சிதைக்கும் மாகாண சபை முறைமையை வழங்குவதோடு இந்த சட்டமூலம் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகத்தை நிரந்தரமாகப் பிரிப்பதோடு அர்த்தமுள்ள சுயாட்சி முறையை முற்றாக இல்லாதொழிக்கும் நோக்கம் கொண்டது. சிக்கல் நிறைந்த பரிமாணங்களைக் கொண்ட தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கு எந்த வகையிலும் செம்மையான தீர்வை வழங்காத 13வது சட்டத் திருத்தம் நிரந்தர அரசியல் தீர்வாக என்றுமே அமையாது. சிங்கள பௌத்த பேரினவாதக் கொள்கைகள் தமிழ்த் தேசத்தை அடிபணியச் செய்ய அனுமதிக்கும் அரசியலமைப்பு அம்சங்கள் இன்னமும் இலங்கையின் அரசியலமைப்பில் வேரூன்றியுள்ளன.

பாரம்பரியமாக நாம் வாழ்ந்து வரும் எமது தாய் மண், தனித்துவச் சிறப்புடைய எமது கலாச்சாரம், மகத்துவமானதும் பழமையானதுமான எமது தாய்மொழி, தமிழருக்கே உரித்தான வாழ்க்கை முறை, 2600 வருடங்களுக்கு மேற்பட்ட எமது வரலாறு, இந்தப் பண்புகளால் ஒரு தனித்துவமான தேசிய இனமாக நாம் அமையப் பெற்றிருக்கிறோம். ஒரு அர்த்தமுள்ள தீர்வு என்பது தமிழ் மக்களின் அடிப்படை மற்றும் பிரிக்க முடியாத சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கப்பதாக இருக்கவேண்டும். பொருளாதார விவகாரங்கள், நிதி விவகாரங்கள், நீதித்துறை விவகாரங்கள், மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு விவகாரங்கள் உட்பட, தமிழரின் பாரம்பரிய தாயகத்தில் உள்ள அனைத்து நிர்வாக கட்டமைப்புகள் மற்றும் பணியாளர்கள் மீதான கட்டுப்பாட்டை நாமே உறுதிசெய்வதோடு, உள்கட்டமைப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகளின் வளர்ச்சி. தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகத்தில் நிலம் மற்றும் கடல் அனைத்துக்கும் அதிகாரம் இருக்க வேண்டும்.

தமிழ்த் தேசியத்தை அடிப்படையாக ஏற்று, தமிழ் மக்களிடன் ஆணை பெற்று, தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் அரசியல்வாதிகள், 13 ஒரு ஆரம்பப்புள்ளியாகக்கூட இல்லை என்பதை உணர்ந்து, தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய அரசியல் தீர்வை அனைத்துலகத்திடம் முன் வைக்கவேண்டும்.

அனைத்து அதிகாரங்களும் பறிக்கப்பட்டு வெறுமையாக உள்ள 13ல் மாகாணசபைக்கு கூட எந்த அதிகாரங்களும் இல்லை. அரைகுறையாக கொடுக்கப்பட்ட காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைக் கூட நடை முறைப்படுத்தப்படாத 13ஐப் பெற்று தமிழர்களால் எந்த அரசியல் தீர்வுகளையும் பெறமுடியாது. பறிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அப்பால் மிகுதியாக உள்ள அதிகாரங்கள் மகாகாணசபையில் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் கொடுக்காமல் ஆளுநரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்டுக் கூறவேண்டு மானால், ஒரு நகரசபைக்கு உள்ள சுயாதீன அதிகாரங்கள் கூட மாகாணசபைகளுக்கு இல்லை என்பதே உண்மை.

சர்வதேச சமூகத்தின் பொறுப்பு: தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு அர்த்தமுள்ள தீர்வைக் காண்பதில் சர்வதேச சமூகம் தோல்வியடைந்தால் தமிழ் மக்கள் நிரந்தரமாக சகல உரிமைகளையும் இழக்கவைக்கும் திசையில் இலங்கை அரசாங்கத்தைச் செல்ல ஊக்குவிக்கும். இதன் மூலம் உலகளாவிய தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் ஆகிய துறைகளில் அசாதாரண நிலையை இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஏற்படுத்த வழி வகுக்கும். இந்தோ-பசுபிக் பிராந்திய அரசியலில் இன்றும் தமிழர்கள் ஒரு முக்கிய புள்ளியாக இருப்பதால் சர்வதேசம் இனியாவது நேர்மையாக தமிழருக்கான நிரந்தர அரசியற் தீர்வை ஈட்டித்தர இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும். சீனாவின் ஒரு பட்டி ஒரு வீதி முன்முயற்சி (Belt and Road Initiative) ஐரோப்பிய ஒன்றியத்தின் உலகளாவிய நுழைவாயில் (Global Gateway) போன்ற சர்வதேசத்தின் பொருளாதார முன்னெடுப்புகளில் ஈழத்தமிழரின் பங்கு தவிர்க்க முடியாதது.

அர்த்தமுள்ள நிரந்தரத் தீர்வு:
எமது மக்களுக்கு எதிரான பேரினவாத ஒடுக்குமுறை இனவழிப்பாக உருவெடுத்த போது சிங்கள மற்றும் தமிழ்த் தேசிய இனங்கள் மத்தியில் முரண்பாடு முற்றி விரிசல் உண்டானபோது, ஒற்றையாட்சி முறையின் கீழ் ஐக்கியமாக வாழ முடியாது என்ற நிலைக்குத் தமிழர்கள் தள்ளப்பட்ட போது, சுயநிர்ணய உரிமை அடிப்படையில் எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கும் வகையில் தமிழர்கள் பிரிந்து செல்லும் கட்டாய சூழலுக்குத் தள்ளப்பட்டோம். தமிழ் மக்கள் கடந்த ஏழு தசாப்தங்களாகத் தொடர்ச்சியாக மாறி மாறி ஆட்சியமைத்த சிங்கள அரசுகளால் மனிதாபிமானமற்ற மகாபாதக அடக்குமுறைகளுக்கு உள்ளாகியுள்ளனர். ஆகவே, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை அங்கீகரித்து இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தும் அர்த்தமுள்ள தீர்வை சர்வதேச சமூகம் வழங்க முடியாவிட்டால், தமிழ்த் தேசம் தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். ஏற்கனவே 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது 1976 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு சுதந்திரமான இறையாண்மை கொண்ட மதச்சார்பற்ற அரசை உருவாக்குவதற்கான அமோகமான மக்களாணை சனநாயக ரீதியாக முன்கூட்டியே வழங்கப்

## பாக்கிஸ்தானின் மேற்கு பகுதியில் வாகனங்கள் பனிப்பொழிவில் சிக்குண்டதால் 21 பேர் உயிரிழப்பு

ஜனவரி 08. 2022

பாக்கிஸ்தானின் மேற்கு பகுதியில் வாகன்ஙகள் பனிப்பொழிவில் சிக்குண்டதால் 21 பேர் உயிரிழந்துள்ளனர். பனிப்பொழிவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் சிக்குண்டுள்ளன என சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.
முரி நகரில் வழமைக்கு மாறாக பனிப்பொழிவு காணப்பட்டதை தொடர்ந்து அதனை பார்ப்பதற்காக ஆயிரத்திற்கும் மேற்பட்ட கார்களில் அந்த பகுதிக்கு சென்றவர்களே இந்த அனர்த்தத்தில் சிக்குண்டுள்ளனர். ஆகக்குறைந்தது ஆறு பேராவது காருக்குள் சிக்குண்டு உயிரிழந்துள்ளதை உறுதி செய்ய முடிகின்றது என தகவல்கள் தெரிவிக்கின்றன- புகையை சுவாசித்தன் காரணமாக ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாக இந்த உயிரிழப்பு ஏற்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த பகுதியை பேரழிவு பிரதேசமாக அறிவித்துள்ள அதிகாரிகள் பொதுமக்களை அங்கிருந்து வெளியேறுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்- இராணுவத்தினர் மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர். பொதுமக்கள் மோசமான நிலையை எதிர்கொண்டுள்ளனர் என நகரில் சிக்குண்டுள்ள உஸ்மான் அபாசி என்ற சுற்றுலாப்பயணி தெரிவித்துள்ளார். அந்த நகரில் தொடர்ந்தும் பனிபெய்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப்பயணிகள் மாத்திரமல்ல உள்ளூர் மக்களும் 



மோசமான நிலையை எதிர்கொண்டுள்ளனர் அவர்கள் சமையல் எரிவாயு மற்றும் தண்ணீருக்கு தட்டுப்பாட்டை எதிர்கொள்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 15 -20 வருடங்களில் பெருமளவு பக்கம் அந்த பகுதிக்கு சென்றதால் இந்த நெருக்கடியான சூழ்நிலை உருவானது என அந்த பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

சுற்றுலாப்பகுதிகள் உயிரிழந்துள்ள துயரமான சம்பவம் குறித்து பிரதமர் இம்ரான்கான் அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா




**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

**மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....**

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

## ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

## Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

---

Allstate.
You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி

செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்



**Raji Linghan**
Ajax Agency
15 Westney Road, N
**(416) 817 5060**
rlinghan@allstate.ca

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316

---







## Alan Maniam
Director

## 647 299 2450

235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3

boroscanadianpaper@gmail.com

# விடுதலைப் போராட்டத்தில் பங்களித்த மக்கள் அனைவரும் மாமனிதர்களே

குறிப்பு: 10.06.1991 அன்று, சாவகச்சேரியில் நடை பெற்ற முத்தமிழ் விழா ஐந்தாம் நாள் நிகழ்ச்சியில் பங்குபற்றிய தலைவர் நிகழ்த்திய உரையை இங்கு தருகிறோம்.

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்,
10.06.1991

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே,

நான், இன்று இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேசிய நிகழ்வில் நேரடியாகப் பங்குகொள்வதையிட்டு பெரு மகிழ்ச் சியடைகிறேன். தமிழீழ மண்ணின் விடிவிற்காக, தமிழீழ மக்களின் விமோசனத்திற்காக, தமிழீழ தேசிய பண்பாட்டின் மறுமலர்ச்சிக்காக உழைத்தோரும், உழைத்துவருபவர்களு மான உன்னத மனிதர்களை, உண்மையான மண்ணின் மைந்தர்களை மதிப்பளித்துக் கௌரவிப்பதற்கு எனக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெருமைப்படுகிறேன்.

நற்பணி ஆற்றும் நல்ல மனிதர்களுக்கு மதிப்பளிப்பதும், கௌரவம் செலுத்துவதும் தமிழனின் பண்பாடு, இந்தச் சீரிய மரபுக்கு ஏற்ப இந்தச் சிறப்பு வைபவத்தை ஒழுங்கு செய்த எமது இயக்கத்தின் கலை பண்பாட்டுக் கழகத்தினருக்கு எனது பாராட் டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழீழ தேசத்தின் அதியுயர்ந்த கௌரவமாக தேசிய விருது வழங்கி இங்கு கௌரவிக்கப்படுபவர்களை நாம் மாமனிதர்கள் என மதிப்பளிக்கிறோம். ஏனென்றால் இவர்கள் அனைவரும் அற்புதமான இலட்சியவாதிகள். இனப்பற்றும் நாட்டுப் பற்று முடைய தேசாபிமானிகள், சுயநலவாழ்வின் குறுகிய வட்டத் திற்கு அப்பால் நின்று, சமூக நலத்திற்காக, தேசிய நலத்திற்காக, மக்கள் நலத்திற்காக சேவை ஆற்றிய அபூர்வ மனிதர்கள். இவர்களது அறிவாற்றல், படைப்பாற்றல், செயலாற்றல் அனைத் துமே தமிழீழ சமூகத்தின் மேன்மைக்கு உரமூட்டுவதாக அமைந்திருக்கிறது. இவர்களது பணி மேலும் தொடர வேண்டும். இவர்களது தொண்டு மேலும் சிறக்கவேண்டும். இதனால்தான் இவர்களுக்குப் பெரும் மதிப்பளித்து, தேசிய விருது வழங்கி கௌரவிக்கத் தீர்மானித்தோம்.

இந்தக் கௌரவப் பரிசளிப்பை “தேசிய விருது“ என நாம் அழைப்பதில் அர்த்தமும் முக்கியத்துவமும் இருக்கத்தான் செய்கிறது.

தமிழீழ மக்களாகிய நாம் ஒரு தேசிய கட்டமைப்பைக் கொண்ட வர்கள். வரலாற்று ரீதியாக நாம் ஒரு தேசியமாகவே வாழ்ந்து வந்தோம்; தேசியமாகவே வாழ்ந்து வருகிறோம்; தேசிய மாகவே வாழப்போகிறோம்.

எமது தேசியத்தை எதிரியானவன் ஏற்றுக்கொண்டாலும் சரி, ஏற்றுக்கொளள் மறுத்தாலும் சரி எமது தேசய தனித்துவமானது என்றும் அழிக்கமுடியாத, எதார்த்தமான அரசியல் உண்மை என்பதை நாம் உலகிற்கு சதா பிரகடனம் செய்துகொண்டே இருப்போம். தேசிய விருது என நாம் பட்டமளிப்பதும் இப் படியான ஒரு பிரகடனமே.

பிரத்தியேக தேசிய தொண்டு ஆற்றிய சிலருக்கு இன்று தேசிய விருது வழங்கிக் கௌரவிக்கிறோம். ஆண்டுதோறும், முத் தமிழ் விழாவில் முக்கிய நிகழ்வாக இந்த தேசிய பரிசளிப்பு வைபவம் இடம் பெறும். ஆண்டுதோறும் மாமனிதர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படுவார்கள். இந்தத் தேசிய விருது அளிப்பிற்கு ஒரு சில தேசபக்தர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட் டாலும், ஒட்டுமொத்தத்தில், இந்தப் பரிசளிப்பு எமது மக்கள் அனைவருக்கும் வழங்கப்படும் கௌரவமாகவே கருதப்பட வேண்டும்.

எமது மக்கள் போற்றப்பட வேண்டியவர்கள், கௌரவிக்கப்பட வேண்டியவர்கள், தேசிய போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாராரணமானதல்ல. அவர்களது பங்களிப்பு அளப் பரியது என்று தான் சொல்வேன். இலைமறை காயாக இருந்த விடுதலைப் போராட்டத்திற்கு தோள் கொடுத்துவரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் மன வுறுதிபடைத்த மாமனிதர்கள் என்று தான் அழைக்க வேண் டும்.

நீண்ட காலமாகவே போராட்டத்தின் பெரும் பழுவைப் பொது மக்களே சுமந்து வருகிறார்கள். சாவும், அழிவும், பசியும், பட்டினியும், இரத்தமும், கண்ணீருமாக எமது மக்கள் எதிர் கொண்ட தாங்கொணாத் துன்பத்தைச் சொற்களில் சித்திரிக்க முடியாது.

உலகில், எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்கு முறையின் நெருப்பில் குளிப்பது பொதுசனங்களே. ஏனென்றால் அடக்குமறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தை விடப் பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைக்கவேண்டும் என்பதில்தான் அதிக அக்கறை காட்டு கிறார்கள். ஆனால் இந்த முயற்சிகள் ஒருபொழுதும் வெற் றியளிப்பதில்லை.

மக்களின் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்து விட முடியாது. உலக வரலாறு பகரும் உண்மை இது. ஏனென் றால், விடுதலை உணர்வே மனித ஆன்மாவின் சாரமாக, உயிர் மூச்சாக இயங்குகிறது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே.

சிங்ளப் பேரினவாத அடக்குமுறையானது எமது மக்களுக்குச் சாவையும் அழிவையும் தாங்கொணாத் துயரையும் கொடுத்த போதும் என்றுமில்லாதவகையில் தேசியப் பற்றுணர்வையும், சுதந்திர தாகத்தையும் தூண்டிவிட்டிருக்கிறது. தமிழரின் தேசிய ஆன்மாவை வழித்தெழச் செய்திருக்கின்றது.

இன்று நாம் கொண்டாடிவரும் முத்தமிழ் விழா எமது மக்களது தேசிய எழுச்சிகளின் அபாரமான வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். போராட்டச் சூழலில், எல்லைகளில் எதிரியின் போர் முரசு கேட்கும் யுத்தகாலத்தில் சமுத்திரம் போல் திரண்டு வந்து பல்லாயிரம் மக்கள் முத்தமிழ் விழாவில் பங்கு கொள்கிறார்கள் என்றால் அது எமது மக்களின் திடசங்கற்பத்தை, உறுதிப் பாட்டை, சுதந்திர அறைகூவலைத் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இந்தச் சுதந்திர அறைகூவல் எமது எதிரியின் காதுகளுக்கு எட்டாமல் இல்லை. சீற்றம் கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக் குரலை சிங்கள தேசமும், சர்வ தேச சமூகமும், அசட்டை செய்யமுடியாது.

இலட்சியத்தால் ஒன்றுபட்டு உறுதி பூண்ட மக்களே வர லாற்றைப் படைப்பார்கள்.

இந்த வரலாற்றின் படைப்பாக, எமதுதேசய மண், ஒரு சுதந்திர பூமியாக பறிப்பெடுக்கும் என்பது திண்ணம்.

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”

வே. பிரபாகரன்
தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகள்.

## முதுபெரும் தளபதி கேணல் கிட்டு அவர்களின் நினைவாக தலைவர் அவர்கள் விடுத்த இரங்கல் செய்தி






மனதின் ஆழத்து உள்ளுணர்வுகளை வார்த்தைகளில் சித்தரிப்பது கடினம்; அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஓர் உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விபரிக்க முடியாது. எனது அருமைத்தம்பி கிட்டுவின் இழப்பும் அப் படித்தான். அவனது மறைவு எனது ஆன்மாவைப் பிழிந்த ஒரு சோக நிகழ்வு; அதனைச் சொற்களால் வார்த்துவிட முடியாது.

நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன், தம்பியாக, தளபதி யாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப் பற் றுணர்வில், ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்து கொண்ட அனுபவத்தில், ஒருவரை ஒருவர் ஆழமாக இனம் கண்ட புரிந்துணர்வில் வேரூன்றி வளர்ந்த நேயம் அது.

அவனுள் ஒரு அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்தி லிருந்தே கண்டுகொண்டேன். அது அவனது ஆழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடம் இருந்தன. அதனால் அவன் ஒரு அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான்; போராடினான்; அனைத்து மக்களது இத யங்களையும் கவர்ந்தான. போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும், எங்கும் எல்லாவற் றிலும், எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது.

கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட, ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு.

வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே வழித்துக் கொண்டது.

**கிட்டு, நீ சாகவில்லை**
**ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்!**



TAX ANALYST
ACCOUNTING | BOOKKEEPING | & MORE
Affordable and Reliable Services
Experienced Accountants
Presonal & Corporate Tax
Tax Planning / Audit Appeal
HST/GST/WSIB
Bookkeeping & Payroll
UBER/LYFT Tax Filling
CRB/CERB HELP
OFFICE
416-898-8879
CALL FOR APPOINTMENT
416-838-2826
105Consumers Drive.
Whitby ON L1N 1C4
115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6
www.taxanalyst.ca
taxmatters@kannantax.com




சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com




HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
Furnance, Air Conditioner, Hot Water Tank
Tankless Water Heater, HRV, Fireplace, Attic Insulation,
Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer
up to $5000 REBATE
0 Down, Rental
Rent - to - Own
10 Years Warranty
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
geansam@yahoo.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000




PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
2016 READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268




# இந்திய - இலங்கை ஒப்பந்தம்
# விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு

அரசியல் பிரிவு தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நிபந்தனையற்ற முறையில் அங்கீகரிக்க மறுத்தது ஏன்? இந்த ஒப்பந்தத்தில் உள்ள அடிப்படையான குறைபாடுகள் என்ன? இந்த ஒப்பந்தம் தமிழ்த் தேசிய இனப்பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை அளிக்குமா? தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யுமா? தமிழ் மக்களின் தேசிய நலன்களைப் பேணுமா? தமிழீழ மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, நிம்மதியாக, பாதுகாப்புடன் வாழ வழிவகுக்குமா? இந்த கேள்விகளுக்கு விடை அளிப்பதுடன் இந்த ஒப்பந்தம் பற்றி எமது இயக்கத்தினன் நிலைப்பாட்டை தெளிவாக விளக்குவததான் இந்த அரசியல் ஆவணத்தின் நோக்கம்.

இந்த ஒப்பந்தத்தின் மகத்துவம் பற்றியும், அதன் வரலாற்று முக்கியத்துவம் பற்றியும் ராஜீவ்-ஜே.ஆரின் பிரமாதமான ராஜதந்திர சாதனை பற்றியும் இந்திய அரசு ஓயாது பறைசாற்றி வருகிறது. தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் பிரதான நோக்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட இவ்வொப்பந்தம், தனிநாட்டுக் கோரிக்கையை தவிர தமிழ் மக்களின் சகல அரசயில் உரிமைகளையும் மீளப் பெறுவதற்கு வாய்ப்பளிக்கிறது என இந்திய அரசு கூறி வருகிறது. இந்திய அரசின் இந்த விளக்கம் உண்மைக்கு மாறானது. குறுகிய பிரச்சார நோக்கத்தைக் கொண்டது.

இந்த ஒப்பந்தமானது. தமிழீழ மக்களின் அரசியல், தேசிய நலன்களைப் பேணுவதாக அமையவில்லை. தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சனையின் சிக்கலான பரிமாணங்களை எந்த வகையிலும் செம்மையாக அணுகவில்லை. அவற்றிற்கு பரிகாரம் காண முனையவில்லை. மாறாக, ஈழத் தமிழரின் தேசிய பிரச்னையை முற்றிலும் தவறான கண்ணோட்டத்தில், முற்றிலும் தவறான அடிப்படிடையில் இந்த ஒப்பந்தம் தொட்டு நிற்கிறது. இது பற்றி விரிவாகப் பார்ப்போம்.



## ஒரு தேசியப் பிரச்சனை

ஈழத் தமிழ் மக்களது பிரச்சனை ஒரு தேசியப் பிரச்சனை (NATIONAL QUESTION) ஒரு தேசிய இனத்தின் அடிப்படையான அரசியல் உரிமைப் பிரச்சனை. இந்த தேசிய சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலேயே நாம் எமது போராட்டத்தை நெறிப்படுத்தி முன்னெடுத்து வந்தோம்.

பாரம்பரியமாக நாம் வாழ்ந்து வரும் எமது தாய்மண், தனித்துவ சிறப்புடைய எமது கலாச்சாரம், மகத்துவமான எமது தாய்மொழி, எமக்கே உரித்தான வாழ்க்கைமுறை, மூவாயிரம் ஆண்டுகள் வரை நீண்டு செல்லும் எமது வரலாறு - இந்தப் பண்புகளால் ஒரு தனித்துவமான தேசிய இனமாக நாம் அமையப் பெற்றிருக்கின்றோம்.

ஒரு தேசிய இனம் என்ற ரீதியிலு் எமது அரசியல் தலைவிதியை நாமே நிர்ணயிருக்கும் உரிமை எமக்குண்டு. இந்த உரிமையை ஐ.நா சாசனமும், சர்வதேச சட்ட மரபுகளும் அங்கீகரிக்கின்றன. இந்த உரிமையின் அடிப்படையில் பிரிந்து சென்று தனியரசை அமைக்கும் சுதந்திரமும் எமக்குண்டு.

எமது மக்களுக்கு எதிரான பேரினவாத ஒடுக்குமுறை இனப்படுகொலையாக விஸ்வரூபம் பெற்றபோது சிங்கள தமிழ் தேசிய இனங்கள் மத்தியில் முரண்பாடு முற்றி முதன்மை பெற்றபோது, ஒற்றையாட்சியின்கீழ் ஐக்கியமாய் வாழ முடியாத நெருக்கடி நிலை எழுந்தபோது, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அரசியல் சுதந்திரப் போராட்டத்தை அதாவது தனியரசுப் போராட்டத்தை நாம் முன்னெடுத்தோம். எனவே, சாராம்சத்தில் எமது போராட்டமானது சுயநிர்ணய உரிமைப் போராட்டமாகும்.

எமது தேசிய சுயநிர்ணயத்தை, எமது அரசியல் சுதந்திரத்தை வென்றெடுக்கவே நாம் கடந்த பன்னிரண்டு ஆண்டு காலத்திற்கு மேலாக புரட்சிகர, ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம். இந்த ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த எமது இயக்கம் மகத்தான தியாகங்களை புரிந்திருக்கிறது. அற்புதமான அர்ப்பணிப்புகளை செய்திருக்கிறது. இந்த அரசியல் இலட்சியத்திற்காகவே ஆயிரத்திற்கும் மேற்பட்ட எமது போராளிகள் உயிர்த் தியாகம் செய்திருக்கிறார்கள். இந்த இலட்சியப் போருக்காக எமது மக்கள் அனுபவித்த துன்பத்தின் ஆழத்தை எழுத்தில் விவரிக்க முடியாது. சுதந்திரத் தமிழீழம் என்ற இந்த இலட்சியத்திற்காக இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட எமது மக்கள் செத்து மடிந்திருக்கிறார்கள்.

வீரமும், தியாகமும், சாவும், அழிவும், அலாதியான அர்ப்பணிப்புகளும் நிறைந்த ஒரு உன்னதமான தேசிய விடுதலைப் போராட்டத்தை, ஒரு தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை இந்திய - இலங்கை ஒப்பந்தம் கொச்சைப்படுத்துகிறது. கொலை செய்துவிடுகிறது. ஈழத் தமிழரின் பிரச்சனை ஒரு



தேசிய இனப் பிரச்சனை என்பதை முற்றாக நிராகரித்துவிட்டு, ஒரு சிறுபான்மை இனக்குழுவின் அரசியல் பிரச்சனை என்ற வகையில் இந்த ஒப்பந்தம் தவறாகச் சித்தரிக்கிறது.

இலங்கை மக்கள் ஒரு பல் இன சமுதாயமாக (PLURAL SOCIETY) வாழ்கிறார்கள். இதில் தமிழர்கள் ஒரு இனக்குழு (ETHNIC GROUP) என்ற ரீதியில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஈழத் தமிழினத்திற்கு வரைவிலக்கணம் அளிக்கிறது.

இந்திய அரசின் இந்த விளக்கம், எமது போராட்டத்திற்கு மூலமாகவுள்ள தேசிய இனக் கோட்பாட்டையும், தேசிய சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையையும் குழிதோண்டிப் புதைத்துவிடுகிறது. திம்பு பேச்சு வார்த்தைகளின் போது நாம் முன்வைத்த தமிழ் தேசியம், சுய நிர்ணய உரிமை போன்ற கோட்பாடுகளை நிராகரித்து இலங்கை அரசு, பல் இன கோட்பாட்டை (MULTI-ETHNIC CONCEPT) முன்வைத்து ஈழத் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் பிரச்சனையை மழுங்கடிக்க முனைந்தது. சிங்களப் பேரினவாதிகள் கொடுத்த சித்தாந்த விளக்கத்தையும், அதே சொற்பிரயோகங்களையும் இந்திய அரசு இந்த ஒப்பந்தத்தில் கையாண்டிருக்கிறது. இலங்கை அரசின் இனவாதக் கொள்கைக்கு சார்பாக விளங்கும் இந்த வரை விலக்கணங்களை பிரயோகித்து ஈழத் தமிழரின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு ஆப்பு வைத்துவி முனைந்திருக்கிறது இந்திய அரசு.

## தமிழ்த் தாயகம்:

ஈழத் தமிழ் மக்களுக்கு ஒரு தாயகப் பூமியுண்டு. வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கொண்ட இந்த தாயக மண்ணில் பாராம்பரியமாக, வரலாற்றுரீதியாக நாம் வாழ்ந்துவருகிறோம். இந்தத் தாயகம் எமது சொத்துடமை. இந்த மண்ணுரிமை எமது சமூகப் பொருளாதார வாழ்வுக்கு இன்றியமையாதது. எமது அரசியல் சுதந்திரத்திற்கு அஸ்திவாரமானது. எமது தமிழ்த் தாயகத்தை அங்கீகரித்து, அந்தப் பிரதேச உரிமையின் அடிப்படையிலேயே எமது பிரச்சனைக்கு தீர்வு காணபட்டவேண்டும். ஆனால் இந்திய - இலங்கை ஒப்பந்தம் தமிழ்த் தாயக உரிமையை அங்கீகரிக்கவில்லை. மாறாக, தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தை நியாயப்படுத்துவதோடு, தமிழ் தாயகத்தை இரு கூறுகளாகப் பிரித்துவிடும் அபாயகரமான அம்சங்களையும் உள்ளடக்கியிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் வரலாற்றுரீதியாக தமிழ் பேசும் மக்கள் வாழும் விரதேசமாக குறிப்பிடும் அதேவேளை ஏனைய இனக் குழுக்களும் எல்லாக் காலங்களிலும் இப்பகுதியில் தமிழருடன் சேர்ந்து வாழ்ந்துவந்திரக்கிறார்கள்; என இந்த ஒப்பந்தம் பிரகடனப்படுத்துகிறது.

எல்லாக் காலங்களிலும் ஏனைய இனத்தவர்களும் இப்பிரதேசத்தில் தமிழர்களுடன் சேர்ந்து வாழ்ந்துவந்திருக்கிறார்கள் என்ற இந்த விளக்கம் தமிழ்த் தாயகம் கோட்பாட்டிற்கு மாசு கற்பிப்பதாக அமைகிறது. அத்தோடு, வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த நாற்பது ஆண்டு காலமாக தொடர்ச்சியாக நடைபெற்று வரும் சட்ட விரோத சிங்களக் குடியேற்றத்தை நியாயப்படுத்துவதாகவும் அமைகிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழ் மாநிலம் உருவாவதற்கு இந்த ஒப்பந்தம் வழிவகுப்பதாக இந்திய அரசு கூறிவருகிறது. இது உண்மைக்கு மாறானது.

வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒரு நிர்வாகப்பிரிவாக (தமிழ் மாநிலமாக அல்ல) மகிச் சொற்பகாலத்திற்கு தற்காலிகமாக இணைப்பதற்கு மட்டும் இந்த ஒப்பந்தம் வழிகோலுகிறது. ஆனால், அதே சமயம், இந்த இணைப்புக:கு அங்கீகாரம் பெறும் வகையில் கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவும் இந்த ஒப்பந்தம் வலியுறுத்துகிறது. இந்த வாக்கெடுப்பு தமிழ்த் தாயகத்தை நிரந்தரமாக பிளவுபடுத்திவிடும் ஆபத்தான அம்சம் என்றே நாம் கருதுகிறோம்.

தமிழ்த் தாயகத்தின் இணைபிரியாத அங்கமான கிழக்கில் இணைப்புபற்றி வாக்கெடுப்பு நடத்துவதை நாம் அங்கீகரிக்க முடியாது. ஏனென்றால் தமிழ்த் தாயகம் எனபது பிரிவுபடுத்தமுடியாத (INDIVISIBLE) பூகோள வடிவம்.

கிழக்கிலிருந்து அகதிகளாக இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை அவர்களின் பாராம்பரிய கிராமங்களுக்கு திரும்பவிடாமல் தடுத்து, சட்ட விரோத சிங்களக் குடியேறவாசிகளுக்கு வாக்குரிமை அளித்து சர்வசன வாக்கெடுப்பு என்ற தில்லு முல்லு நாடகத்தை அரங்கேற்றி கிழக்கிலங்கையை கபளீகரம் செய்துவிட திட்டமிடுகிறது சிங்கள அரசு, தமிழ்த் தாயகத்தை கூறுபோட்டு சிதறடிக்கும் சிங்கள அரசின் இந்த நாசகாரத் திட்டத்திற்கு இந்த ஒப்பந்தம் வழிவகுப்பதாக அமைகிறது.

தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் சுயநிர்ணயம் ஆகிய ஈழத் தமிழ் மக்களின் மூலாதார அரசியல் கோரிக்கைகளை இந்திய - இலங்கை ஒப்பந்தம் நிராகரிக்கிறது. பதிலாக, ஈழத் தமிழரை ஒரு சிறுபாண்மை சமூகக் குழுவாக மதிப்பீடுசெய்து, இலங்கையின் ஒற்றையாட்சியின் கீழ், சிங்களப் பேரினவாதத்தின் வடிவமான அரசியல் யாப்பின் கீழ், சிங்களப் பெரும்பான்மைச் சர்வாதிகாரத்தின் கீழ் எமது பிரச்சனைக்கு தீர்வு காண விழைகிறது இந்த ஒப்பந்தம். நாற்பது ஆண்டு காலமான எமது நீண்ட அரசியல் வரலாற்றையும், தமிழ் மக்களின் தேசிய வழிப்புணர்வைமயும், தேசிய சுதந்திர எழுச்சியையும் காற்றில் பறக்கவிட்டு - இதுவரை காலமும் தமிழீழத்தில் ஆறாக ஓடிய இரத்தத்தையும் கண்ணீரையும் மூடிமறைத்துவிட்டு - ஜெயவர்த்தனாவுடன் அந்தரங்கமாக செய்யப்பட்ட இந்தப் போலியான ஒப்பந்தம் தமிழீழ மக்களின் அடிப்படையான அரசியல் பிரச்சனைகள் எதையும் தொட்டு நிற்கவில்லை.

## அரசியல் தீர்வு:

தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சனையத் தீர்த்து வைப்பதற்கு இந்திய - இலங்கை ஒப்பந்தம் முன்வைக்கும் தீர்வுத் திட்டம்பற்றி இனிப் பார்ப்போம்.



04.05.1986 லிருந்து 09.12.1986 வரை இந்திய அரசம் இலங்கை அரசம், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமையுமாக, பகிரங்கமாகவும் அந்தரங்கமாகவும் பேச்சு வார்த்தைகளை, நடத்தி, மாகாணசபைத் தீர்வுத் திட்டம் ஒன்றை உருவாக்கினர். இந்தத் தீர்வுத் திட்டத்தை எமது இயக்கம் அந்த நேரத்திலேயே நிராகரித்தவிட்டது. இந்தத் திட்டத்திலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, இத் தீர்வுத் திட்டம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் எதையும் பூர்த்திசெய்யவில்லை என விளக்கி, எமது இயக்கத் தலைவர் திரு . பிரபாகரன் (தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்) மன்னாள் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் மூலமாக இந்திய அரசுக்கும் உத்தியோகபூர்வமான ஒரு அறிக்கையையும் சமர்ப்பித்தார்.

எமது இயக்கத்தால் அன்றே நிராகரிக்கப்பட்ட மாகாண சபைத் திட்டத்தைத்தான், இந்திய - இலங்கை ஒப்பந்தம் இன்று முன் வைக்கிறது. இந்த சமரசத் திட்டத்தில் முடிவுறாத சில விசயங்கள் பற்றி இந்திய - இலங்கை அரசுகள் பேச்சுவார்த்தைகள் நடத்துமென இவ்வொப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் ஜெயவர்த்தனா இது சம்பந்தமான பேச்சுக்களை நடத்த மறுத்திருப்பதுடன், பழைய, முடிவுறாத, மாகாணசபைத்திட்ட யோசனைகள் அடங்கிய இரு மசோதாக்களை (மாகாணசபை சட்டம், 13வது அரசயில் சட்டத்திருத்தம்) இலங்கைப் பாராளு மன்றத்தில் நிறைவேற்றியிருக்கிறார். இந்தத் தீர்வுத் திட்டத்தை விரிவான முறையில் நாம் இங்கு விமர்சிக்க முனையவில்லை. இந்தத் திட்டத்திலுள்ள அடிப்படையான குறைபாடுகளை மட்டும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஈழத் தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் பிரச்சனைகளை மையமாக வைத்து, அவர்கள் பிரத்தியேகமான குறைபாடுகள், தேவைகளைக் கருத்தில்கொண்டு தமிழரின் இனப் பிரச்சனையை தீர்க்கும் நோக்குடன் இந்த மாகாண சபைத் திட்டம் உருவாக்கப்படவில்லை. இந்தத் திட்டமானது, பரவலாக, அகில இலங்கை ரீதியில், பெரும்பாலான சிங்கள மாகாணங்கள் உட்பட, இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்குமாக மிகவும் வரையறுக்கப்பட்ட முறையில் நிர்வாக அதிகாரத்தை விரிவுபடுத்துகிறது. ஆகையால், இத் திட்டம் தமிழ் மக்களின் அடிப்படையான பிரச்சனைகளை, அவர்களது நியாயமான அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யுமென எதிர்பார்ப்பது அசட்டுத்தனமாகும்.

இலங்கை மத்திய அரசின் ஏகபோக அரசியல் கட்டுப்பாட்டின்கீழ் அகில இலங்கை ரீதியாக ஒரு நிர்வாக அமைப்பை உருவாக்க இத்திட்டம் வழிவகுத்திருக்கிறது. தமிழ்ப் பகுதிகளும் தமது பிரதேச தனித்துவத்தையும், தேசிய தன்மையையும் இழந்து இந்த நிர்வாக அமைப்பின் ஒரு அங்கமாக மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்க இத் திட்டம் வகைசெய்துள்ளது.

இந்த தீர்வுத் திட்டத்தை செயலாக்குவதற்காக கொண்டு வரப்பட்ட சட்டங்கள் மாகாணங்களுக்கு அரசயில் அதிகாரத்தை பரவலாக்கம் செய்வதற்குப் பதிலாக, மத்திய அரசிடம் அதிகாரத்தை குவித்துள்ளது. சிங்கள அரசின் தனிமனித சர்வாதிகாரியாகத் திகழும் ஜனாதிபதிக்கும், அவரது பிரதிநிதியாகச் செயல்படுதம் ஆளுனருக்கும், சிங்களப் பெரும்பான்மை ஏதேச்சாதிகாரத்தின் இருப்பிடமான பாராளுமன்றத்திற்கும் ஏகபோக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிறன்றன. மத்திய அரசின் இந்த மூன்று துருவங்களிலுமிருந்து மாகாண சபைகளின் ஆட்சியதிகாரங்கள் (சட்டமியற்றும் அதிகாரமும் நிறைவேற்றும் அதிகாரமும்) வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த வகையில், மாகாணச் சுயாட்சி, அதிகாரப் பரவலாக்கம் என்பதெல்லாம் வெறும் கேலிக் கூத்தாகவே தென்படுகிறது.

## மாகாண சபைகளை கலைக்கும் அதிகாரம்:

13வது அரசியல் சட்டத்திருத்தம் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு சர்வ அதிகாரங்களையும் வழங்குகிறது. அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்திவிட்டு மாகாண சபைகளைக் கலைப்பதற்கும், மாகாண நிர்வாகத்தை செயலிழக்கச் செய்வதற்குமான ஏகபோக அதிகாரங்களை ஜெயவர்த்தனா பெற்றிருக்கிறார். அத்தியாவசிய சேவைகளுக்கு குந்தகம் ஏற்பட்டால் அல்லது இலங்கையின் பாதுகாப்பிற்கு பங்கம் ஏற்பட்டால், அல்லது உள்நாட்டுக் கிளர்ச்சி வெடித்தால் அல்லது இப்படியான நிகழ்வுகளுக்கான சாத்தியக்கூறுகள் தோன்றினால் ஜனாதிபதி அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்திவிட்டு தான்தோன்றித் தனமாக நடந்துகொள்ளலாம். அதுமட்டுமன்றி மாகாண சபைகள் நிறைவேற்றும் எந்தச் சட்டங்களையும் நிராகரிக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு உண்டு.

கடந்த 10 ஆண்டு காலத்திற்கு மேலாக அவசரகால நிலையில் ஆட்சியை நடத்தும் ஜெயவர்த்தனாவுக்கு மேலும் அவசரகால அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதை பார்க்கும் போது தமிழ் மாகாண சபைகளின் கதி என்ன ஆகும் என்பதை நாம் ஊகித்துக்கொள்ளலாம்.

ஜனாதிபதியின் பிரதிநிதியாகச் செயல்படும் ஆளுனர் வெறும் சம்பிரதாயப் பொம்மையாக இல்லாமல் முழு நிர்வாக அதிகாரங்களையும் கொண்டவராக, ஜனாதிபதியின் கட்டளைகளை நிறைவேற்றுபவராக செயல்படுவார். மாகாண முதல்மந்திரிக்கும் மந்திரி சபைக்கும் எந்தவகையிலும் கட்டுப்படாது மத்திய அரசின் அதிகாரத்தை மாகாணங்கள் மீது திணிப்பவராக ஆளுனார் இயங்குவார். சுருங்கக் கூறின் மாகாண சபை நிர்வாகம் ஆளுனர் ஆட்சிக்கு உட்பட்டதாக இருக்கும்.

சிங்களப் பெரும்பான்மையினரின் ஆதிக்கபீடமான பாராளுமன்றம் மாகாண சபைகளின் செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் அதிகாரங்களைக் கொண்டதாக இருக்கும். மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் துறைகள் சம்பந்தமாகவும் சட்டமியற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உண்டு. இப்படியாக ஜனாதிபதி, ஆளுனர், பாராளுமன்றம் ஆகியன வாயிலாக மாகாண சபையின் அரசியல் அதிகாரப் பற்கள் அனைத்தும் பிடுங்கப்பட்டிருக்கின்றன.

## மத்திய அரசிடம் முக்கிய துறைகள்:

இந்தத் தீர்வுத் திட்டமானது அரசியல் அதிகாரத்தைப் பரவலாக்கி பிரதேச நிர்வாகப் பொறுப்பை மக்களிடம் ஒப்படைப்பதற்கு மறுப்பதோடு, பிரதேச பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான பல முக்கிய துறைகளையும் மத்திய அரசின் பொறுப்பில் ஒதுக்கியிருக்கிறது. விவசாயம், கைத்தொழில், மீன்பிடித்துறை, காணி அபிவிருத்தி, நிர்மாணவேலைகள், புனர்வாழ்வு, உள்நாட்டு அரசாங்க சேவை - இப்படியாக முக்கிய துறைகள் மாகாணசபை நிர்வாகத்திற்கு உட்படுத்தப்படவில்லை. ஈழத் தமிழ் மக்களின் சமூக, பொருளாதார வாழ்வுக்கு அடிப்படையானதும் தேசிய தனித்துவத்திற்கு மூலமனாது காணி உரிமை கூட மறுக்கப்பட்டிருக்கிறது. “அரச காணிகள்“ என்ற போர்வையில் நிலவுரிமையும், காணி ஒதுக்கீடு அதிகாரமும் சிங்கள அரசின் ஆணைக்கு உட்படுகிறது. அதேவேளை நீர்ப்பாசனத் திட்டம், தேசிய அபிவிருத்தி திட்டம் என்ற சாக்கில் தொடர்ந்தும் சிங்களக் குடியேற்றம் மூலம் தமிழ்ப் பகுதிகளைக் கபளீகரம் செய்யும் வாய்ப்பும் கொடுக்கப் பட்டிருக்கிறது.

இவற்றோடு மட்டுமல்லாது மாகாண பொலீஸ் நிர்வாகம், நீதி பரிபாலன சேவை, உயர்கல்வி ஆகிய முக்கிய துறைகளும் மத்திய அரசின் அதிகார வலையத்திற்குள் வருகின்றன.

ஒட்டுமொத்தத்தில், இந்த மாகாண சபைத் தீர்வுத் திட்டம் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளையோ பொருளாதார நலன்களையோ பேணுவதாக அமையவில்லை. தமிழ் மக்கள் தொடர்ந்தும் சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையின் கீழ் நசுக்கப்படுவதற்கும், சுரண்டப்படுவதற்கும், சீரழிவதற்கும் இத் தீர்வுத் திட்டம் வழி வகுக்கிறது.

## ஈழத் தமிழ் மக்களுக்கு இழைத்த துரோகம்:

இப்படியான போலியான, வெறுமையான, எந்தவித சுயாட்சி இதிகாரமுமற்ற மாகாண சபைத் திட்டத்தைத்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தம் தமிழரின் தேசிய இனப் பிரச்சனைக்கு தீர்வுத் திட்டமாக முன்வைக்கிறது. இதிலிருந்து ஒன்று தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. அதாவது, தமிழரின் பிரச்சனையை தீர்த்துவைப்பதற்காகவோ அன்றி தமிழரின் நலன்களைப் பேணுவதற்காகவோ இந்த ஒப்பந்தம் செய்யப்படவில்லை. இந்திய அரசானது தனது தேசிய பூகோள நலன்களைக் கருதியே இந்த ஒப்பந்தத்தைச் செய்திருக்கிறது. தமிழ் மக்களின் நலன்களை முற்றாகப் புறக்கணித்து, அவர்களது நியாய பூர்வமான அரசியல் கோரிக்கைகளை உதாசீனம்செய்து இந்திய அரசானது தன்து பூகோள நலன்களுக்கு மட்டும் முக்கியத்துவம் அளித்துள்ளமைதான் இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையான குறைபாடாகும்.

தமிழ் மக்கள் நலனில் அக்கறை காட்டுவதாக நடித்து, தமிழரின் அழிவுக்காக ஒப்பாரிவைத்து, மனிதாபிமான போலிக் கண்ணீர் வடித்து, தமிழ்ப் போராளிகளை தனது கூலிப்படைகளாகப் பாவித்து, இறுதியில் இந்திய அரசானது தனது சுயநல தேசிய நல னைப் பூர்த்திசெய்துகொண்டது. இப்படியாக, ஈழத் தமிழரின் பிணக்குவியல்கள் மீது இந்திய வல்லாதிக்கம் தனது வெற்றிக்கொடியை பறக்கவிட்டிருக்கிறது.

இந்திய அரசானது இலங்கையோடு நல்லுறவை பலப்படுத்திக் கொள்வதையோ அல்லது தனது பூகோள -அரசியல் நலன்களைப் பேணுவதையோ அல்லது தென் ஆசிய பிராந்திய வல்லரசாக தன்னை நிலைநிறுத்திக்கொள்வதையோ ஈழத்தமிழ் மக்கள் ஆட்சேபிக்கப்போவதில்லை. பாரத நாட்டை தமது பாதுகாவலனாகவும் நண்பனுமாகவே எமது மக்கள் கருதிவந்தனர். ஆகவே, பாரதம் தனது தேசிய நலன்களைப் பேணுவதில் எமது மக்கள் உடந்தையாக இருப்பார்களேயன்றி அதற்கு முரண்பட்டு நிற்கமாட்டார்கள். இந்திய அரசுக்கு இது தெரியாததல்ல. அப்படியிருந்தும் தனது பூகோள அபிலாசைகளைப் பூர்த்திசெய்ய எமது மக்களைப் பலிகடாவாக்கி, எமது மக்களின் நலன்களை முற்றாக புறக்கணித்து விட்ட இந்திய அரசின் இந்த சூழ்ச்சிகர இராஜதந்திரம் ஈழத் தமிழ் மக்களுக்கு இழைக்கப் பட்ட மாபெரும் வரலாற்றுத் துரோகமாகும்.

## இந்திய பூகோள நலன்கள்:

இந்த ஒப்பந்தம் வாயிலாக இந்தியாவுக்கு கிட்டியுள்ள பூகோள நலன்கள்பற்றி இனி பார்ப்போம்.

“இந்தியாவுக்கும் இலங்கைக்கும் மத்தியிலான பாரம்பரிய நட்புறவை வளர்ப்பதற்கும், தீவிரப்படுத்துவதற்கும், பலப்படுத்துவதற்கும் அதிமுக்கியத்துவம் கொடுத்து” இந்த உடன்பாடு செய்துகொள்ளப்படுவதாக ஒப்பந்த முன்னுரையில்லேயே பிரகடனம் செய்யப்படுகிறது.

இந்த நட்புறவு என்ன என்பதுபற்றி நாம் விளக்கத்தேவையில்லை. இலங்கைத்தீவை தனது வல்லாதிக்க வியூகதிற்குள் வளைத்துப்பிடிக்க வீசப்பட்ட வலைதான் இந்த நட்புறவு. மேற்கத்தைய ஏகாதிபத்திய சிலந்தி வலைக்குள் சிக்குப்பட்டிருந்த ஜெயவர்ன்தனா அரசை இந்த நட்புறவுப் பொறிக்குள் சிக்க வைத்திருக்கிறது இந்த ஒப்பந்தம்.

தென்னாசியாவில் தன்னை ஒரு வல்லரசாக நிலைநிறுத்திக் கொள்ளவும், தனது ஆதிக்கத்தின்கீழுள்ள தென்னாசிய பிராந்தியக் கூட்டுறவில் இலங்கையை நிரந்தரமாக இணைத்துக் கொள்ளவும், இந்துமா சமுத்திரப் பிராந்தியத்தில் ஏனைய வல்லரசுகளின் ஊடுருவலைத் தடுத்துநிறுத்தவும் இந்த ஒப்பந்தம் வழிகோலுகிறது.

இலங்கையில் ஊடுருவி நாசவேலையில் ஈடுபட்டிருந்த இஸ்ரேலிய உளவுப் படையினர், இலங்கை இராணுவத்திற்கு முண்டுகொடுத்துவந்த பிரிட்டிஷ், அமெரிக்க, தென்னாபிரிக்க அந்நிய கூலிப் பட்டாளங்கள் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக விளங்கின. மேற்கத்தைய ஏகாதிபத்தியத்தின் இந்த அந்நிய நாசகார சக்திகளை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கும் இந்த ஒப்பந்தம் வழிவகுக்கிறது.

இலங்கையில் தளம் அமைத்த “அமெரிக்காவின் குரல்“ போன்ற அந்நிய ஒலிபரப்பு சேவைகள், இராணுவரீதியாக உளவு பார்க்கும் நோக்கில் இயங்குவதற்கும் இந்த ஒப்பந்தம் தடை விதிக்கிறது.

அதிமுக்கியமாக, இந்துமா சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்தவம் வாய்ந்ததாகத் திகழும் திருகோணமலைத் துறைமுகத்தை, இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு குந்தகம் விளைவிக்கும் முறையில் எந்த ஒரு நாடும் இராணுவ நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதை இந்த ஒப்பந்தம் தடுக்கிறது. அதே சமயம், இந்திய கடற்படை இந்த துறைமுகத்தைப் பாவித்துக்கொள்ளும் வகையில் துறைமுக எண்ணெய்க் கிடங்கு புனர்நிர்மாண வேலைகளை இந்தியாவும் இலங்கையும் கூட்டாகச் சேர்ந்து செய்யவும் இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

ஒட்டுமொத்தத்தில் இந்தியாவின் தேசிய நலனையும் பூகோள அகக்றைகளையும், வெளிவிவகார உறவுகளையும் பேணிப் பாதுகாப்பதற்கு இந்த ஒப்பந்தம் வழிகோலுகிறது என்பதில் சந்தேகமேயில்லை.

இந்த ஒப்பந்தம் வாயிலாக இந்தியா தனது பூகோள வெளியுறவு நலன்களைப் பூர்த்திசெய்து கொண்டதையும், இலங்கையில் ஏகாதிபத்திய நாசகார சக்திகளின் ஊடுருவலை தடுத்துள்ளதையும் நாம் வரவேற்கிறோம். ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையுடைய ஒரு புரட்சிகர விடுதலை இயக்கம் என்பதாலும், இந்தியாவின் இந்து சமுத்திர சமாதானக் கொள்கையை நாம் ஆதரிப்பதாலும், இந்திய அரசு தனது பாதுகாப்பு நலன்கள் கருதி மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கையை நாம் வரவேற்கிறோம். இலங்கையில் காலூன்றிய இஸ்ரேலிய உளவுப் படைகளுக்கும், அந்நிய கூலிப் பட்டாளங்களுக்கும் எதிராக எமது விடுதலை இயக்கமே இரத்தம் சிந்திப்போராடியது என்பதையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். எமது இயக்கம் இந்திய நலனுக்கு விரோதமான ஒரு சக்தி அல்ல. மாறாக, இந்தியா

**இந்திய அரசானது தனது தேசிய பூகோள நலன்களைக் கருதியே இந்த ஒப்பந்தத்தைச் செய்திருக்கிறது. தமிழ் மக்களின் நலன்களை முற்றாகப் புறக்கணித்து, அவர்களது நியாய பூர்வமான அரசியல் கோரிக்கைகளை உதா சீனம் செய்து இந்திய அரசானது தனது பூகேள நலன்களுக்கு மட்டும் முக்கியத் துவம் அளித்துள்ளமைதான் இந்த ஒப்பந் தத் தின் அடிப்படையான குறைபாடாகும்.**

வின் நட்பு சக்தியாகவே நாம் செயல்பட்டோம். செயல்பட விரும்புகிறோம். இந்த ஒப்பந்தமானது இந்திய வெளிவிவகார உறவுடன், இந்திய பூகோள நலன்களைப் பூர்த்திசெய்வதுடன் நின்றுவிட்டால் நாம் நிபந்தனையற்ற முறையில் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டிருப்போம். ஆனால் இந்த ஒப்பந்தம் ஈழத் தமிழர் பிரச்சினையில் தலையிடுகிறது. ஈழத் தமிழர் நலனை இந்திய நலனுக்காகப் பலியிடுகிறது. இங்குதான் இந்திய அரசுக்கும் எமது இயக்கத்திற்கும் மத்தியில் முரண்பாடு தலைதூக்கியது.

## பாதிப்புகள்:

இந்தியாவின் இந்தத் தலையீடு எமது விடுதலை இயக்கத்தையே வெகுவாகப் பாதித்தது. எமது இயக்கம் முன்னெடுத்த சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைப் பாதித்தது. எமது புரட்சிகர ஆயுதப் போராட்ட வடிவத்தைப் பாதித்தது. பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக, இரத்தமும் வியர்வையும் சிந்தி, எத்தனையோ இன்னல்கள் இடையூறுகளைச் சந்தித்து, நாம் கட்டி வளர்ந்த ஆயுதப் போராட்ட அமைப்புகளை 72 மணி நேரத்தில் கலைத்துவிடுமாறு இந்த ஒப்பந்தம் எமது இயக்கம் மீது கடுமையான நிர்ப்பந்தத்தை விதித்தது. எமது மக்களின் பிரச்சனைக்கு திருப்திகரமான ஒரு தீர்வை முன்வைக்காமல் எமது மக்கனின் பாதுகாப்பிற்கு தகுந்த உத்தரவாதங்கள் அளிக்காமல் எம்மைத் திடீரென நிராயுதபாணிகளாகுமாறு இந்த ஒப்பந்தம் பணித்தது.

ஜெயவர்த்தனா அரசு இந்த ஒப்பந்தத்திற்கு இணக்கம் தெரிவித்து இந்திய ஆதிக்கதிற்கு அடிபணிய ஒத்துக்கொண்டதற்கு பிரதியுபகாரமாக தமிழரின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையையும் ஆயுதப் போராட்டத்தையும் ஒரேயடியாக நசுக்கி, தமிழினத்தின் நியாயமான உரிமைகளை சிங்கள பேரினவாதத்திற்குப் பலியிட இந்திய அரசு துணிந்தது. இந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக்கொள்ள மறுத்து, ஆயுதங்களை கையளிக்காது போனால் எமக்கு எதிராக எவ்விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் இவ்வொப்பந்தம் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இந்த "ஒப்பந்தத்தை செயல்படுத்த அதாவது எம் வசமிருந்த ஆயுதங்களைப் பறித்தெடுக்க இந்திய இராணவம் பயன்படுத்தப்படும்.

இலங்கை அரசுக்கு விரோதமான நடவடிக்கைகளுக்காக இந்திய மண்ணைப் பயன்படுத்துவது தடுக்கப்படும்.

இந்திய கடற்பிராந்தியத்தை போராளிகள் பயன்படுத்துவது தடைபடும்.

இந்திய மண்ணிலிருந்து பிரிவினைவாதம், தனிநாட்டுக் கோரிக்கைபற்றி பிரச்சாரம் செய்வது தடுக்கப்படும். அப்படிப் பிரச்சாரம் செய்வோர் நாடு கடத்தப்படுவர்."
இப்படியாக, எமது விடுதலை போராட்டத்திற்கு தனது கதவை முற்றாக அடைத்துவிடவும் இந்தயி அரசு முன்வந்தது.

## ஒத்துழைக்க முடிவு:

இந்த ஒப்பந்தம் எமது இயக்கத்திற்கு ஒரு மிகப்பெரிய சவாலாக அமைந்தது. "திடீரென எமக்கு அதிர்ச்சியூட்டுவது போல, எமது சக்திக்கு அப்பாற்பட்டதுபோல, இந்தத் திருப்பம் ஏற்பட்டது" என எமது தலைவர் திரு வே. பிரபாரகன் தமது சுதுமலைப் பிரகடனத்தில் இந்த நிலைமையை விளக்கியிருப்பது சாலப் பொருந்தும். ஒன்று, இந்தியாவுடன் ஒத்துழைக்க வேண்டும் அல்லது இந்தியாவுடன் முரண்பட்டு, இந்திய இராணுவத்துடன் மோதவேண்டும் என்ற மிகச் சங்கடமான சூழ்நிலைக்கும் நாம் தள்ளப்பட்டோம்.

இந்த ஒப்பந்தத்தை இந்திய இலங்கை அரசுகள் இரகசியமாக உருவாக்கின. இதுபற்றி எமது இயக்கத்தை கலந்தாலோசிக்கவில்லை. ஒப்பந்தத்தை தயார்செய்துவிட்டு, கைச்சாத்திடுவதற்கு முன்பாக, எமது தலைவர் பிரபாகரனை டில்லிக்கு அவசர அவசரமாக அழைத்துச்சென்று ஒப்பந்த நகலை அவரிடம் வாசித்துக் காட்டி, அவரை இணங்கச்சொல்லி வற்புறுத்தினார்கள்.

"இந்த ஒப்பந்தத்தில் பல சிக்கல்கள் இருக்கின்றன; குறைபாடுகள் இருக்கின்றன; இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களின் நலன்களைப் பேணவில்லை; அவர்களது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கவில்லை; இந்த ஒப்பந்தம் தமிழ்மக்களின் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை அளிக்குமா என்பதில் எமக்கு சந்தேகமுண்டு; ஆகவே இந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது, எனப் பிரபாகரன் இந்திய அதிகாரிகளிடம் திட்டவட்டமாக் கூறினார்.

இதனையடுத்து பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி பிரபாகரனை அழைத்து நீண்ட நேரமாகப் பேசினார். இந்த ஒப்பந்தத்திலுள்ள குறைபாடுகள் பற்றியும், தமிழ் மக்கள் பாதுகாப்புப் பிரச்சனை பற்றியும் திரு. பிரபாகரன் பாரதப் பிரதமரிடம் எடுத்துவிளக்கினார். இந்த சந்தர்ப்பத்தில் பாரதப் பிரதமர் சில உறுதிமொழிகளை அளித்தார். இதில் முக்கியமாக,

- தீர்வுத் திட்டத்திலுள்ள குறைபாடுகள் தீர்த்துவைக்கப்படும்.
- விடுதலைப் புலிகளின் தலைமையில் வடக்கு, கிழக்கு இணைந்த ஒரு இடைக்கால அரசு நிறுவப்படும்.
- தமிழ் மாநில பொலிஸ் நிர்வாகம் புலிகள் வசம் ஒப்படைக்கப்படும்.
- இந்திய சமாதானப்படை தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு பொறுப்பேற்கும்.

பாரதப் பிரதமரின் உறுதிமொழிகளை அடுத்து, நாம் அயுதங்களை கையளிக்க இணங்கினோம், தமிழ் மக்களின் நலன்கள் பேணப்படும்பட்சத்தில், இந்திய - இலங்கை ஒப்பந்த அமுலுக்கு ஒத்துழைப்பதாகக் கூறினோம்.

நாம் வாக்களித்தப்படி, கணிசமான தொகையில் எமது ஆயுதங்களை இந்திய அமைதிப்படை வசம் ஒப்படைத்தோம். இந்தியாவுடன் நல்லுறவைப்பேணும் நல்லெண்ண முயற்சியாக, இந்திய - இலங்கை ஒப்பந்த அமுலுக்கு எமது ஒத்துழைப்பின் அறிகுறியாக நாம் ஆயுதங்களை கையளித்தோம். இடைக்கால அரசு நிறுவப்பட்டதும் எஞ்சிய ஆயுதங்களை கையளிப்பதாக வாக்குறுதி அறித்தோம். நாம் ஆயுதங்களை கையளித்தபோது எமது மக்களையும் போராளிகளையும் பாதுகாக்கும் பொறுப்பையும் இந்தியாவிடம் கையளித்தோம். இந்தப் பொறுப்புபற்றி எமது தலைவர் பிரபாகரன் சுதுமலையில் பிரகடனப்படுத்தியதாவது:

"நாம் எமது மக்களின் பாதுகாப்பிற்காப எத்தனை அளப்பரிய தியாகங்களையும் புரிந்தோம் என்பதை நான் இங்கு விளக்கத் தேவையில்லை. எமது இலட்சியப் பற்றும் தியாக உணர்வும் எத்தன்மை வாய்ந்தது என்பதை எமது மக்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள். உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் விடுதலைக்காக, உங்கள் விமோசனத்திற்காக நாங்கள் ஏந்திய ஆயுதங்களை இந்திய அரசிடம் ஒப்படைக்கிறோம். நாம் இந்த ஆயுதங்களை ஒப்படைக்கும் கணத்திலிருந்து எமது மக்களாகிய உங்களின் பாதுகாப்பு என்ற பொறுப்பயையும் இந்தியாவிடம் ஒப்படைக்கிறோம். ஈழத் தமிழரின் ஒரே பாதுகாப்பு சாதனமாக இருந்துவந்த இந்த ஆயுதங்களை இந்திய அரசு எம்மிடமிருந்து பெற்றுக்கொள்வதிலிருந்து எமது மக்களின் பாதுகாப்பு என்ற பெரும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறது. ஆயுதக் கையளிப்பு என்பது இந்தப் பொறுப்பு மாற்றத்தைத் தான் குறிக்கிறது... எமது எதிரியிடமிருந்து எம்மைப்பாதுகாக்கும் பொறுப்பை இந்திய இராணுவ வீரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். நாம் ஆயுதங்களை அவர்களிடம் கையளிப்பதிலிருந்து ஈழத் தமிழன் ஒவ்வொருவனதும் உயிருக்கும் பாதுகாப்பிற்கும் இந்திய அரசுதான் பொறுப்பாக இருக்கவேண்டும் என்பதை நான் இங்கு அழுத்தீக்கூற விரும்புகிறேன்."

**தமிழ் மக்கள் நலனில் அக்கறைகாட்டுவதாக நடித்து, தமிழரின் அழிவுக்காக ஒப்பாரி வைத்து, மனிதாபிமான போலிக் கண்ணீர் வடித்து, தமிழ்ப் போராளிகளை தனது கூலிப் படைகளாகப் பாவித்து, இறுதியில் இந்திய அரசானது தனது சுயநல தேசிய நலனைப் பூர்த்திசெய்துகொண்டது.**

பிரபாகரன் தனது வாக்குறுதியை நிறைவேற்றினார். பாரதம் மீதான தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினார். தனது மக்களின் நலன்பேணப்படும், தனது மக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்ற நம்பிக்கையில் ஒப்பந்த அமுலுக்கு இசைவாக ஆயுதங்களை வழங்கினார்.

எமது மக்களின் பாதுகாப்பு என்ற பெரும் பொறுப்பை இந்திய அரசு எவ்விதம் நிறைவேற்றியது என்பதை நாம் இங்கு விளக்கவோ, விவரிக்கவோ தேவையில்லை. நாம் ஆயுதங்களைக் கையளித்ததைத் தொடர்ந்து, ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்ற நம்பிக்கைத் துரோகச் சம்பவங்களும், வாக்குறுதிகளை காற்றி பறக்கவிட்ட கதைகளும், ஒப்பந்த மீறல்களும், இறுதியில், இந்திய இராணுவ பயங்கரவாதம் தமிழீழத்தை ரண களமாக்கிய கோர நிகழ்வுகளும் இன்று உலகறிந்த விசயம். இந்திய - இலங்கை ஒப்பந்தம் அமுலுக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் எமது இயக்கம் எந்த வகையிலும் நடந்துகொள்ளவில்லை. ஆனால் இலங்கை இந்தி அரசுகள் தாம் செய்தகொண்ட ஒப்பந்தத்திற்கு முரணானவகையில், தமிழ் மக்களின் நலனுக்குப் பாதகமான முறையில் எவ்விதம் நடந்துகொண்டன என்பதை மட்டும் இங்கு சுருக்கமாக சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இலங்கை அரசு, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய மறுத்தது; அவசரகால நிலையை வாபஸ்பெற மறுத்தது; தமிழப் பகுதிகளில் சிஙகளக் குடியேற்றத்தை தீவிரப்படுத்தியது; ஆயுதப் படைகளை முகாம்களுள் முடக்காது தமிழ்ப் போராளிகளை வேட்டையாடியது; விடுதலைப் புலி தளபதிகளை கைதுசெய்து, கொழும்பு கொண்டுசென்று கொலைசெய்ய முனைந்தது; வடக்கையும் கிழக்கையும் இணைக்க மறுத்தது; மாகாண சபைத் திட்டத்தின் குறைபாடுகள் பற்ற பேசமறுத்தது.

இந்திய அரசு, புலிகளின் கட்டுப்பாட்டில் இடைக்கால அரசு, பொலீஸ் நிர்வாகம் ஆகிய உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறியது; புலிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறிப்பதில் அக்கறை காட்டிய அதே சமயம் ஏனைய அமைப்புகளுக்கு ஆயுதம் வழங்கியது; இந்த அராஜகக் குழுக்களுக்கு தமிழீழத்தில் தளம் அமைத்துக்கொடுத்து புலிகளை வேட்டையாடிக் கொல்ல அனுமதித்தது; கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பற்ற நிலையில் வாழும் எமது மக்களுக்கு பாதுகாப்பு அளிக்காமல் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணக்குடாவில் இராணுவத்தைக் குவித்து முகாம்களை நிறுவியது; திலீபன் உயிர் நீக்க அனுமதித்தது; தனது பாதுகாப்பிலிருந்த விடுதலைப் புலி தளபதிகளை அநியாயமாகச் சாவதற்கு அனுமதித்தது; விடுதலைப் புலிகள் மீது யுத்தம் தொடுத்தது; ஆயிரக்கணக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் அழிவதற்கு பொறுப்பாக இருந்தது.

ஈழத் தமிழரின் நல்வாழ்வைப் பேணுவதற்காக, இனப் பிரச்சனையை தீர்ப்பதற்காக, தமிழீழத்தில் சமாதானத்தைப் பேணுவதற்காக இந்தியாவும் இலங்கையும் கூட்டுச்சேர்ந்து, ஒப்பந்தம் செய்து, இதுவரை ஈட்டிய சாதனைகள் இவைதான்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு விரோதமாக நடந்தவர்கள் யார்? ஒப்பந்தத்தை மீறியவர்கள் யார்? விடுதலைப் புலிகளா? இல்லது இந்திய, இலங்கை அரசுகளா?

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு எட்டு மாதங்கள் ஆகிவிட்டன. இந்த எட்டு மாதங்களில் ஆறு மாதங்களை தமிழர்களுக்கு எதிரான ஒரு அநியாயமான யுத்தத்தில் செலவிட்டு தமிழீழத்தில் சாவையும் அழிவையும் பெருக்கியதைத் தவிர இந்திய அரசு வேறு எதையும் சாதிக்கவில்லை.

இதிலிருந்து ஒன்று தெள்ளத்தெளிவாகிறது. அதாவது ஈழத் தமிழரின் நலனில் அக்கறைகொண்டு, இனப் பிரச்சனையைத் தீர்க்கும் இலட்சியத்தோடு இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்படவில்லை.

இந்த ஒப்பந்தத்தின் வாயிலாக தனது பூகோள — அரசியல் நலன்களை நிலைநாட்டிக் கொள்வதிலேயே இந்திய அரசு அக்கறை கொண்டிருக்கிறது.

இலங்கை அரசைப் பொறுத்தவரை, புலிகள் இயக்கம் அழிவதிலும், தமிழரின் சுதந்திர இயக்கம் சாவதிலுமே பிரதான அக்கறை காட்டுகிறது.

ஈழத் தமிழரின் நலன்களைப் பேணுவதில் உண்மையான அக்கறையும், உறுதியும் கொண்டிருப்பது விடுதலைப் புலி இயக்கமேயாகும். ஆகவே, தமிழரின் நலன் என்ற விசயத்தில் விடுதலைப் புலி இயக்கம் இந்திய, இலங்கை அரசுகளுடன் முரண்பட்டு நிற்கிறது. இந்த முரண்பாடுதான் யுத்தமாகவும் வெடித்திருக்கிறது. இந்த யுத்தத்தில் விடுதலைப் புலிகளை அழித்து விட்டால் தமிழரின் பிரச்சனைக்கு தீர்பு காணலாம் என இந்திய அரசு கருதினால் அதைப்போல் அரசியல் அசட்டுத்தனம் எதுவுமிராது. ஏனென்றால், விடுதலைப் புலிகளின் அழிவு தமிழரின் நலன்களைக் கொல்வதற்கு ஒப்பாகும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமுல்நடத்த முடியாமல் இருப்பதற்கு விடுதலைப் புலிகள்தான் முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள் என இந்திய இலங்கை அரசுகள் கூட்டாகச் சேர்ந்து ஒப்பாரிவைக்கின்றன. இந்திய அரசு இன்னும் ஒரு படி கூடச்சென்று, ஒப்பந்தத்தை அமுல்நடத்தும் பணியாகவே விடுதலைப் புலிகளோடு போர் புரிவதாக ஒரு விதண்டா வாதத்தை முன்வைக்கிறது. இந்த நொண்டி வாதங்களை எல்லாம் ஈழத் தமிழரும், இந்திய மக்களும், உலக சமுதாயமும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இந்த ஒப்பந்தம் மூலம் ஈழத் தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப்படவில்லை என்ற யதார்த்த உண்மையை இன்று முழு உலகமும் உணரத் தொடங்கி விட்டது.

நாம் இந்த யுத்தத்தை விரும்பவில்லை. நாம் சமாதானத்தை விரும்புகிறோம். சண்டை நிறுத்தத்தை விரும்புகிறோம். இந்தியாவுடன் நல்லுறவைப் பேண விரும்புகிறோம்.

தென்னாசிய பிராந்தியத்தில் இந்தியாவின் வல்லாதிக்க முக்கியத்தவத்தை நாம் ஆங்கீகரிக்கிறோம். இந்தியாவின் இந்து சமுத்திர சமாதானக் கொள்கையை வரவேற்கிறோம். இந்தியாவின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையை மதிக்கிறோம். இந்தியாவின் பூகோள அரசியல் நலன்களையும் வெளியுறவுக் கொள்கையையும் கௌரவிக்கிறோம்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒரு சர்வதேச உடன்பாடு என்ற அந்தஸ்தைக் கொண்டிருப்பதால் இந்த ஒப்பந்தத்தில் இந்தியாவின் சர்வதேச கொள்கைகளையும் பூகோள தேசிய நலன்களையும் பிரதிபலிக்கும் அம்சங்கள் அனைத்தையும் நாம் ஆதரிக்கிறோம். அதே சமயம் இந்த ஒப்பந்தம் ஈழத்தமிழர் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு அளிப்பதாகவோ அன்றி அவர்களது நலன்களைப் பேணுவதாகவோ அமையவில்லை. என்பதே எமது நிலைப்பாடாகும். ஈழத்தமிழர் நலன்கள் பேணப்படும் வகையில் இந்திய அரசு நடவடிக்கைகளை எடுக்குமாயின் இந்த ஒப்பந்த அமுலுக்கு நாம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்.
ஈழத்தமிழரின் துயரைத் துடைக்க வேண்டிய தார்மீகக் கடைப்பாடு இந்திய அரசுக்கு உண்டு. இராணுவப் பலாத்காரப் பாதையைக் கைவிட்டு, தர்மத்தின் பாதையில் சென்று இந்த தார்மீகக் கடமையை பாரதம் பூர்த்தி செய்து வைக்கும் என நாம் கருதுகிறோம்.

அரசியற் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்.

# தமிழீழ எல்லைகளை வரையறுத்துக் காட்டிய கேணல் கிட்டு



செய்தியாளர் கூட்டமொன்றில், தளபதி கிட்டுவிடம் ஒருவர்;

“இலங்கையில், நீங்கள் கேட்கும் தமிழீழப் பகுதிகள் எவை? எவை? என்பதை திட்டவட்டமாக ஆதாரத் துடன் கூறமுடியுமா?” எனக் கேட் டார்.

ஒருகண நேரம் கூட யோசிக்கா மல், கிட்டு உடனே விடையளித்தார்.

“இலங்கையில் எந்தெந்தப் பகுதி கள் மீது சிங்கள விமானங்கள் வீசும் குண்டுகள் விழுந்திருக்கின்றனவோ, அந்தப் பகுதிகளைக் கொண்டதே எமது தமிழீழம்” என்றார்.

கேட்டவர் உட்பட கூடியிருந் தோர் அனைவரும் கிட்டுவின் விடையை ரசித்தனர்.


AFFORDABLE REFRIGERATION SERVICES INC




We Sell. Install used & new Walk in Cooler, Walk in Freezer

Kapil: 647.515.8643
kapil.afr@gmail.com

With Best Wishes From

KENNEDY LAW OFFICE

உங்களது அனைத்து சட்டத் தேவைகளுக்கும்.....

கெனடி சட்ட அலுவலகம்

- ☑ REAL ESTATE LAW — காணி, வீடுகள் – வாங்கல், விற்றல், அடமானம்
- ☑ BUSINESS LAW — வணிகச் சட்டம்
- ☑ CRIMINAL LAW — குற்றவியல் சட்டம்
- ☑ FAMILY LAW — குடும்பச் சட்டம்
- ☑ IMMIGRATION LAW — குடிவரவுச் சட்டம்
- ☑ ODSP APPEALS
- ☑ SMALL CLAIMS
- ☑ WILLS, POWER OF ATTORNEY & AFFIDAVITS
- ☑ NOTARIZING & COMMISSIONING





W.KENNEDY BERNADIUS, LL.B
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC

Tel: 416 613 4900
Fax: 416 613 4904
E: williamkennedylaw@gmail.com

2390 Eglinton Ave., East, Suite# 250, Scarborough, ON M1K 2P5 (Kenndy & Eglinton)




# முல்லை முள்ளியவளைப் படுகொலை 16.01.1985



முள்ளியவளைக் கிராமம் முல்லை, மருத நிலங்கள் சூழ்ந்த வளங்கொழிக்கும் பிரதேச மாகவும் பாரம்பரிய கலை, பண்பாடு என்பன சிறப்பாகவுள்ள பிரதேசமாகவும் வவுனியா — முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் அமைந்துள் ளது முல்லைத்தீவில் நிலைகொண்டிருந்த அரச படைகள் 16.01.1985 அன்று தைத்திரு நாளின் மறுதினமான கால்நடைகளுக்கு மக்கள் நன்றி செலுத்துகின்ற (மாட்டுப் பொங்கல்) தினத்தன்று அதிகாலை 4.00 மணியளவில் முள்ளியவளைக் கிராமத்தைச் சுற்றிவளைத்தன.

முள்ளியவளைப் பிரதேச மக்கள் வழமை போலவே அதிகாலைப் பொழுதில் தமது காலைக்கடன்களில் ஈடுபட்டிருந்தனர். அப் போது தான் தமது பிரதேசம் இராணுவத்தின் சுற்றிவளைப்பிற்கு உட்பட்டிருப்பதை உணர்ந் தார்கள். சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் முள்ளியவளைப் பிரதேசத் தில் ஊடுருவி அங்கிருந்து ஏழு மாதக் கர்ப் பிணிப் பெண் மூன்று பிள்ளைகளின் தாயார் ஆகிய இரண்டு பெண்கள் உட்பட பதினேழு பேரைக் கைது செய்ததுடன, இவர்களின் வாழ்விடங்கள் பலவற்றையும் தீக்கிரையாக் கிச் சென்றனர். சிறிது நேரத்தில் (அரை மணி) சரமாரியான சூட்டுச் சத்தங்கள் கேட்டதை உற வினர்கள் அவதானித்தனர். சிறிது நேரத்தில் (அரை மணி) சரமாரியான சூட்டுச் சத்தங்கள் கேட்டதை உறவினர்கள் அவதானித்தனர். பிடித்துச் செல்லப்பட்டவர்களின் உறாவினர் கள் தவிர்ந்த ஏனையோருக்கு பதினேழு பேரும் உயிரிழந்து விட்டார்கள் எனும் செய்தி பரவத்தொடங்கியது.

சிறிது நேரத்தில் இராணுவ வாகனங்கள் முல்லைத்தீவை நோக்கி நகர்ந்தன. உற வினர்கள் தமது உறவுகளை ஒவ்வொரு வாகனங்களாகப் பார்த்துக்கொண்டிருந் தனர். ஒரு வாகனத்தில் மட்டும் சைக்கிள்கள், பொருட்கள் ஏற்றப்பட்டு இராணுவத்தினர் சென்றதைக் கண்ட உறவினரால் அதற்குள் உயிரிழந்தவர்கள் உடலங்கள் இருப்பதை அறியமுடியாமற் போனது.

அன்றையபொழுது மறைந்து மறுநாளும் தமது உறவினர்கள் வீடு திரும்பாத நிலையில் ஊரிலிருந் சமாதான நீதவான் திரு.தியாக ராசா என்பவருடன் முல்லைத்தீவு இராணுவ முகாமிற்குச் சென்றிருந்த போது அங்கு இறந் தவர்களின் உடல்கள் வீசப்பட்டிருந்தன. அங் கே வீசப்பட்டிருந்த உடல்கள், உடைகள் அற்றும், கைகள், கால்கள், தலைகள் என்பன துண்டிக்கப்பட்டும், உடல்களில் காயங்கள் பல ஏற்படுத்திக் கொலை செய்யப்பட்டும் இருந் ததைக் காணக்கூடியதாகவிருந்தது. அவற் றுள் கொலை செய்யப்பட்டிருந்த கர்ப்பணிப் பெண்ணின் இரண்டு கால்களும் துண்டிக் கப்பட்ட நிலையில் குழந்தை சுமந்த வயிற்றுப் பகுதி எரிக்கப்பட்டு சிசு பரிதாபமான முறையில் கொலை செய்யப்பட்டுக் கிடந்ததையும் காண முடிந்தது.

மற்றைய பெண்ணின் உடல் சிகரட் சூட்டுக் காயங்களுடன், அடையாளம் தெரியாத வகை யில் துன்புறுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட் டிருந்ததையும் கண்ணுற்று அனைவரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள். உறவினர்கள் அவ் உடல்களை இராணுவத்தினரிடமிருந்து தமக்கு தருமாறு கேட்ட வேளை கொல்லப்பட் டவர்கள் பயங்கரவாதிகளென கையொப்பமிட் டுத் தந்தால் மட்டுமே உடல்களை தருவோம் எனக்கூறி இராணுவம் மிரட்டியபோது மக்கள் அதனை ஏற்க மறுத்தனர். இதனால் இராணு வத்தினர் உடல்களை மக்களிடம் ஒப்படைக் காது தாமே அவ் உடல்களுக்குத் தீயிட்டனர்.

***இச்சம்பவத்தில் தனது கணவரையிழந்த தவரத்தினம் திலகவதி சம்பவம் பற்றிக் கூறியதாவது:***

“அதிகாலை 4.30 மணியளவில் வீடுகளுக்கு வந்த இராணுவத்தினர் சில பெண்களோடு எனது கணவர், மகன் உட்பட பதினேழு பேரைக் கைது செய்ததுடன், சிலரது வீடுகளை எரித்து சொத்துக்களையும் சூறையாடினர். பின் கைது செய்தவர்களை அருகிலிருந்த காடு நோக்கிக் கொண்டு சென்றனர். பின் பல சூட் டுச் சத்தங்கள் கேட்டது. அதன்பின் இரா ணுவத்தினரின் வாகனங்கள் முல்லைத்தீவு நோக்கிச் சென்றன. அதில் கொல்லப்பட்டவர் களின் உடல்களையும் படுகாயமடைந்தவர் களின் உடல்களையும் அதன்மேல் சைக் கிள்கள் மற்றும் பொருட்களையும் ஏற்றி எடுத் துச் சென்றனர்.

அடுத்தநாள் சமாதான நீதவானுடன் முல் லைத்தீவு சென்று பார்த்தபோது எல்லோரும் படுகொலை செய்யப்பட்டு உடலில் ஒரு துணி இல்லாத சடலங்களாகக் கிடந்தது. அவர்களது உடலை எடுத்துச் செல்லக்கேட்டபோது அவர் களைக் கொட்டி (புலிகள்) என்று கையெழுத் திட்டாலே கொண்டு போகமுடியும் என்றனர். அவர்கள் எல்லோரும் பொதுமக்கள் தவறாக கையெழுத்திட்டு உடல்களை பெற விரும் பாததால், அங்கு விட்டுவிட்டு வந்தோம்.”

***16.01.1985 அன்று முள்ளியவளைப் படு கொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. நாகரெட்ணம் ஸ்ரீஸ்கந்தராசா
02. குமாரசாமி விஜயகுமாரி (வீட்டுப் பணி)
03. பிலிப்பையா அன்ரன்யோகராசா (வயது 17 — கடற்தொழில்)
04. தம்பையா விவேகானந்தம் (மாணவன்)
05. மார்க்கண்டு தெட்சணாமூர்த்தி (வயது 19 — கடற்தொழில்)
06. செல்லத்துரை நவரட்ணம் (விவ சாயம்)
07. செல்லத்துரை குமாரசாமி (விவ சாயம்)
08. சுப்பன் சின்னன்
09. சின்னன் அன்னலட்சுமி (வீட்டுப் பணி)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெற முடியவில்லை.

# வவுனியா காத்தார் சின்னக்குளப் படுகொலை 17.01.1989

வவுனியா மாவட்டத்தில் வவுனியா பிரதேசசெயலர் பிரிவில் எல் லைப்புறக் கிராமமாகக் காத்தார் சின்னக்குளம் அமைந்துள் ளது. இங்கு வாழுகின்ற மக்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். இக்கிராமத்திற்கு அருகிற் குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்களால் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் நாள்தேறும் பல இன்னல்களை அனு பவித்து வந்தார்கள்.

இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்த பின்னர் 17.01.1989 அன்று காலை 9:00 மணியளவில் இந்திய இராணுவத்தினர் கிராமத்துக்குள் திடீரென நுழைந்ததை உணராத மக்கள் தமது வழமையான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவ் இந்திய இராணுவத்தினர் மக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் காலை உணவு எண்டுகொண்டிருந் தவர்கள், விவசாய அறுவடையில் ஈடுபட்டிருந்தவர்கள், கர்ப் பிணித்தாய், சிறுவர்கள் என இச்சம்பவத்தில் பதின்நான்கிற்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டார்கள். பலர் காயமடைந் தனர். பல வீடுகள் எரியூட்டப்பட்டன.

***17.01.1989 அன்று வவுனியா காத்தார் சின்னக்குளப் படு கொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. இராசைய மேகவர்ணன் (44)
02. இராமசாமி மருதமுத்து (-)
03. இராசலிங்கம் முத்தையா (75)
04. குப்பன் சின்னையா (75)
05. கறுப்பழகு சரஸ்வதி (32)
06. தர்மலிங்கம் சுந்தரலிங்கம் (14)
07. மாணிக்கம் செல்லம்மா (60)
08. மீனா சுப்பையா
09. அனுமந்து சுப்பிரமணியம்
10. அழகன் வீரையா
11. பொன்னுச்சாமி கறுப்பையா (36)
12. பெருமாள் மீனா (67)
13. பெருமாள் சின்னதம்பி (22)
14. சுப்பிரமணியம் (54)
15. சுப்பையா சின்னத்தம்பி (-)

காயமடைந்தவர்களின் விபரம்:

1. பஞ்சலிங்கம் நந்தினி
2. பஞசலிங்கம் தவமணி
3. சின்னமுத்து ஆறுமுகம்

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



காத்தார் சின்னக்குளப் படுகொலை 17 சனவரி 1989



# கிளிநொச்சி தொடருந்து நிலையப் படுகொலை – 25.01.1986




கிளிநொச்சி மாவட்டத்தின் மையமாக விளங்குவது கிளிநொச்சி நகரமாகும். இம்மாவட்ட மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் நகருக்கு வருவதனால், கிளிநொச்சி நகரம் ஒரு முதன்மையான இடமாக இருந்தது. பாடசாலை, சந்தை, தொடருந்து நிலையம், வைத்தியசாலை மற்றும் கச்சேரி என்பன நகரத்திலே அமைந்திருந்தன.

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள விடுதியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் நகருக்கு வரும் பொதுமக்களை விசாரித்தல், கைது செய்தல், அச்சுறுத்துதல் எனப் பல வழிகளிலும் பொதுமக்களைத் துன்பப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

1986 ஜனவரி இருபத்தைந்தாம் நாள் நண்பகல் 12.00 மணியளவில் கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து வந்த இராணுவத்தினர் கிளிநொச்சி தொடருந்து நிலையத்திற்கு அருகில் தெற்குப் புறமாக நின்ற பாலை மரங்களுள் ஒளிந்திருந்தார்கள்.

அதேநேரம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிகளை ஏற்றிவந்த தொடருந்து கிளிநொச்சி தொடருந்து நிலையத்தில் வந்து தரித்து நின்றது. பயணிகள் தொடருந்தில் ஏறிக்கொண்டிருந்த சமயம் மறைந்திருந்த படையினர் திடீரென பட பயணிகள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். மக்கள் செய்வதறியாது அங்குமிங்கும் ஓடினார்கள். ஏனையோர் தொடருந்து நிலையத்திற்குள்ளும், தொடருந்தின் இரு புறமும் படுத்துக் கொண்டார்கள். இச் சம்பவத்தில் நான்கு பெண்கள், இரண்டு சிறுவர்கள் உட்பட மொத்தம் பன்னிரண்டு பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

இச்சம்பவத்தில் காயமடைந்ததுடன், மனைவியையும் மகனையும் இழந்த சின்னையன் நல்லையா என்பவர் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில்:

நான் விவசாயம் செய்து வருகின்றேன். எனக்கு நான்கு பிள்ளைகள். இராணுவத்தின் பிரச்சினையால் இடம்பெயர்ந்து அக்கராயன் எட்டாம் கட்டையில் ஒரு தேவாலயத்திற் போய் இருந்தோம். அதன்பின்னர் கிடைத்த ஒரு வீட்டில் வசித்து வந்தோம். எனது மனைவி ஆசிரியையாக இருந்ததால் கல்வித் திணைக்களத்திலிருந்து அநுராதபுரம் வேலைமாற்றல் கடிதம் வந்தது தைப்பொங்கல் முடிந்த பின்னர், 1986 ஆம் ஆண்டு தை மாதம் இருபத்தைந்தாம் திகதி திங்கட்கிழமை பேருந்து ஒன்றும் கிடைக்காததால், தொடருந்தில் செல்ல அங்கு வந்தோம்.

அதேநேரம் அங்கு பல இடங்களிலிருந்தும் வந்த மக்களும் நின்றிருந்தார்கள். சரியாக பகல் 12.00 மணியிருக்கும் வாங்குகளில் நாங்கள் இருக்கும்போது சந்தைக்குப் பக்கத்தில் வந்த ஒன்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் திருவேல் என்பவரையும் அவரின் தகப்பனான கோழி வியாபாரியையும் சுட்டுவிட்டு தொடருந்துநிலைய வீதியால் வந்தார்கள். அந்த நேரம் நாங்கள் தொடருந்து நிலையத்தில் பயணிகள் ஏறும் இடத்தில் நின்றிருந்தோம். இராணுவத்தினர் அனைவரும் தோள்களில் துப்பாக்கியைக் கொழுவியிருந்தார்கள். நாங்கள் அனைவரும் பிரயாணம் செய்வதற்காக வந்தவர்கள் என்று பெரிதாகச் சொன்னோம். அப்போது அவர்கள் விரலைக் காட்டி உங்கள் எல்லோரையும் கொல்வோம் என்று சொல்லி முடிக்கு முன்னரே எம்மை நோக்கித் திடீரென சரமாரியாகச் சுட்டார்கள். அந்த இடம் ஒரே வெளியாக இருந்ததால், நாங்கள் எங்கே செல்வதென்று தெரியாமல் தொடருந்து நிலையத்தில் பொருட்கள் வைக்கும் அறைக்குள் ஓடி ஒளிந்துகொண்டோம். எல்லோரும் அதிலேயே காயப்பட்டார்கள்.

அதன் பின்னர் என்ன நடந்ததென்று எதுவும் தெரியாது. ஒரு மணித்தியாலத்தில் பின்னர் 1.30 மணியிருக்கும் சரியான தாகமாக இருந்தது. தண்ணீர் தண்ணீர் என்று கத்தினேன். அந்த நேரம் எனக்கு மேல் இரண்டு பேர் இறந்து கிடந்தார்கள். அதனால் கை மற்றும் கால்களை எடுக்க இயலாது இருந்தது. எல்லா இரத்தமும் ஓடியதால் காதுகள் எல்லாம் அடைத்திருந்தது. திரும்பவும் தண்ணீர் தண்ணீர் எனக் கத்தியபோது எனது ஐந்து வயது மகன் சுவர்க்கரையாக இருந்து எழும்பினார். அவருக்குக் கையில் துப்பாக்கிச் சன்னம் பட்டு கை சிதைந்து போயிருந்தது. மற்றைய பக்கம் திரும்பிப் பார்த்தபோது அந்த மூலைக்குள் என்னுடைய மூன்றாவது மகன் இறந்த ஒரு பெண்ணின் மேல் தொங்கிக்கொண்டிருந்தார். எனது மனைவி எனக்கு நேராக விழுந்து கிடந்தார். ஏனைய மக்கள் ஆங்காங்கே விழுந்து கிடந்தார்கள். ஆனால் எத்தனை பேர் இறந்தார்கள் என்று தெரியாது. இன்னொரு பக்கத்தில் சாந்தபுரத்தைச் சேர்ந்த ஒருவர் காலிற் காயம் பட்டுக் கத்திக் கொண்டிருந்தார். அப்போது என்னுடைய மகன்தான் பானைக்குள்ளிருந்த தண்ணீரை எடுத்துத் தர அதைக் குடித்தேன். அதன் பின்னர் அப்படியே மயங்கிவிட்டேன். அதற்குப் பின்னர் என்ன நடந்ததென்று தெரியாது.

பின்னர் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் முழித்துப் பார்த்தேன். அதன் பின்பு தான் என்னிடம் வந்த தாதிமார் நடந்தவற்றைச் சொல்லித்தான் எனது மனைவியும் பிள்ளையும் இறந்தது பற்றிக் கேள்விப்பட்டேன். இறந்த எனது மனைவி மற்றும் ஒரு மகனையும் என்னுடனேயே கொண்டு வந்திருந்தார்கள். ஆனால், இருவரும் இறந்ததால் உடனடியாக கிளிநொச்சிக்குக் கொண்டு போய் விட்டார்கள். எனது உடம்பெல்லாம் காயம்பட்டதனால் நான் தப்பமாட்டேன் எனப் பலரும் சொன்னார்கள். ஏதோ தெய்வாதீனமாக உயிர் தப்பிவிட்டேன். என்னால் அவர்களின் மரணச் சடங்கிற்கூடக் கலந்துகொள்ள முடியாத நிலையில் அவாக்ளின் உடலை எனது மைத்துனர் தான் முறைப்படி அடக்கம் செய்தார்.

இயங்க முடியாத நிலையில் இருந்தேன். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அனுப்பினார்கள். அங்கும் கையும் காலும் கழற்ற வேண்டும் என்றே சொன்னார்கள். பின்பு அதற்குச் சம்மதிக்காததால், நீண்ட நாட்களிற்குப் பின்பு உடல் தேறினேன். இப்பவும் என்னால் ஒரு தண்ணீர் வாளியைக் கூடத் தூக்கமுடியாத நிலையில் கஸ்ரப்படுகின்றேன். அந்தச் சம்பவத்திற்குப் பின்பு என் மகன்மார் தான் என்னைப் பார்க்கிறார்கள். முன்புபோல் வயல் வேலைகள் மற்றும் தோட்ட வேலைகளைச் செய்யவோ முடி யாத நிலையில் இருக்கிறேன். ஒவ்வொரு முறையும் வேதனைப படும் போதும் எமதினத்தின் விதியை நினைத்தே கவலைப் படுவேன்.

இச்சம்பவத்தில் காயமடைந்த சாந்தபுரத்தைச் சேர்ந்த அருணாச்சலம் ஆறுமுகம் சம்பவம் பற்றிக் கூறுகையில்:

என்னுடைய சொந்த ஊரான கண்டிக்குப் போய் 25.01.1986 ம் திகதி திரும்பி வந்து கிளிநொச்சி தொடருந்து நிலையத்தில் இறங்கி நின்றேன். அந்த நேரம் இராணுவத்தினர் தொடருந்தில் போவதற்கு நின்ற பொதுமக்கள் மீது திடீரெனச் சுட்டார்கள். தொடருந்து நிலையத்திற்குப் பின்புறமுள்ள கிணற்றடியில் நின்ற இரு இராணுவத்தினரே சுட்டார்கள். அப்போது எனக்கு சன்னங்கள் கையிலும் காலிலும் பட்டவுடன் நான் கீழே விழுந்து விட்டேன். எழும்ப முயற்சி செய்தபோது என்னால் முடியவில்லை. அப்போது தான் உணர்ந்தேன் எனது இரண்டு கையும் காலும் முறிந்து விட்டதென்று . கண்விழித்துப் பார்த்த போது வைத்தியசாலையிலிருப்பதைப் புரிந்துகொண்டேன். எனது காயத்திற்குச் சிகிச்சை செய்யப்பட்டிருந்தது. அடுத்த நாள் விடியற்காலை தான் பூரணமாக நினைவு திரும்பியது. அதன் பின் ஏன் இராணுவத்தினர் எம்மீது சுட்டார்கள் என வினாவிய போது துப்பாக்கிச் சூடு நடத்திய படைச் சிப்பாய்க்கு மூளை சுகமில்லை என்று அப்போது கிளிநொச்சியில் இராணுவத் தளபதியாக இருந்த கொப்பெக்கடுவ கூறியிருந்ததாகக் கூறினார்கள். ஆனால் இரண்டிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் எம்மீது தாக்குதல் நடத்திவிட்டு இவ்வாறு கூறியது தமிழர்களை அழிக்க வேண்டும் என்று அவர்கள் திட்டமிட்டுச் செயற்படுவதை



உறுதிப்படுத்துகின்றது.

அரசாங்கம் இச்சம்பவம் தொடர்பாகப் பின்வருமாறு தெரிவித்தது.

"மனநோயாளியான படைச்சிப்பாய் சுட்டதில் கிளிநொச்சி தொடருந்து நிலையத்தில் பொதுமக்கள் பலியானார்கள். இதற்காக அரசாங்கம் மன்னிப்புக் கோருகின்றது." என்று கூறியதைத் தவிர அரசாங்கம் மேற்கொண்டு எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

25.01.1986 அன்று கிளிநொச்சி தொடருந்து நிலையப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

01. சோமசேகரம் ஜெயசீலன் (வயது 16 – மாணவன்)
02. தவராசா சின்னமணி (வயது 40 – வீட்டுப்பணி)
03. தவராசா சுகந்தினி (வயது 11 – சிறுமி)
04. துரைசாமி கதிர்காமு (வயது 18 – நீர்பாசனத் தொழிலாளி)
05. பாண்டியன் சிவகுரு (வயது 26 – வியாபாரம்)
06. குலசேகரம் தங்கம்மா (வயது 64)

# மன்னார் வட்டக்கண்டல் படுகொலை – 30.01.1985

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கட்டுக்கரைக்குளக் கரையோரமாக விவசாய நிலப்பரப்புடன் வட்டக்கண்டல் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தவர்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர்.

1985ஆம் ஆண்டு தை மாதம் முப்பதாம் திகதி வட்டக்கண்டல் கிராமத்தில் வசித்து வந்த அப்பாவித்தமிழ் மக்கள் மீது சிறீலங்கா இராணுவத்தின் தரைப்படையும், விமானப்படையினரும் இணைந்து தாக்கினார்கள். 1985ஆம் ஆண்டு தை மாதம் முப்பதாம் திகதி அதிகாலை 5.00 மணியளவில் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இருநூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மதவாச்சி வீதி வழியாக வந்து கட்டுக் கரைக் குளக்கரை வழியாக வட்டக்கண்டல் கிராமத்தில் நிலைகொண்டனர்.

பின்னர் காலை 6.30 மணிக்கு துப்பாக்கி பிரயோகம் செய்த வண்ணம் வட்டக்கண்டல் கிராமத்திலுள்ள வீடுகளுக்குள் புகுந்து எதிர்ப்பட்டவர்களையெல்லாம் சுட்டும் கூரிய ஆயதங்களாலும் தாக்கினர். அவ்வேளையில் விமானப்படையின் உலங்குவானூர்த்தி மக்கள் குடியிருப்புக்களைத் தாக்கியது.



பின்னர் வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலைக்குள் பல இராணுவத்தினர் புகுந்து அங்கு கல்விச்செயற்பாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பதினெட்டுப் பேரைச் சுட்டுக்கொன்றனர்.

இச்சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஏனைய இராணுவத்தினர் வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்களையும், வீதிகளில் நடமாடியவர்களையும், ஆண்கள் பெண்கள் என்ற பேதமின்றிச் சித்திரவதைக்கு உள்ளாக்கிச் சுட்டார்கள். பின்னர் வீடுகளினுள் புகுந்து தனித்திருந்த பெண்களைப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தினார்கள் இராணுவத்தினர் ஆறு மணித்தியாலத்திற்கு மேலாக மக்கள் மீது நடாத்திய தாக்குதல் பிற்பகல் 2மணிவரை தொடர்ந்தது பின் சடலங்களில் சிலவற்றை பொதுமக்களைக் கொண்டு பொது மக்களின் வாகனங்களில் ஏற்றிக்கொண்டு தள்ளாடி இராணுவ முகாமிற்குச் சென்றனர். இராணுவம் கிராமத்தினை விட்டுச் சென்றதன் பின்னர் அயற்கிராமத்தவர்கள் இறந்தவர்களின் உடல்களை தேடியெடுத்து அடக்கம் செய்ததுடன், காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கும் எடுத்துச்சென்றனர். இராணுவத்தின் திட்டமிட்ட பொதுமக்கள் மீதான தாக்குதலினால் ஐம்பத்திரண்டு பொதுமக்கள் உயிரிழந்தார்கள். நாற்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

***சம்பவத்தை நேரில் கண்ட மன்னார் வட்டக்கண்டலைச் சேர்நத் ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை தெரிவிக்கையில்:***

"1985ஆம் ஆண்டு தை மாதம் முப்பதாம் திகதியன்று காலை

# மன்னார் வட்டக்கண்டல் படுகொலை – 30.01.1985

6.00 மணிதொடங்கி இராணுவத்தினரின் துப்பாக்கிச் சத்தம் கேட்டபடியிருந்தது. எங்களுடைய வீடு பிரதான வீதியிலிருந்து சற்றுத் தொலைவிலிருந்தது ஓடிவந்த மக்கள் என்ன காரண மெனத் தெரியாது இராணுவத்தினர் சுட்டுக்கொண்டு வருகிறார்கள் எனக் கூறியவாறு எங்கள் வீதி வழியாக ஓடினார்கள். பின்னர் அவர்களுடன் சேர்ந்து நாங்களும் ஓடினோம். இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் பாடசாலை அதிபரும் இரண்டு ஆசிரியர்கள் மற்றும் வீதியாற் சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் சிலரும் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்திற் பங்குகொண்ட இராணுவத்தினர் அனைவரும் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து யு – 14 என்று சொல்லப்படும் மன்னார் – மதவாச்சி வீதியால் கட்டுக்கரைக்கு வந்து பெரிய உடைப்பு அணைக்கட்டைக் கடந்து வண்டக்கண்டற் கிராமத்திற்கு வந்து இந்த அட்டூழியங்களைப் புரிந்தனர். இச்சம்பவத்தின் போது மொத்தமாக நாற்பத்தெட்டு அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள். இவர்கள் அனைவரினதும் மரணப் புத்தகங்களில் மரணத்திற்கான காரணம் இராணுவத்தால் சுடப்பட்டு இறப்பு என்றே பதியப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.”

***30.01.1985 அன்று வட்டக்கண்டல் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. பொன்னர் பொன்னப்பன - ராசா (வயது 30 – மீன்பிடி)
02. சந்தான் தொம்மைமியேஸ் (வயது 28 – விவசாயம்)
03. சவிரியான் அல்போன்ஸ்பறுலா (வயது 25 – விவசாயம்)
04. மடையப்பன் பாண்டியப்பன் (வயது 24 – கமம்)
05. முத்தண்ணதேவர் நடராசா (வயது 39)
06. முருகேசு தம்பிப்பிள்ளை (வயது 55)
07. இராசு செல்வராசா (வயது 30 – சாரதி)
08. கன்னிக்கவுண்டர் சுந்தரலிங்கம் (வயது 23 – விவசாயம்)
09. கறுப்பையா ஜெயரத்தினம் (வயது 25)
10. பிறஞ்சி கைத்தான் (வயது 27 – கமம்)
11. பிறஞ்சி சாமிநாதன (வயது 37 – கமம்)
12. திருமால் ராமச்சந்திரன் (வயது 26)
13. மனுவல் பீற்றர் சாள்ஸ் (வயது 45)
14. அலெக்சாண்டர் பர்ணாந்து (வயது 72)
15. அருணாசலம் சுந்தரமூர்த்தி (வயது 45)
16. செபமாலை பெனான்டோ (வயது 21 – வியாபாரம்)
17. செல்லையா இராமசாமி (வயது 35 – விவசாயம்)
18. வெள்ளைச்சாமி முத்துராசா (வயது 20 – விவசாயம்)
19. செல்லையா இராமசாமி (வயது 30)
20. வெங்கடாச்சலம் தேவராஜ் (வயது 34 – கமம்)
21. வெள்ளைச்சாமி முத்துராசா (வயது 35)
22. ஞானப்பிரகாசம் செபமாலை (வயது 22 – கமம்)
23. சந்தியோகு அந்தோனி (வயது 40 – கமம்)
24. சுப்பன் பழனி (வயது 42)
25. சுப்பிரமணியம் சண்முகநாதன் (வயது 33 – தொழிலாளி)
26. சின்னையா சேருவராஜன் (வயது 33 – தொழிலாளி)
27. சிறிகோரி றெட்ணதுரை (வயது 32)
28. ராமன் தங்கராசா (வயது 56)
29. ராமசாமி அற்புதராசா (வயது 19)
30. இராமன் தங்கராசா (வயது 35 – விவசாயம்)
31. இராமச்சந்திரன் தெய்வேந்திரன் (வயது 18 – விவசாயம்)
32. இராமசாமி செல்வராசா (வயது 27 – விவசாயம்)
33. முத்துச்சாமி சத்தியசீலன் (வயது 42 – விவசாயம்)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# கொக்கட்டிச்சோலைப் படுகொலை – 28.01.1987



இலங்கையின் கிழக்குப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டம் அமைந்துள்ளது. இங்கு இயற்கைவளம் நிறைந்த பகுதியாக கொக்கட்டிச்சோலை அமைந்துள்ளது. அத்துடன் பெயர் பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. இங்குள்ள மக்களின் பிரதான தொழில் விவசாயம், மீன்பிடி அத்துடன், இறால் வளர்ப்பு என பனவாகும்.

இக்கிராமத்தின் மீது 28.01.1987 இல் சிறீலங்கா இராணுவத்தின் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. கொண்டவெட்டுவான், களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, கல்லடி ஆகிய இடங்களிலிருந்து கவசவாகனங்களுடன் முன்னேறிய இராணுவத்திற் குண்டுவீச்சு விமானங்களும் உலங்குவானூர்திகளும் மேலதிக உதவித் தாக்குதல்களை வழங்க கொக்கட்டிச்சோலை கிராமத்தினுள் நுழைந்த படையினர் அம்மக்களை மிகமோசமாகத் தாக்கிச் சித்திரவதை செய்ததுடன், படுகொலைகளையும் செய்தனர். இதில் குறிப்பாக அமெரிக்க் நிதி உதவி, கண்காணிப்புடன் மகிழடித்தீவு இறால் பண்ணை இயங்கி வந்தது. இங்கு பெருமளவு ஏழை மக்கள் வேலை செய்து வந்தனர். அங்கு வேலை செய்த நூற்றுமுப்பத்தைந்து பொது மக்களை வெட்டியும் சுட்டும் படுகொலை செய்து இறால் பண்ணைக்குள்ளேயே போட்டதால் இறால் பண்ணை மனித உடல்களை கொண்ட இரத்தப் பண்ணைகளாக காட்சியழித்தது. அத்துடன் கொக்கட்டிச்சோலை அரிசியாலையில் தஞ்சமடைந்திருந்த இருபத்துநான்கு பேரும் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

இதில் 12 வயது நிரம்பிய 7 சிறுவர்களும் உளளடங்குவார்கள். இதில் குறிப்பாக பன்னிரண்டு வயது தொடக்கம் நாற்பது வயதிற்குட்பட்ட இருநூறிற்கு மேற்பட்டவர்கள் அடையாளங் காணப்பட்டு சித்திரவதைகளின் பின் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் பலர் காயப்படுத்தப்பட்டனர்.

மேலும் அம்பிலாந்துறை என்ற கிராமத்தில் நாற்பத்தைந்து பொதுமக்களை கொன்ற இராணுவத்தினர் அவர்களின் உடல்களை தீயிட்டுக் கொளுத்திய சம்பவம் உட்பட பல தொடர் படுகொலைச் சம்பவங்கள் 28,29,30 .01.1987 ஆகிய மூன்று நாட்களிற்குள்ளும் கொக்கட்டிச்சோலையிலும் அதன் அயல் கிராமங்களிலும் நடந்தேறியது.

***28.01.1987 அன்று கொக்கட்டிச்சோலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. இ. உதயகுமார்
02. இ.கமலாதேவி
03. இ.கணேசமூர்த்தி
04. இ.தங்கம்மா
05. இ.தங்கவேல்
06. இ.மேகலிங்கம்
07. இ.வேலாப்பொடி
08. இ.சிவபாதம்
09. இராசரெத்தினம் தம்பிராசா
10. டி.ராஜினி
11. ந.இன்பராசா
12. ந.குழந்தைவேல்
13. ந.யோகேஸ்வரி
14. ந.கோபாலப்பிள்ளை
15. ந.சுப்பிரமணியம்
16. ந.சுவாஜினி
17. நா.விநோதகுமாரி
18. கு.ரூபவதனி
19. க.யுகாமினி
20. க.உலகநாதன்
21. க.நாகராசா
22. கு.நிசாந்தன்
23. கு.நறுமலாதேவி
24. க.நல்லம்மா
25. க.கந்தையா
26. அ.சத்தியானந்தம்
27. க.கந்தப்பெருமாள்
28. க.கஜேந்திரன்
29. க.கிருஸ்ணபிள்ளை
30. க.பாலச்சந்திரன்
31. க.புவனேஸ்வரி
32. க.பரமேஸ்வரி
33. க.மலர்விழி
34. க.கோபாலப்பிள்ளை
35. க.தெய்வநாயகம்
36. க.சோமசுந்தரம்
37. க.சௌந்தரராசா
38. க.சௌந்தரராஜன்
39. க.ஞானமுத்து
40. கு.சந்திரசேகரம்
41. கு.சுகந்தன்
42. க.சுப்பிரமணியம்
43. கு.சாந்தலிங்கம்
44. கு.சுதாகரன்
45. க.சுவேஜினி
46. க.சின்னத்தம்பி
47. கு.சிவமணி
48. கு.விகாந்தன்
49. க.ரவீந்திரன்
50. கதிர்காமத்தம்பி தயானந்தம்
51. கி.கந்தசாமி
52. கி.கந்தவனம்
53. கி.குமாரதாசன்
54. கி.பாலிப்பொடி
55. கி.பாலசுந்தரம்
56. கி.பவான்
57. கி.பொன்னுத்துரை
58. கி.றோமிகரன்
59. கி.சின்னமுத்து
60. கி.சிவஞானசிவம்
61. ப.கங்கா
62. பு.வேணுகரன்
63. ப.சண்முகம்
64. ப.சண்முகராசா
65. பா.நடராசா
66. பா.அம்பிகைபாலன்
67. பா.சுதாகரன்
68. த.இளங்கோ
69. த.இராசேந்திரன்
70. த.கனகசிங்கம்
71. த.முருகேசு
72. த.சந்திரசேகரம்
73. த.சசிகரன்
74. மு.நடேசன்
75. ம.பாலசுப்பிரமணியம்
76. மு.சத்தியசீலன்
77. ம.சிதம்பரநாதன்
78. மு.வசந்தராசா
79. மா.நல்லரத்தினம்
80. மா.கணபதிப்பிள்ளை
81. மா.பரஞ்சோதி
82. மா.மகேஸ்வரி
83. மா.ஜெயந்திமலர்
84. மா.செல்லத்தம்பி
85. அ.குணமணி
86. அ.பாக்கியராசா
87. அ.பிரேமசசிகலா
88. அ.பிரேமலதா
89. அ.தர்சனா
90. அ.கோமணதாஸ்
91. அ.ரேவதி
92. அ.சந்திரப்பிள்ளை
93. யோ.சீதேவிப்பிள்ளை
94. கே.நடராசா
95. கே.அமிர்தலிங்கம்
96. கே.சௌந்தரராசா
97. கோ.நாராயணப்பிள்ளை
98. கோ.அமிர்தராசா
99. செ.பவானி
100. சோ.இளந்திரையன்
101. சோ.கபிலன்
102. சோ.மாணிக்கப்பொடி
103. சோ.விஜயலிங்கம்
104. வே.இராசையா
105. வே.நல்லதம்பி
106. வே.அரியநாயகம்
107. வே.விசுமாப்பொடி
108. வே.வள்ளியம்மை
109. வேலாச்சி இராசையா
110. ஞ.நடேசம்
111. ஞா.குருகுலசிங்கம்
112. சு.இராஜேஸ்வரி
113. சு.குணதுங்கா
114. ச.தியாகராசா
115. ச.மகேஸ்வரன்
116. ச.சந்தோசம்
117. ச.சுதாகரன்
118. சு.சிவனேசராசா
119. சு.ஏகாம்பரம்
120. சி.புவனேஸ்வரி
121. சீ.புவனேசசிங்கம்
122. சி.தில்லைநாயகம்
123. சி.மயில்வாகனம்
124. சி.மயிலுப்பொடி
125. சி.மகேந்திரமூர்த்தி
126. சி.யோகநாதன்
127. சி.வேலாப்பொடி
128. சி.லவன்
129. வ.ஜீவரத்தினம்
130. வ.குழந்தைவேல்
131. வ.முத்துத்தம்பி
132. வ.யோகேஸ்வரன்
133. வ.விஜயசிங்கம்

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# புதுக்குடியிருப்புச் சந்தி படுகொலை – 30.01.1991




முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவிலிருந்து ஏறக்குறைய இருபது கி.மீ. தூரத்தில் புதுக்குடியிருப்புச் சந்தி அமைந்துள்ளது. இச்சந்தியில் ஒட்டுசுட்டான் முள்ளியவளை, முல்லைத்தீவு, பரந்தன் சந்திகள் சந்திக்கின்றன. புதுக்குடியிருப்பு ஒரு நகரப்பகுதியாகும்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் 1980களின் பின்னர் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து இடம்பெயர்ந்த மக்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் முல்லைநகர், மணலாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுகேணி, தென்னமரவடி போன்ற கிராமங்களிலிருந்து சிங்கள இராணுவ நடவடிக்கைகள் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக இடம் பெயர்ந்தவர்கள். 1991 ஆம் ஆண்டில் ஆயிரத்து ஐந்நூறிற்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் புதுக்குடியிருப்புக்கு அருகிலுள்ள சுப்பிரமணிய வித்தியாசாலையில் இருந்தனர்.

1991.01.30 அன்று மாலை 5:30 மணியளவில் சிறீலங்கா சிங்கள விமானப்படையின் இரண்டு "மொம்பர்" குண்டுவீச்சு விமானங்கள் மூன்று தடவைகள் புதுக்குடியிருப்புச் சந்திப் பகுதியில் குண்டு வீசித்தாக்கின. குண்டுகளில் பெருமபாலானவை சந்திப் பகுதியிலும், அதன் அண்டிய பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன.

குண்டுவீச்சினால் சந்தியெங்கும் ஒரே புகைமண்டலம். குண்டுவீச்சு நடந்துமுடிந்த அதேசமயம் அப்பகுதிக்கு விரைந்த, மக்களும், மனிதநேய அமைப்புக்களும் இணைந்து ஐம்பதிற்கும் மேற்பட்ட காயப்பட்ட பொதுமக்களை புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அனுப்பினர். இறந்து இருபது பேரினது உடல்கள் மிட்கப்பட்டன. எங்கும் ஒரே அழுகுரல்கள் இரவாகிக் கொண்டிருந்தமையால் இறந்தவர்களை உடனடியாக மீட்கமுடியவில்லை. காயமடைந்தவர்களில் ஆபத்தான நிலையிலிருந்தவர்கள் அன்றிரவே யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். அவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் மூவர் கொண்டு செல்லும் வழியிலேயே பரிதாபகரமாக உயிரிழ்ந்தார்கள்.

அடுத்தநாள் காலை மீண்டு மக்களும், மனிதநேய அமைப்புக்களும் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் தேடுதல் மேற்கொண்டபோது, மேலும் ஐந்து பேரினது இறந்த உடல்கள் மீட்கப்பட்டன. இந்த தாக்குதலால் மொத்தம் இருபத்தெட்டுப் பொதுமக்கள் உயிரிழந்தும், ஐம்பதிற்கும் மேலானோர் காயமடைந்தும் இருந்தனர். சிங்கள விமானப் படையினரது பொதுமக்கள் மீதான தாக்குதலால் புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதி ஒரு மாதத்திற்கும் மேலாக சோகமயமாகவே காணப்பட்டது.

இறந்தவர்களில் இடம்பெயர்ந்து அடைக்கலம் தேவடிவந்த எட்டுப் பொதுமக்களும் அடங்குவர். இத்தாக்குதலில் உயிர்காக்கப் காப்பகழிக்குள் பாய்ந்த நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணின் பிள்ளை பிறந்ததிலிருந்து நரம்பு பாதிக்கப்பட்டவராக நடக்க முடியாதவராகத் தற்போதும் இருக்கின்றார்.

திருமலையிலிருந்து இடம்பெயர்ந்து வசித்து வந்த வி. சித்திரா தேவி தெரிவிக்கையில்...

"திருமலை சொந்த இடம். இடம்பெயர்வு காரணமாக புதக்குடியிருப்பு கிராமக்கோடு முகாமில் வசித்து வந்தோம். 1991.01.30 அன்று மாலை 5:30 மணியளவில் வந்த விமானப்படை பொம்பர் விமானங்கள் பல குண்டுகளைப் போட்டன. இதன் போது நகர்ப்பகுதியும் சந்தையும் சில கடைகளும் நாசமாகின. எங்கும் ஒரே புகை மண்டலம். நான் எமது ஊரைச் சேர்ந்த அசோக் என்பரைத் தேடிச் சென்றபோது அவர் நடத்தி வந்த சைக்கிள் கடையில் அவர் பிணமாகக் கிடக்கக் கண்டேன். இதில் அதிகமானோர் இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்டவர்களாவார். இச்சம்பவத்தினால் அதிர்ச்சி அடைந்த எனது மகள் இன்று வரையும் வாய் பேசமுடியாதுள்ளார்."

30.01.1991 அன்று புதுக்குடியிருப்புச் சந்திப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

1. இராசையா பத்மராசா (அரச ஊழியர் - 37)
2. கந்தையா ஜெகதீஸ்வரன் (மாணவர் - 14)
3. கந்தசாமி கவிதா (மாணவி - 14)
4. கதிர்காமச்சந்திரன் (கடற்றொழில் - 26)
5. கிருஸ்ணசாமி மகேந்திரராசா (மாணவர் - 20)
6. பாலசுப்பிரமணியம் கண்ணதாசன் (தனியார்தொழில் - 21)
7. பசுபதி அரிகரன் (மாணவர் - 14)
8. மயில்வாகனம் சிறீகந்தன் (தனியார்தொழில் -25)
9. முருகேசு சித்திரவேலு (கடற்றொழில் - 65)
10. ஜெயநாதன் சிவபாக்கியம் (தனியார்தொழில் - 36)
11. செல்லையா நாகமணி (60)
12. சுப்பிரமணியம் சிவானந்தம் (விவசாயம் - 59)
13. சின்னசாமி கந்தசாமி (தனியார்தொழில் - 46)
14. சின்னவன் கிருஸ்ணபிள்ளை (விவசாயம் -52)
15. சிவராஜசேகரன் கலைச்செல்வி (மாணவி – 19)
16. சிவராஜசேகரன் கலைச்செல்வன் (மாணவன் - 19)
17. வீரகசத்தி கிட்டினப்பிள்ளை (விவசாயம் - 70)
18. வீரசிங்கம் திலீப்குமார் (மாணவன் - 19)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# மானிப்பாய் படுகொலை – 16.01.2006

யாழ்ப்பாணம் மானிப்பாய்ப் பகுதிக்கு வெள்ளை வானில் வந்த ஆயுதக்கும்பல் ஒன்றினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள் மூவர் சுட்டு கொல்லப்பட்டனர். மானிப்பாய் இந்தக்கல்லூரிக்கு முன்பாக உள்ள செல்லமுத்து கனகசபாபதி வீதியில் அமைந்துள்ள நாகேந்திரம் போஜன் என்பவரின் இல்லத்தில் இந்தப் பயங்கரம் நிகழ்ந்திருக்கின்றது. நள்ளிரவு தாண்டி சற்று நேரத்தில் வெள்ளை வான் ஒன்றில் சிவில் உடையில் வந்த ஒன்பது பேர் அடங்கிய குழுஒன்று வீட்டில் உறக்கத்தில் இருந்தவர்களை குரல்கொடுத்து எழுப்பியிருக்கின்றது. தங்களை இராணுவத்தினர் என்று தெரிவித்து வீட்டை சோதனையிடப் போவதாகக் கூறிய அக்குழுவினர் வீட்டிலிருந்த அனைவரையும் வெளியே வருமாறு அழைந்தனர். பீதியடைந்த குடும்பத்தினர் வெளியே வந்தபோது அவர்கள் மீது சராமரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

தந்தை, தாய், மகன், மகள்கள் இருவர், மருமகன் என ஏழு பேர் அவ்வீட்டில் இருந்தனர். ஆயுதபாணிகள் முதலில் மகள் ஒருவரையும் பின்னர் தாய் மற்றும் ஏனையோரையும் நோக்கிச் சுட்டுள்ளனர். இந்த வெறியாட்டம் முடிந்த சிறிது நேரத்தில் இனந்தெரியாத அக்குழுவினர் வானில்ஏறித் தப்பிச்சென்றுவிட்டனர். உயிரிழந்த முத்தமகள் ரேணுகாவின் கணவரான தியாகேஸ்வரன் காயம் ஏதுமின்றி தப்பினர். சம்பவம் நடந்த வீட்டு உரிமையாளரான நாகேந்திரம் போஜன் இலங்கை காங்கேசன்துறை சாரண ஆணையாளராக நீண்ட காலம் வேசையாற்றியவர். அத்துடன் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி படைப்பிரிவு வடபிராந்திய ஆணையாளராகவும் பணியாற்றியவர் என்து குறிப்பிடத்தக்கதாகும்.

16.01.2006 அன்று இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர் விபரம்:

01. போஜன் அர்த்தநாரீஸ்வரி (51)
02. தியாகேஸ்வரன் ரேணுகா (30)
03. போஜன் சண்முகா (24)

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் விபரம்

01. நாகேந்திரம் போஜன் (55)
02. நாகேந்திரம் உல்லாசனன் (26)







# மன்னார் மடுப் படுகொலை – 29.01.2008

6. ரஞ்சன் ராஜசூரியர் யுடக்சியா றூப்ளின் - 11 (மாணவி)
7. பிரான்சிஸ் சேவியர் மதுசாலினி – 16 (மாணவி)
8. அன்ரன் கொண்ஸ்ரன்ரயின் மேரிகொண்சீற்றா – 16 (மாணவி)
9. அனித்தா – 16 (மாணவி)
10. ற. தனுசிகா – 16 (மாணவி)
11. ரெசிற்றா – 38 (ஆசிரியர்)
12. துசிதா – 35 (ஆசிரியர்)
13. நிர்மலா றஞ்சினி – 36(ஆசிரியர்)
14. குணசீலி – 45 (ஆசிரியர்)
15. ஞானசூரியர் - 35 (அஞ்சல் ஊழியர்)
16. ஞானசூரியர் ஜசிந்தா – 34 (வீட்டுப்பணி)
17. அந்தோனி பீரிஸ் போனா பீரிஸ் - 22 (வீட்டுப்பணி)
18. பாக்கியநாதன் - 60
19. இன்னுமொருவர் (?)









# தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் கடத்திப் படுகொலை – 16.01.2006

2006 ஜனவரி 29 ஆம், 30ஆம் நாட்களில் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் 10 பணியாளர்கள் வெவ்வேறு சந்தர்ப் பங்களில் பொலநறுவ மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தப் பிர தேசத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டனர். அவ்வேளையில் அவர்கள் மட்டக்களப்பு அலுவலகத்திலிருந்து கிளிநொச்சியி லுள்ள அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்தார்கள். ஒரு சில நாட்களின் பின்னர் இரு பெண்கள் விடுதலை செய்யப்பட் டனர். இன்னொரு பெண்ணான எஸ் டோசினி என்பவரும் கடத்தல் காரர்களால் விடுதலை செய்யப்பட்டார். ஏனைய ஏழு பணியாளர் களும் இற்றைவரை காணாமலே போயுள்ளனர்.

இவர்களை விடுதலை செய்யுமாறு 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் சர்வதேச மன்னிப்புச் சபை ஓர் அவசர வேண்டுகோளை விடுவித்திருந்தது. இந்தப் படுகொலையானது இந்தியாவினுடைய நீதிபதி ஒருவர் தலைமை தாங்கிய சர் வதேச நிபுணத்துவம் வாய்ந்த விசாரணைக் குழுவின் முன் னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட வேண்டுமென சிறீலங் கா அரசாங்கத்தால் செய்யப்பட்ட பல படுகொலைச் சம்பவங் களில் இதுவும் ஒன்றாகும். இந்த நிபுணத்துவக் குழுவானது 2008 ஆம் ஆண்டு இந்த படுகொலை தொடர்பாக மேற்கொள் ளப்பட்ட புலன் விசாரணைகளில் அதிருப்தி அடைந்தவர்களாக இக்குழுவை விட்டு முற்றாகவே வெளியேறியுள்ளனர்.

***தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் கடத்திக் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. காசிநாதர் கணேசலிங்கம் (53)
02. தங்கராசா கதிர்காமர் (43)
03. தனுஸ்கோடி பிறேமினி (25)
04. தர்மராஜ் வசந்தராஜன் (24)
05. சண்முகாநதன் கஜேந்திரன் (24)
06. கைலாசபிள்ளை ரவீந்திரன் (26)
07. அருள்நேசராசா சதீஸ்கரன் (23)




# மன்னார் மடுப் படுகொலை – 29.01.2008



மன்னார் மாவட்டத்தில் மடுப் பிரதேச செயலர் பிரிவில் மடு என்னும் கிரமாம் அமைந்துள்ளது இங்கு இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகவும் புனித யாத்திரையித் தளமாகவும் விளங்குகிற மடுத்தேவாலயம் அமைந்துள்ளது.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் இனமத வேறுபாடின்றி மக்கள் வந்து தரிசிக்கின்ற ஒரு புனித தலமாகவே மடுத்திருப்பதி விளங்குகிறது .இப்பகுதியில் வசிப்பவர்கள் அனைவருமே கிறிஸ்தவ மதத்தைச் சார்ந் தவர்கள் என்பதுடன் இவர்கள் மடுத்திருப்பதிக்கு தொண்டு செய்வதிலே பெரிதும் அக்கறை கொண்டவர்களாக, மிகவும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர் .

இங்கு வசிக்கின்றவர்களில் அதிகமானோர், 1990 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடம் எனக் கருதி மடுத்திருப்பதியில் தஞ்சம் புகுந்தவர்கள்.

2007 நவம்பர் 13 ஆம் நாள் மடுத்தேவாலய வளாகம் மீது சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைவீச்சில் 05 வயதுச் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டதுடன் வயோதிபப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார். இதன் காரணமாக மக்கள், அச்சமடைந்து பெரியமடு கூராய் கள்ளியடி, இலுப்பக்கடவை, ஜெயபுரம் போன்ற இடங்களுக்கு சென்ற பின்னர் அங்கு 50குடும்பங்கள் அளவிலேயே வசித்துவந்தனர்.

தற்போது மன்னார் மாவட்டத்தில் தவீரமாக்கப்பட்டுள்ள யுத்தம் காரணமாக திருப்பதி வளாகத்திலுள்ள சிறார்கள். 5 கிலோ மிற்றர் தொலைவிலுள்ள தட்சணாமருதமடுவில் இயங்கிவந்த மன்சின்னப்பாண்டிவிரிச்சான் அரசினர் தமிழ் கலவன் பாட சாலையிலே கல்விகற்று வந்தனர். இவர்கள் மடுவிலிருந்து புறப்படுகின்ற பயணிகள் பேருந்திலேயே சென்று வருவார்கள். இங்கு பாடாசலை மாணவர்களுக்கு தனியாக பொதுமக்களுக் குத் தனியாக என பேரூந்து இல்லாமையால் அனைவரும் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகின்ற பேருந்திலேயே பயணிப் பார்கள்.

அவ்வாறே 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் நாளும் வழமை போல் பேரூந்தில் சென்ற சிறுவர்கள் பிற்பகல் பாட சாலை முடிந்ததும் இலுப்பைக் கடவையிலிருந்து மடு நோக்கிச் சென்று கொண்டிருந்த அதே பேரூந்தில் ஆனந்தமாக வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். பேரூந்து மடுவை அண் மித்ததும் சரியாக 2.30 மணியளவில் சிறீலங்கா ஆழ ஊடு ருவும் அணியினரால் இப் பேரூந்தின் மீது கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 09 பாடசாலைச் சிறார்கள், 01 ஆசிரியர், 01 பாடசாலைச் சிற்றூழியர், 01 மருத்துவ உதவி யாளர், 01 பேரூந்தின் ஓட்டுனர், 01 பேரூந்தின் நடத்துனர், 01 மடுத்தேவாலய உழவூர்தி ஓட்டுனர் என 15 பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். 13 மாணவர்கள் உள்ளடங் கலாக 21 பேர் படுகாயமடைந்தனர்.

இத் தாக்குதல் நடைபெற்ற சில நிமிடங்களில் தள்ளாடி முகாமி லுள்ள இராணுவத்தினர் அப் பகுதி நோக்கி எறிகணைத் தாக் குதல்களை மேற்கொண்டனர். இதனால் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே அப் பகுதி மக்கள் படுகாயமடைந்தவர்களை பள்ளமடு வைத்தியசாலையில் அனுமதித்தனர். பின் அங் கிருந்து உடனடியாக முழங்காவில் வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டனர். அங்கு மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தவர் களை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைத் தனர். இவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் மூன்று மாணவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந் தனர்.

பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டவர்களில் ஜெனிஸ்ரன் பீரிஸ் என்ற சிறுவன் பெப்ரவரி 03ம் நாள் உயிரிழந்தார். மேலும் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட பாடசாலை அதிபர் பெப்ரவரி 05ம் நாள் மரணமானார். இதனைத் தொடர்ந்து இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.

29.01.2008 அன்று இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரம்

01. அன்ரன் கொண்ஸ்ரன்ரயின் புறுனோ கொண்ஸ்ரன்ரயின் - 13 (மாணவன்)
02. அன்ரன் கொண்ஸ்ரன்ரயின் பிறிற்ரோ கொண்ஸ்ரன்ரயின் - 15 (மாணவன்)
03. செல்வசிங்கம் யூட்கொஸ்ரன் - 15 (மாணவன்)
04. செல்வசிங்கம் யூட்கொலிண்டன் - 12 (மாணவன்)
05. ரஞ்சன் ராஜசூரியர் தர்சிக்கா சாமினி 15 மாணவி
06. சூசையப்பு சாம்சன் சொய்சா - 13 (மாணவன்)
07. சுாந்தன் பெனாட் றோஜ் - 16 (மாணவன்)
08. ஆந்தோனி பீரிஸ் ஜெனிஸ்ரன் பீரிஸ் - 12 (மாணவன்)
09. பிரான்சிஸ் சேவியர் ஆன்ஸ் பசிலியோ - 11 (மாணவன்)
10. பத்பராசா பேனாட் ஜெனார்த்தனன் - 12 (மாணவன்)
11. இமானுவேல் குணசிங்கம் அன்ரன் டெஸ்மன் - 16 (மாணவன்)
12. ஞானப் பிரகாசம் ஜோன் மில்டன் - 16 (மாணவன்)
13. அன்ரனி சதீசன் - 11 (மாணவன்)
14. செபமாலை மேரியோசப்பின் - 31 (ஆசிரியர்)
15. ரஞ்சன் ராஜசூரியர் பிரான்சிஸ்கா மங்களேஸ்வரி - 37 (பாடசாலை ஊழியர்)
16. கிருபைராசா ஜெராட் ஞானகரன் - 29 (பேரூந்து ஓட்டுனர்)
17. சூசையப்பு லெம்பேட் ஸ்ரான்லி சுரேஸ் லெம்பேட் - 23 (நடத்துனர்)
18. க.சண்முகசுந்தரம் - 61 (ஓட்டுனர்)
19. திருமதி. லேம்பேட் - 51 (அதிபர்)
20. விமலநாதன் றீத்தம்மா - 33 (தாதி)

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களின் பெயர் விபரம்:

1. கிருசாந்த் - 08 (மாணவன்)
2. ற.பியுலின் - 09 (மாணவன்)
3. ஜெனோஸ்டிகா – 12 (மாணவி)
4. தர்சனா – 13 (மாணவி)
5. டியுலஸ் - 15 (மாணவன்)




தை முதல் நாள் தமிழர்களின் திருநாள். உழவர்களின் பெரு நாள். தமிழர்கள் இயற்கைக்கு விழா எடுக்கும் இனிய நாள். அல்லவை கழிந்து நல்லவை மலரும் இன்பத் திருநாள்.

களனி, திருத்தி, வயல் உழுது, எரு இட்டு, வரப்புக் கட்டி, நீர் பாய்ச்சி, நெல் விதைத்து, களை எடுத்து, விளைந்த நெல் மணி களின் பாரம் தாங்கமுடியாமல் தலைசாய்ந்து படுத்த கதிர் களை நல்ல நாள் பார்த்து ஒரு கைப்பிடி அரிந்து தாம்பாளத்தில் வைத்து வீட்டுக்கு எடுத்து வந்து வீட்டு வாசலில் கட்டித் தொங்க விடுவார்கள். இதற்குப் புதிர் எடுத்தல் என்று பெயர். அதில் கொஞ்ச நெல் மணிகளை எடுத்து குத்தி அரிசியாக்கி அந்தப் புத்தரிசியை பழைய அரிசியோடு கலந்து மஞ்சளும், இஞ்சியும் கட்டிய புதுப்பானையில் பாலும் சர்க்கரையும், பாகும் பருப்பும் இட்டுப் பொங்கி இயற்கைத் தெய்வமான ஞாயிறுக்குப் படைத்து வீட்டுத் தலைவனும், தலைவியும் பிள்ளைகளும் கொண்டாடி மகிழும் விழாவே பொங்கல் நாள்! இது தமிழர்களுக்கே உரித்தான திருநாள்!







பொங்கல் விழாவிற்கு சில வாரங்கள் கழித்தே அரிவு வெட்டு இடம்பெறும். வெட்டிய கதிர்களைக் குவித்து வயலின் நடுவே சூடு வைப்பார்கள். அதன் பின்னரே மாடுகளைக் கொண்டு சூடு மதிப்பு இடம்பெறும்.



தைப்பூசத் திருநாளில் புதிர் குழைத்தல் இடம்பெறும். புத்தரிசி பொங்கி, சர்க்கரையும் வாழைப் பழமும் சேர்த்துப் படைக்கும் இப்புதிர் சோற்றை சுற்றமும் நட்பும் அயலும் சூழ இருந்து உண்டு மகிழ்வர். அண்மைக்காலமாக இந்த வழக்கம் அருகி வருகிறது.

பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல், உழவர்கள் தமது கமச் செய்கைக்குத் துணையாக இருந்த கால்நடை களுக்கு நன்றி தெரிவிக்கும் நாளே மாட்டுப் பொங்கலாகக் கொண்டாடப்படுகிறது. இந்த விழா பட்டிப்பொங்கல் என்றும் அழைக்கப்படும்.







பொங்கல் நாளை "மகரசங்கராந்தி" யாக புராணிகர்கள் மாற்ற முற்பட்டபோதும் அடிப்படையில் பொங்கல் உழவர் விழாவாகவே உயர்ந்தும் நிலைத்தும் வருகிறது.

வயல் உழவும், வண்டி இழுக்கவும், சூடு மதிக்கவும், பால், தயிர், நெய் கொடுக்கவும், வயலுக்கு எரு தரவும் காரணமாக இருந்த எருதுகளையும், பசுக்களையும், கன்றுகளையும் குளங்களில் குளிப்பாட்டி, குடிக்கக் பச்சையரிசிக் கஞ்சி கொடுப்பர்.



மாலையில் பட்டிப் பொங்கல் பொங்கிப் படைக்கப்படும். மாடுகளுக்கு அப்பொங்கலில் ஒரு கவளம் உண்பதற்குக் கொடுக்கப்படும். பின்னர் மாடுகளின் கொம்புக்கும் நெற்றிக்கும் குங்குமம், சந்தனம் பூசி கழுத்தில் மலர் மாலை, வடை மாலை போன்றவற்றால் அலங்கரித்து வீதிகளில் ஊர்வலம் வீவார்கள்.

தைப்பொங்கல் திருநாளுக்கு வானியல் அடிப்படையும் இருக்கிறது. தென்திசை நோக்கி பயணம் செய்யும் ஞாயிறு (பூமியில் இருந்து அகாயத்தை அண்ணாந்து பார்க்கும் போது) இந்நாளில் வடதிசை நோக்கி பன்னிரண்டு இராசிகளில் ஒன்பதாவது தனு இராசியல் இருந்து மகர இராசியில் புகுகின்றான். ஒரு இராசயில் இருந்து இன்னொரு இராசிக்குப் போக எடுக்கும் காலம் ஒரு மாதமாகும்.

இப்போது வழக்கில் இருக்கும் "பிரபவ" முதல் "அட்சய" 60 ஆண்டுப் பெயர்கள் சாலிவாகனன் என்ற அரசானல் கி.பி. 78இல் அறிமுகப்படுத்தப்பட்டவை ஆகும். இவை வடபுல அரசனால் ஏற்பட்டதால் வடமொழிப் பெயர்கள் வழங்கப்படலாயிற்று.

இந்த ஆண்டு முறையால் தமிழர் மொழி, மரபு, மானம், பண்பாடு, வாழ்வு முதலியவற்றிற்கு விளைந்த அழிவையும், இழிவையும் எண்ணிப்பார்த்த தமிழ் அறிஞர்கள், புலவர்கள், சான்றோர்கள் 1921 ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூாயில் தமிழ்க் கடல் மறைமலை அடிகள் தலைமையில் கூடி மாற்று நடவடிக்கைபற்றி ஆராய்ந்தார்கள்.



திருவள்ளுவர் கிறிஸ்துபிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன்பு பிறந்தவர் என்று நிர்ணயம்செய்யப்பட்டு அவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவதெனவும் அதுவே தமிழ் ஆண்டாகக் கொள்வதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

ஆங்கில ஆண்டுடன் 31யைக் கூட்டினால் வள்ளுவராண்டு வரும். இப்போது ஆங்கில ஆண்டு 2022. எனவெ வள்ளுவராண்ட 2053 (2022 சக 31).

எனவே திருவள்ளுவர் ஆண்டுத் தொடக்கம் தைப்பொங்கல் திருநாளான தை முதல் நாள் தொடங்கி மார்கழிக் கடைசியில் முடிவுறும்.

தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்று 1971 முதல் தமிழ்நாடு அரச நாட்குறிப்பிலும், 1972 முதல் தமிழ்நாடு அரசிதழிலும் 1981 முதல் தமிழ்நாடு அரசின் அனைத்து அலுவலங்களிலும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டையும் தமிழீழத்தையும் பொறுத்தளவில் ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் பருவமழை (கார்) காலமாகும். பண்டைய காலத்தில் அவணி புரட்டாதி மாதங்கள் கார்காலமாகவும் ஐப்பசி கார்த்திகை கூதிர் (குளிர்) காலமாகவும் கணிக்கப்பட்டது.

இப்போது ஆவணி புரட்டாதி மாதங்களில் நல்லநாள் பார்த்து விதைப்பு இடம்பெறுகிறது. சில சமயம் முதல் மழை பெய்த பின்னர் விதைக்கிறார்கள். மழை பெய்யுமுன் ஆவணியில் விதைப்பு விதைப்பதும் உண்டு. இதற்கு புழுதி விதைப்பு



என்று பெயர்.

பரட்டாசியில் சிறுகப் பெய்யத் தொடங்கி ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பருவ மழை பலமாகப் பெய்யும் காரணமாக வயல்களில் தண்ணீர் நிரம்புகிறது. தண்ணீரின் மட்டம் கூடக் கூட பயிரும் ஓங்கி வளரும். சில சமயம் பயிர் சிறிதாக இருக்கும்போது பெருமழை பெய்து வெள்ளத்தினால் பயிர் அழுகிப் போவதும் உண்டு. அல்லது போதிய மழை இன்மையால் கருகிப் போவதும் உண்டு.

நெல்லை விதைத்தால் நெல்லு மாத்திரம் முளைப்பதில்லை. எருவில் கலந்துள்ள புல்லு மற்றும் கிடச்சிக் கொட்டைகளும் முளைக்கும். அதனை களையெடுப்பதில் கமக்காரர்கள் கண்ணும் கருத்துமாக இரப்பார்கள். அதோடு வெட்டுகிளிகள், பூச்சி புழுக்கள் நெற்பயிரைத் தாக்குகின்றன. இந்த



புழு பூச்சிகளை ஒழிப்பதற்கு
இயற்கை கிருமி கொல்லி பயன் படுத்தப்படுகிறது.

தை மாசி மாதங்களில் வயல்களில் தண்ணீர் வற்றி கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தயாராக இருக்கும. வயல்களை உழுது விதைத்து களைபிடுங்கி கட்டிக் காத்து உழைத்துப்



பாடுபட்டதன் பயனை உழவர்கள் அறுவடை செய்யும் காலம் இதுவாகும்.

ஆன காரணத்தினாலேயே தை மாதப் பிறப்பபை உழவர்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். தை பிறந்தால் தங்கள் துன்பங்கள் தீரும் வழி பிறக்கும் என நினைக்கிறார்கள்.

பண்டைய தமிழர்கள் ஒரு ஆண்டினை ஆறு பெரும் பொழுதுகளாகப் பகுத்தனர். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பனவாகும். ஒவ்வொரு பெரும்பொழுதும் இரண்டு திங்களைக் (மாதம்) கொண்டதாக இருந்தது. உரையாசிரியர்களில் ஒருவரான நச்சினார்க்கினியர் ஓராண்டு ஆவணியில் தொடங்கி ஆடியில் முடிந்தது என்கிறார்.

சங்க இலக்கியங்களில் எல்லாத் திங்கள்களின் பெயர்களும் சொல்லப்படவில்லை. தை, மாசி (பதிற்றுப்பத்து) பங்குனி (புறநானூறு) சொல்லப்பட்டுள்ளது. ஆனால் தொல்காப்பிய ஆசிரியிர் இகரவீற்றுப் புணர்ச்சி, ஐகாரவீற்றுப் புணர்ச்சி அகியவற்றில் மட்டுமே "திங்களும் நாளும் முந்தி கிளந்தன்ன" எனக் கூறுவதைக் காணலாம். எல்லாத் திங்கள் பெயர்களும் இந்த இரண்டு எழுத்தில் (இ, ஐ) முடிந்த என்கிறார். இதிலிருந்து அவர் காலந்தொட்டே இன்று



இருக்கும் திங்கட் பெயர்கள் வழங்கி வருகின்றன எனக் கொள்ளலாம்.

பண்டைய காலத்தில் திங்களின் வளர்பிறை தேய்பிறை கொண்டே பெரும்பொழுதைக் கணித்தனர். அதனால்தான் மாதத்தை திங்கள் என்று அழைத்தனர். திங்கள் ஞாயிற்றைச் சுற்றிவர எடுக்கும் நேரம் 27 நாட்கள், 7 மணி, 43 மணித்துளிகள்.

"உவவுமதி" (முழுமதி) நாளில் ஞாயிறும் திங்களும் எதிர் எதிராக நிற்கும் என்ற வானவியல் உண்மையைப் புறநானூற்றுப் பாடல் (65) தெரிவிக்கிறது.

ஆண்டை ஆறு பெரும் பொழுதாகப் பகுத்தது போலவே ஒரு நாளையும் ஆறு சிறுபொழுதாகப் பகுத்தனர். வைகறை, காலை நண்பகல். ஏற்பாடு, மாலை, யாமம் என் பதே அந்த ஆறு சிறுபொழுதாகும். மேலும் ஒரு நாள் 60 நாளிகை கொண்டது என்று கணக்கிட்டனா. ஒரு நாளிகை 24 நிமிடங்களாகும்.

ஞாயிற்றைக்கொண்டு ஆண்டைக் கணக்கிடும் முறை கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் வராகமிகிரரால் கொண்டுவரப்பட்டது. ஞாயிறு வணக்கம் இயற்கை வழிபாட்டைச் சேர்ந்தது. உலக நாகரிகங்கள் எல்லாவற்றிலும் ஞாயிறு வணக்கம் இருந்ததற்குச் சான்றுகள் இருக்கின்றன. உலகில் வாழும் உயிர்களுக்கு ஆதாரமாக ஞாயிறு இருப்பதால் ஆதி மனிதன் ஞாயிற்றை தெய்வமாக உருவகப் படுத்தி வணங்கிப் போற்றி வந்ததில் வியப்பில்லை.







வேத காலத்தில் இந்தரன், வருண்ன், அக்கினி இவற்றுக்கு ஒப்ப ஞாயிறு தெய்வமாக வழிபடப்பட்டது. இந்து மதத்தின் உட்பிரிவுகளில் ஒன்றான சௌரம் ஞாயிறை முழுமுதற் தெய்வமாக வழிபடும் மதமாகும். பிற்காலச் சோழர் ஆட்சியில் சூரியனுக்குத் தனிக்கோவில்கள் ஏழுப்பப்பட்டன.

முத்தமிழ்க் காப்பியங்களில் முதல் காப்பியமான சிலப்பதி காரத்தில் இளங்கோ அடிகள்:

"ஞாயிறு போற்றுதும்!
ஞாயிறு போற்றுதும்!
காவிரி நாடன் திகிரிபோல்
பொன்கோட்டு
மேருவலம் திரி தலான்."
[சிலம்பு 1, 4–6]

என ஞாயிற்றை வாழத்திப் போற்றுகிறார். "காவிரி ஆற்றை யுடைய நாடனாகிய சோழனது ஆணைச் சக்கரம் போன்று பொன் உச்சியை உடைய இமயமலையை வலம் வருதலால் ஞாயிற்றை வணங்குவோம்! ஞாயிற்றை வணங்குவோம்!"

தமிழர்கள் கொண்டாடும் விழாகக்ளில், சமயசார்பற்ற எல்லோ ருக்கும் பொதுவான விழா பொங்கல் திருநாளாகும். பொங்கல் விழாவில் கற்பனைக்கோ, புனைவுகளுக்கோ, அருவருக்கத் தக்க பகுத்தறிவுக்குப் பொருந்தாத கட்டுக்கதைக்கோ இட மில்லை.

தமிழர்கள் கொண்டாடும் தீபாவளி தமிழ் அரசன் ஒருவனைக் கடவுள் அவதாரம் சூழ்ச்சியால் கொன்ற நாளாகும்.



தமிழர் திருநாளான பொங்கல் விழா என்பது வெறும் சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல் உண்ணும் நாளாக இருந்து விடக்கூடாது. அது எங்கள் உணர்வுகளைப் புதுப்பிக்கும் நாளாகவும் கலை, பண்பாடு, பாரம்பரியம் போன்றவற்றைப் போற்றிப் பாதுகாக்க சூளுரைக்கும் நாளாகவும் இருக்க வேண்டும்.

- நன்றி : திருமகள் - வெள்ளிநாதம் (16-22-01.2004)





தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர் – இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்...!
– கவிஞர் பாரதிதாசன் –

*உறவுகள் அனைவருக்கும்*
*இனிய புத்தாண்டு, தமிழர் திருநாள் பொங்கள்*
*நல்வாழ்த்துக்கள். - சங்கத்தமிழ், உலகவணிகம்*

# திருவள்ளுவர் ஆண்டை உருவாக்கியவர்



**'தனித்தமிழின் தந்தை'**

## மறைலை அடிகள்

**15.07.1876 – 15.09.1950**

'விக்ரகம், பூஜை விக்ரகமாக பிரதிஷ்டை செய்யப்பட்ட பிறகு, அதற்குப் பூஜை செய்கின்றவர் நேரத்தை மாற்றக் கூடாது.' நூறாண்டுக்கு முன், வடமொழி கலந்து தமிழை இப்படித்தான் எழுதினர். இதிலுள்ள விக்ரகம், பூஜை, பிரதிஷ்டை போன்ற சொற்கள் வடமொழி. இவ்வாறு எழுதியதற்கு எதிராக, தமிழ், பிறமொழி கலப்பில்லாமல், எழுத, பேச இயக்கத்தைத் தொடங்கியவர் மறைமலை அடிகள். அப்போது பெரிதும் வழக்கில் இருந்த நமஸ்காரம், ஜலம், சந்தோஷம் போன்ற வடமொழிச் சொற்கள், இந்த இயக்க முயற்சியால் ஒழிக்கப்பட்டன.

**அவரது பணிகள்**

☞ ராஜாஜி முதல்வராக இருந்தபோது, உயர்நிலைப் பள்ளிகளில் இந்தி மொழியை கட்டாயமாக்கினார். இதை எதிர்த்து குரல் கொடுத்தார்.

☞ மாதந்தோறும் ஐம்பது ரூபாய்க்குக் குறையாமல் நூல்கள் வாங்கிப் படிக்கும் பழக்கம் உள்ளவர்.

☞ தமிழ், ஆங்கிலம் என 4,000க்கும் மேற்பட்ட நூல்களை சேமித்து, நூல்களை சேமித்து, நூலகம் வைத்திருந்தார்.

☞ 'ஞானசாகரம்' என்ற இதழைத் தொடங்கி நடத்தியவர்; பின்னர், 'அறிவுக்கடல்' என்று பெயரை தமிழில் மாற்றினார்.

மறைமலையடிகளின் இயற்பெயர் வேதாசலம். அதை மறைமலை என்று தமிழாக்கினார்.

நான்காம் வகுப்பு வரை மட்டுமே பள்ளியில் படித்தார். தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமைபெற்றவர். போராசிரியர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை நூலுக்கு, செய்யுள் வடிவிலேயே உரை விளக்கம் எழுதினார். அதற்கு கைமாறாக, கல்லூரியொன்றில் மறைமலைக்கு தமிழாசிரியர் பணி பெற்றுத் தந்தார்.

**இயக்கங்கள்**

### முக்கிய நூல்கள்

முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை
தமிழர் மதம்
உரைமணிக்கோவை
கருத்தோவியம்
துகளறுபோதம்
திருவாசக விரிவுரை
பண்டைகாலத் தமிழரும் ஆரியரும்
இந்தி பொது மொழியா?

திருவருட்பாவில் உள்ள, "பெற்ற தாய்தனை மகன் மறந் தாலும்..." என்று தொடங்கும் பாடலை மறைமலையின் மகள் நீலாம்பிகை பாடிக் கொண்டிருந்தார். பாட்டில், 'உற்ற தேகத்தை உயிர்மறந்தாலும்' என்ற அடியில் மட்டும் தேகம் என்னும் வடசொல் வருவதைக் கண்டார். அருமை யான தமிழ்ப்பாட்டில் வடசொற்கலப்பால், அதன் மொழித் தூய்மை கெட்டதாக மனம் நொந்தார். அந்த இடத்தில், 'யாக்கை' என்ற தமிழ்ச்சொல் வந்தால் நன்றாக இருக் குமே என்ற சிந்தனையின் விளைவுதான். தனித்தமிழ் இயக்கம், கிராம கோவில்களில் உயிர்ப்பலியிடுவதற்கு எதிராக, பலிவிலக்கு இயக்கத்தை, 1925ம் ஆண்டு தொடங்கினர்.

**மறைமலையடிகள் தலைமையில், 500 தமிழறிஞர்கள் கூடி, தமிழர்களுக்காக, திருவள்ளுவர் ஆண்டை உருவாக்கினர். சென்னை பச்சையப்பன் கல்லூரியில், 1921ல் கூடிய தமிழறிஞர்கள், கிறிஸ்து பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன் பிறந்தவர் திருவள்ளுவர் என்று கணக்கிட்டனர். இதையடுத்து, திருவள்ளுவர் பெயரில் தமிழ் ஆண்டை உருவாக்கினர். தமிழ் ஆண்டு குறிப்பிடுவதை, 1971ம் ஆண்டு, தமிழக அரசு ஏற்றது. 1972 முதல் அதை நடைமுறைப் படுத்தியது. தமிழக அரசு ஆணைகளில், திருவள்ளுவர் ஆண்டு பயன்படுத்தப்படுகிறது.**


13 ஆம் ஆண்டு
வீரவணக்கம்
கோகுலகிருஷ்ணன்
21.02.2009
சிவப்பிரகாசம்
21.02.2009
ரவி
02.02.2009
தமிழ்வேந்தன்
18.02.2009
இரவிச்சந்திரன்
07.02.2009
இராஜா
07.02.2009
அமரேசன்
08.02.2009
அப்துல் ரவூப்
1995
முருகதாஸ்
12.02.2009
சீனிவாசன்
01.03.2009
எழில்வளவன்
05.03.2009
ஆனந்த்
15.03.2009
இராசசேகர்
17.03.2009
பாலசுந்தரம்
22.03.2009
மாரிமுத்து
22.03.2009
சிவானந்தன்
17.04.2009
சுப்பிரமணி
23.04.2009
ஸ்டீபன் ஜெகதீசன்
முத்துக்குமார்
நினைவு நாள் 29.01.2009

# JATHU RENOVATION




உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்

★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical

RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com



ARASAN RAJADURAI
REAL ESTATE & DEVELOPMENTS
SALES REPRESENTATIVE

C 416.500.9550
B 416.298.8383
F 416.298.8303
realtorarasan@gmail.com
www.century21.ca/arasan.rajadurai

Century 21 INNOVATIVE REALTY

CENTURY 21
Innovative Realty Inc. Brokerage
2855 Markham Rd
Toronto ON M1X 1C4

# WEXFORD
WELLNESS CARE INC.



We treat all car accident injuries!

* Massage Therapy
* Physiotherapy
* Orthopaedic
* Acupuncture
* Chiropractic
* Orthotic

We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)

Tel: 647-349-5120
Fax: 647-349-5121

Serve Two Location
Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)




# நம் தாயகம்

வாங்குவீர்... வாழ்வு தருவீர்!

பெண் தலைமைத்துவ குடும்பங்களினதும்
போரில் அவயங்களை இழந்தோருக்கான
தற்சார்புப் பொருளாதார மேம்பாடு எமது நோக்கம்

முன்னாள் போராளிகளினதும் துணையிழந்த பெண்களினதும் தயாரிப்புகள் கலப்படங்கள் அற்ற பாரம்பரிய முறைத் தயாரிப்புகள், உடல் நலம் காப்பவை.

நம் தாயகப் பொருட்களைப் கொள்வனவு செய்து தாயக மக்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் உள்ளங்களுக்கு நன்றி

முள்ளிவாய்க்காலில் இருந்து...



"உணர்வினில்
தாய் மண்
வாசமும்
உணர்வோடு
தாய் மண்
நேசமுமாய்"



Tel: 416-558-2111
nam.thayagam@gmail.com
3031 Markham Road, Unit 35, Scarborough. M1X 1L9 (Markham & Passmore)

# முகம் அறியாத உறவிற்கு ஒரு கடிதம்

எனக்காகத் தீக்குளித்த உடன்பிறப்பே, இனத்திற்காய் உயிர் துறந்த உறவே, உன் பெயர் அறியேன், உன் முகம் அறியேன், சரியான உன் முகவரி அதுதானும் இறியேன், ஆயினும் இதை எழுதுகிறேன். இக் கடிதம் உனக்கு வந்துசேராது என்பதுவும் எனக்குத் தெரியும். ஆனாலும் உன் அர்ப்பணிப்பைக் கூறாமல் இருக்க முடியவில்லை. எம் தேசத்தின் இளம் தலைமுறை இன்று புதிய விதத்தில் சிந்திக்கத் தொடங்க வேண்டும் என்பதற்காய் எழுதுகின்றேன்.

நீ தீக்குளித்த செய்தி அறிந்து திகைத்தேன். வேதனையோடு வெட்கத்துள் முகம் புதைத்து அழுதேன். உனக்காக மட்டுமல்ல, என்னையும் எண்ணித்தான். பேர் அறியா உறவே என்னை உனக்குத் தெரியாது. ஆனால் இன்று எனக்கு மட்டுமல்ல உலகத்திற்கே உன்னைத் தெரிந்துவிட்டது. என மனக் கண்ணில் நீ நடாத்திய யாகம் தெரிகிறது. நீ எழுதிய இறுதி வரிகளும் தெரிகிறது. நீ எரிகிறாய், நெய்யாய் உருகிறாய், புழுவாய் நெளிந்து விழுகிறாய். ஐயனே நீ படும் வேதனையை என்னால் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை. ஏன் இந்த வேதனை? யாருக்காக இந்தத்தியாகம்? எனக்காகத்தானே, என் எறவுக்காகத்தானே, என் அம்மாவிற்காக, என் அப்பா விற்காக, அக்காவிற்காக, தம்பி தங்கைக்காக, என் குடும்பத் திற்காக, எங்கிருந்தோ நீ உன்னை வருத்தி உயிரை விட்டாய். ஆனால் நான் மட்டும் இங்கே. என் உறவிற்காக உயிர் நீத்த உத்தமனே, ஏன் இப்படிச் செத்தாயோ? எனக்குப் புரிகிறது. உனக்கும் ஒரு சொந்த நாடு இருந்திருக்குமானால் நீ இப்படி யாசித்து மாண்டிருக்க மாட்டாய். படைதிரட்டி வந்து தமிழன் யார் என்பதைக் காட்டியிருப்பாய். என்ன செய்வது? உலகம் எங்கும் பரந்து வாழும் தமிழனுக்கு ஒரு நாடு இல்லை. சுதந் திரமாய் குந்தி இருக்க ஒரு கூடு இல்லை. தமிழனாகப் பிறந் ததற்காக நிம்மதியான ஒரு வாழ்வு இல்லை. இந்த அவல நிலைமையை மாற்றப்போவது தமிழீழம் தான் என்பதை நீ சரியாகப் புரிந்து கொண்டாய். தமிழன் என்றாலும் உணர்வால் ஒன்று பட்டவன் என்ற தத்துவதற்திற்கு புத்துயிர் ஊட்டிவிட்டாய். என் இனத்தின் இரத்தமே, உன் தேசத்தில் நீ மூட்டிய நெருப்பு உன்னை மட்டும் எரிக்கவில்லை. தமிழ் உருவத்தில் எதிரிக்கு கொள்ளி கொடுக்கும் கோடரிக் காம்புகளின் போலி முகத் தோலையும் எரித்துவிட்டது. எம் தேசத்தின் இளைஞர், யுவதி களின் நெஞ்சத்திலே புதிய வேகத்தை ஊட்டிவிட்டது. இனியும் எம் இளம் தலைமுறை உறங்காது. வழித்து எழும். எம்பகை வேருடன் விழும். உன் நினைவு எம் நெஞ்சத்தில் நீங்காது வாழும்.

இப்படிக்கு
தமிழீழத்தின் உடன்பிறப்பு







## அப்துல் றவூப்

தமிழர்களின்
விடுதலைக்காக
முதன் முதலில்
தன் உடலில்
தீயிட்டு உயிர்துறந்த
ஈகையர்
15.12.1995

## தமிழின ஈகையர் அப்துல் ரவுப்வுக்கு தலைசாய்த்து வணங்குகின்றோம்.




நெஞ்சம் கனக்க, முகம் தெரியாத அந்த தியாகியின் உயிர்த்துடிப்பை எம்முள் நிறைத்துக் கொண்டோம். போராளிக்குரிய உறுதி. தியாகத்தின் எல்லையைத் தொட்டு உலுப்பும் கரும்புலிகளை ஒத்த தற்கொடை. தான், தன்வீடு, தன்தேசம் என்ற எல்லை கடந்து அயலில் அழுது துடிக்கும் தன் இனத்துக்காக நெஞ்சு துடித்தவர். ஈழத்தமிழருக்காய் உயிர் கொடுத்த மானத் தமிழன் அப்துல் ரவுப். இன்று அவரது பெயர் ஈழத்தமிழர்களின் உள்ளங்களில் உச்சரிக் கப்படுகின்றது. தமிழீழமே திரண்டு அவர் தியாகத்திற்காய் கண்ணீர் வடித்ததே. போராளிகளை அஞ்சலிக்கும் எம் மண்ணில் தமிழகத்தைச் சேர்ந்த தமிழ்த் தியாகி அப்துல் ரவுஃப்புக்கு வணக்கம் செலுத்த எம் தேசம் திரண்டதே. ஒரு போராளியாய் அந்தத் தூய தமிழ்த்தியாகி எம்முடன் வாழ்வார்.




அவரது இந்த உறுதியான தடம், உணர்வுள்ள தமிழர்களுக்கு பாதையாய் அமையட்டும். நெருப்பில் வெந்து துடிக்கும் உதட்டுக்குள்ளால் “ஈழத்தமிழரைக் காப்பாற்றுங்கள்” என்ற வார்த்தை மட்டுமே வந்ததாம். கேட்டதில் நெஞ்சம் கனதியானோம். மலர்வளையம் வைத்து வணங்குவதிலும் பார்க்க உள்ளக் கமலத்தில் உட்கார வைத்துள்ளோம். தமிழீழத் தமிழ ரையும், ஈழத்தமிழரையும் பிரித்து வைத்து அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கும் அக்கிரமக் காரர்களின் தலைகளில் ஆயிரம் அப்துல் ரவுஃப்கள் இடியாய் விழுவார்கள்.

வரலாற்றைப் பிரித்துப் போடப் பார்க்கிறார்கள். தொப்புள்கொடி உறவை துண்டாடிவிடப் பார்க்கிறார்கள். தாயிருக்க சேயின் உயிர் பறிக்கத் துடிக்கிறார்கள். கலந்திருக்கும் எங்கள் சுவாசக் காற்றில் நஞ்சைத் தூவக்காத்திருக்கிறார்கள். ஆனால் யாவும் சத்தின்றி சருகாகிப் போகும் என்பதைத்தான் அப்துல் ரவுஃப்பின் தியாகம் எடுத்துரைக்கின்றது. தமிழக மக்களின் உணர்வின் வெளிப்பாடாய், எழுச்சியின் குறியீடாய்த்தான் அவரது தியாக மரணத்தைக் கருதமுடிகிறது. தாய் சேய் உறவைப் பிரித்துப் போடத் துடிக்கும் நாச சக்திகளுக்கு தன்னைக் கொடுத்து ஒரு பாடத்தைப் புகட்டியிருக்கிறார் அப்துல் ரவுஃப். இந்த உலகத்தை விட்டுப்போகும் இறுதித் தறுவாயில் இவர் உரைத்த கடைசி வார்த்தை “இன்று நான் நாளை தமிழகம்”

“வாழ்க அப்துல் ரவுஃப் புகழ்”

# சிறகு வரிக்கத் துடிக்கும் ஒரு சின்னப் பறவை

பாலைச்சரித்து நிலவு விளையாடும்
பௌர்ணமி நாள்.
விளக்கணைக்கக்கூடிப் பலமில்லாத
மெல்லிய காற்று.
வானச்சுவரில் முகில்கள் அப்பிக்கிடக்க
நிலவு நிர்வாணமான சாமப்பொழுது.
வயல்வெளியை உச்சிபிாத்த
செம்மணி வீதியில் நடக்கின்றேன்.
வெள்ளத்தால் கடலான தரவைவெளி
இடையில் வந்த சுடலையில்
சடலமொன்று தணல்பூத்துக் கிடக்கிறது.
என் காலடி அரவத்தால்
கரையேறிய நண்டுகள்
வளைக்குள் உடல்மறைத்துக் கொள்கின்றன.
ஓலமிட்டபடி உயரப்பறக்கும்
அடையாளம் தெரியாத புள்ளினங்கள்
ஆக்காட்டியா? மீன்கொத்தியா?
எதுவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும்
அழகாகப் பறக்கின்றனவ அதுபோதும்.
இவை போலப் பறக்க முடியாதா?
எனக்கும் சிறகு முளைத்தால் எத்தனை ஆனந்தம்
பேயும் உறங்குகின்ற பொழுது இதுவாமே
எனக்குமட்டும் ஏன் எறக்கம் வரவில்லை?
“நாற்பதுக்கு மேலே தூக்கம் இருக்காது”
சரியாகச் சொன்னவனின் வாயில்
சர்க்கரை போடவேண்டும்.
நாவற்குழிப் பாலத்தின்மேலே வெளிச்சங்கள்
என்ன அது?
அட; பாரமேற்றிய வண்டில்கள் வருகின்றன.
வேகமாக ஒரு ‘பிக்கப்’ மின்னலெனவந்து
என்னைக் கடந்து உருவுகின்றது.
“பாவம் பொடியளுக்கும் நித்திரையில்லை”
சின்னவயதில் எத்தனை பாரம் சுமக்கின்றனர்.
உழைப்பவனுக்கு உறக்கமில்லை என்பது
எவ்வளவு உண்மை.

அழகு விரிந்து ஆட்சி நடத்துகின்ற
நிலவுநாள் நெஞ்சுக்கு நிறைவு
இந்த எழிலை இவ்வூர் பருகாமல்
கடைவாய் வழியக் கண்மூடிக் கிட்கிறது.
தூக்கத்தில் அப்படியென்ன சுகமிருக்கிறது?
யாழ்ப்பாணம் பாலைவனமென்று
யார் சொன்னவன்?
அவனை அழைத்துவா.
கள்ளியும், நாகதாளியும், நாயுருவியையும் தவிர
உள்ளே வேறென்ன உண்டு?
என்ற கவஞனை எழுப்பி வா.
எம் மண் எத்தனை எழில் என்று
செம்மணியை இப்போது காட்டவேண்டும்.
சோம்பேறிகள் தூங்கிக் கிடப்பார்கள்.
எங்கே தேடுவது?
வீரம்வரும் போதுதான் மீசை துடிக்கும்.
அது போல
போராடும் போதுதான் எல்லாமும் பொலிவுறும்
குண்டு வீச்சால் சிதறுண்டு போன
கட்டிடங்கள் கூட
நவீன ஓவியங்கள் போல அழகாகத்தானே தெரிகின்றன.
அப்படியாயின் அழிவே அழகா?
இல்லை
சிலரின் தேகத்தில் தேமல்கூட அழகாக இருக்குமே
அது போலத்தான்
எங்கள் மண்ணில் எல்லாமே அழகுதான்.
மண்டைதீவிலிருந்து ஏவிய எறிகணை வெடித்து
அரியாலைப் பக்கம் அதிர்கின்றது.
கோழிகள் ஏறம் மரத்தில் மரநாய் புகுந்ததுபோல
ஊர் கலங்கி விட்டது.
எதிரியுள்ளவரை அழகை அனுபவிக்க முடியாது.
முத்திரைச் சந்தைக்கு முகம் காட்டி
நான் திரும்பி நடக்கின்றேன்.
வேகமாக் ஒரு ‘பிக்கப்’ மன்னலென வந்து
என்னைக் கடந்து உருவுகின்றது.
இனி விடியும்



புதவை இரத்தினதுரை ... வெளிச்சம் 01.1994

# சத்தமின்றி சூறையாடப்படும் மட்டக்களப்பு தமிழர் நிலங்கள்

ஜனவரி 02, 2022

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுள் முக்கியமாக நசீர் அகமட், ஹக்கீம் மற்றும் ஹரீஸ் போன்றோரின் வாதம் என்னவெனில், முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவுகளில் முஸ்லிம் மக்கள் குடியிருக்க இடப்பற்றக்குறை நிலவுவதாக நியாயப்படுத்த , மிக அழகாக சோடிக்கப்பட்ட புள்ளி விபரங்களுடன் தமிழர் பக்க நியாயங்களை திட்டம் இட்டு மறைத்து எழுதப்பட்ட திரை கதையை இலங்கையின் அதி உயர் பீடமான பாராளுமன்றத்தில் மிக கனகச்சிதமாக அரங்கேற்றியுள்ளனர் என ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் வனேந்திரன் சுரேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சத்தம் இன்றி சூறையாடப்படும் மட்டக்களப்பு தமிழர் நிலங்கள் தொடர்பில் வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இங்கே கவனிக்க வேண்டிய விடயம் காணி இல்லை என்றால் சட்டப்படி காணியை பகிர்ந்து தாருங்கள் என்று கேட்கலம் ஆனால் இந்த கபடம் நிறைந்த அரசியல்வாதிகள் கேட்பது காணி இருக்கும் தமிழ் பகுதிகளையே தங்களிடம் தாருங்கள் என்று! பழம் சாப்பிட ஆசை அதனால் உங்களிடம் உள்ள பழ மரத்தையே எங்களின் கட்டுப்பாட்டில் தாருங்கள் என்ற கதையாய் இருக்கின்றது!

முஸ்லிம் மக்களை காயப்படுத்துவதோ நோகடிப்பதோ இல்லை. மாறாக தங்களினதும் தங்கள் குடும்ப உறவுகளின் சுகபோக வாழ்வுக்காகவும் தங்களின் அடிவருடிகளின் சுகபோக வாழ்வுக்காகவும் இந்த தமிழ் முஸ்லிம் மக்களின் இன உறவை தமது கபடதனமான செயல்களால் பிரித்தாள முனையும் இந்த காவாலி அரசியல்வாதிகளின் தோலை உரிப்பதே ஆகம்.

தமிழர் பகுதிகளில் முஸ்லிம்கள் அரச சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு சுதந்திரமாக வசிப்பதற்க்கு எந்த தடையும் இல்லாத போதும் இந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் தமிழ் பிரதேசங்களை முஸ்லிம் பிரதேச செயலகங்களுடன் இணைக்கபடாத பாடுபடுவதுடன் தங்களது அரசியல் மேடை பேச்சுக்களின் போது முஸ்லிம் மக்களை உசுப்பேற்றி தமிழ் மக்களுக்கு ஏதிராக அவர்களை திருப்பி மீண்டும் ஒரு இனக்கலவரத்தை உண்டு பண்ணி அந்த சூட்டில் தாங்கள் குளிர் காய இந்த பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அகமட்டும், அவரின் அடிவருடியான ஒட்டாமாவடி மத்தி பிரதேச செயலாளர் முஸம்மிலும் படும் பாட்டை இன்று முஸ்லிம் மக்களே நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அகமட்டின் போலியான இன பாசமானது எப்படிப்பட்டதென்றால் இந்த அரசாங்கம் முஸ்லிம் ஜனாசாக்களை எரித்த காலப்பகுதியில் அரசாங்கமே ஜனாசாக்கள் தான் எரிக்கப்படுகின்றன என்று வெளிப்படையாக கூறிய போதும், இல்லை இல்லை வெறும் பெட்டிகளை தான் எரிக்கின்றனர் என்று தன் இனத்தையே வித்து தன்னுடைய கல்லாவை நிரப்பிய உத்தமன் தான் இந்த நசீர். உண்மையான ஒரு முஸ்லிம் மதத்தவருக்கு தங்களின் ஜனாசா எந்தளவு முக்கியமானது என்றால் அது அவர்களின் மத நம்பிக்கையின் உச்சம் என்றே சொல்ல வேண்டும். அதையே கேவலப்படுத்தி தன் விசுவாசத்தை இந்த அரசுக்குக் காட்டிய கொடிய அரக்கன் தான் இந்த நசீர்.

தனது அடுத்த மாகாண சபை கதிரை ஆசையை நிறைவேற்றுவதற்காக தான் இந்த முஸ்லிம் இன திடீர் பாசம் என்பதை இந்த கிழக்கு வாழ் முஸ்லிம் மக்கள் அறியாமல் இல்லை என்பதையும் அற்ப பணத்துக்காக இனத்தையே தெருவிற்கு கொண்டு வந்ததையும் அந்த மக்கள் மறந்திருப்பார்கள் என்று அவர் நினைத்திருந்தால் அதை அடுத்த தேர்தலில் மக்கள் வெளிப்படுத்துவர்.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்த மட்டில் மேற்குறிப்பிட்ட அரசியல்வாதிகளினால் மிக குறுகிய இடப்பரப்பை கொண்டுள்ளது என்று சோடிக்கப்பட்ட புள்ளி விபரங்களுடன் கூறிய முஸ்லிம் செயலக பிரிவுகளான காத்தான்குடி, ஏறாவூர் மற்றும் ஓட்டமாவடி போன்ற இடங்களில் இருக்கும் முஸ்லிம் மக்களுக்கு மேற்குறிப்பிட்ட செயலக பிரிவுகள் தவிர்ந்த ஏனைய தமிழ் பிரதேசங்களில் நில புலங்கள் இல்லை என்று இந்த அரசியல்வாதிகளினால் நிரூபிக்க முடியுமா…? ஐந்து நேரம் கடமை தவறாமல் தொழும் ஒரு முஸ்லிம் பொது மகன் இதை மறுதலிக்க முடியுமா…?

மட்டக்களப்பு நகரை எடுத்து கொண்டால், தமிழரை விட முஸ்லிம்களுக்கே அதிக கடைகள் சொந்தம். காத்தான்குடி மக்களுக்கு சொந்தமான காணிகள் இன்று ஆரையம்பதியை தாண்டி தாளங்குடா வரை நீண்டுள்ளதோடு மறுபக்கம் மஞ்சந்தொடுவாய் இசை நடன கல்லூரி (கடற்கரை பக்கமாக) வரை நீண்டு வந்துள்ளது. ஏறாவூர் பற்றை எடுத்துக் கொண்டால் ஆறுமுகத்தான்குடியிருப்பு, தளவாய், புன்னைக்குடா, ஐயங்கேணி, வேப்பவெட்டுவன், பன்குடாவெளி, கரடியனாறு, மரபாலம் வரை முஸ்லிம் மக்களுக்கு இல்லாத காணி இல்லை. வாழைச்சேனையை பார்த்தால் கறுவாக்கேணி, மீராவோடை, வாழைச்சேனை பகுதிகள் இன்று முற்றுமுழுதாக முஸ்லிம் வசம் வாகரை பக்கம் எடுத்து கொண்டால் கிட்டதட்ட பொலன்னறுவை மட்டக்களப்பு வீதியில் அமைந்துள்ள நாவலடி தொடக்கம் புனாணை வரை முற்று முழுதாக இன்று



முஸ்லிம் மக்களின் குடியிருப்பு. அது தவிர்ந்து ஆலம்குளம், மதுரங்கேணிகுளம், கிருமிச்சை, குஞ்சங்குளம் போன்ற இடங்களில் ஓட்டமாவடி வாழைச்சேனை பகுதிகளில் வசிக்கும் முஸ்லிம்களுக்கு வயல் நிலங்கள் இல்லை என்று யாராவது ஒரு அரசியல்வாதியால் நிரூபிக்க முடியுமா…? கிரான் பிரிவை எடுத்து கொண்டால் பொண்டுகள் சேனை, ஊத்துசேனை, வடமுனை, முறத்தானை மற்றும் வாகனேரி போன்ற இடங்களில் வயல் மற்றும் மேட்டுகாணிகளை முஸ்லிம்கள் உரிமை கொண்டாடவில்லை என்று உண்மையாகவே மனசாட்சி உள்ள அல்லாவுக்கு பயந்த ஒரு (நசீர், ஹக்கீம் மற்றும் ஹரீஸ் போன்ற அல்லாவுக்கே அல்வா கொடுக்கும் ஈன பிறவிகளை நாங்கள் இங்கு குறிப்பிடவில்லை) முஸ்லிம் நபர் கூற முடியுமா…? எமது கேள்வி என்னவென்றல் இவ்வளவு இடங்களில் முஸ்லிம்கள் தமிழர் பூர்வீக காணி பூமிகளை பெற்று கொண்ட (பெரும்பாலானவை அடாத்தாக பிடிக்கப்பட்ட போதும்) பொழுதும் எந்த தமிழனும் பிரச்சனைப்படவோ பாராளுமன்றம் போய் நாடகம் நடத்தவோ எள்ளளவும் நினைக்காத போதும் இப்பொழுது மட்டும் இந்த அரசியல்வாதிகள் இவற்றை எல்லாம் தமது புள்ளி விபரங்களில் கனகச்சிதமாக மறைத்து விட்டு இன்று தமிழனின் தாய் வீட்டையே பறித்தெடுக்க இந்த நயவஞ்சகர்கள் முற்படுகின்றனர் என்றால் தமிழன் எந்தளவுக்கு மடையனாக இருக்க வேண்டும். இதற்கு கூட்டம் கூடி மேதாவிகள் வந்து விளக்கம் தர வேண்டியதில்லை. இதற்கு எல்லாம் காரணம் தன் நிலம்போனாலும் பரவாயில்லை தன் இனம் அழிந்தாலும் பரவாயில்லை ஆனால் ஊர் கூடி தேர் இழுத்து விட கூடாது நானும் என் கட்சியும் மட்டுமே இழுத்து விட வேண்டும் என்ற தமிழனின் இழி புத்தியே தான்!

மேற்குறிப்பிட்ட இடங்களில் உள்ள காணிகளின் அளவை எல்லாம் தமிழ் முஸ்லிம் மக்களை மோத விட்டு அவர்களது பிணத்தில் இலாபம் பார்க்கும் ஈன பிறவிகளான இந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் தாங்கள் பாராளுமன்றத்தில் ஓட்டிய நாடகத்தில் இட அளவு புள்ளி விபரத்தில் உள்ளடக்கி இருக்கின்றனரா என்றால் பதில் இல்லை இவற்றை எல்லாம் கனகச்சிதமாக மறைத்து விட்டு கபடதனமாக தமது பிரதேச செயலகத்துக்கு ஆரம்பத்தில் பெற்று கொண்ட இட அளவு மட்டுமே இன்னும் தங்களிடம் உள்ளது போல ஆடிய நாடகம் உலகமகா நடிப்பு சாமி.

தமிழ் முஸ்லிம் மக்கள் தமக்கிடையேயான வியாபார மற்றும் இருப்பிட உரிமை மாற்றத்தை எந்த பிரச்சனையும் இன்றி மேற்கொண்டு வரும் போது இந்த அரசியல்வாதிகள் பூர்விக தமிழர் நிலங்களை இப்பொழுது தங்களது நிர்வாக பிரிவுகளுடன் இணைக்கப்பட வேண்டும் என்றும் முஸ்லிம்கள் இருக்க ஒரு துண்டு காணி கூட இல்லாதது போலவும் இனி தமிழ் பிரதேசங்களில் இருந்து பறித்து எடுக்கும் நிலங்களில்தான் குடி இருக்க வேண்டும் என்பது போல் ஆடிய நாடகம் ஓஸ்கார் விருதுக்கான நடிப்பு.

இவ்வளவுக்கும் தமிழர் பூமியை இவ்வளவு அடாத்தாக பிடிக்க எத்தனிக்கும் இவர்கள் தங்களது முஸ்லிம் பிரதேச மக்கள் எக்காரணம் கொண்டும் முஸ்லிம் பிரதேசத்தில் உள்ள தமது நில புலங்களை தமிழர்களுக்கோ சிங்களவர்களுக்கோ விற்பனை செய்ய முடியாது. இது எழுதப்பாடத பள்ளிவாயல்கள் சம்மேளன சட்டம். இதை விட சுவரசியமான விடயம் என்னவெனில், காத்தான்குடி பள்ளிவாயல்கள் சம்மேளனம் கொடுத்துள்ள கண்டிப்பான உத்தரவு என்னவெனில், இனி வரும் காலங்களில் வட்டி நடவடிக்கையில் ஈடுபடும் வங்கிகளுக்கு காத்தன்குடியில் தனிநபர் யாரும் கட்டிடங்களை வாடகைக்கு கொடுக்க? முடியாது. பெரும்பன்மையான வங்கிகள் தற்பொழுது ஆரையம்பதியை நோக்கி நகர தொடங்கி உள்ளது என்பது அப்பட்டமான நிதர்சனம். பள்ளிவாயல் சம்மேளனம் என்பது இந்த அரசியல்வாதிகளின் தாளத்துக்கு ஆடும் ஒரு கருவி  என்பதை உண்மை உள்ள எந்த முஸ்லிமும் மறுத்தலிக்க மாட்டான். இது பற்றி விவாதிக்க இந்த அரசியல்வாதிகளால் முடியுமா??

இதற்கு மேலாக நடுநிலை வாதிகள் என்று தங்களை அடையளம் காட்ட முற்படும் தமிழர்களோ தமிழ் அரசியல்வாதிகளோ இவை பற்றி வாய் திறக்காதது தமிழனின் சாபகேடே அன்றி வேறேதுமில்லை.

வாழைச்சேனை நீதிமன்ற புதிய கட்டிடத்துக்காக வாழைச்சேனை பிரதேச செயலகத்தல் ஒதுக்கப்பட்ட காணியை புறந்தள்ளி விட்டு சத்தம் சந்தடி இல்லாமல் அதற்கான காணியை ஓட்டமாவடி மத்தி பிரதேச செயலகத்துக்கு (ஓட்டமாவடி பாலத்திற்கும் நாவலடி சந்திக்கும் இடையில்) சொந்தமான காணிக்கு கொண்டு செல்லப்பட்டது எத்தனை தமிழ் மக்களுக்கு தெரியும் என்பது கேள்வி குறி. அந்த நீதிமன்றத்தை பொறுத்தவரை சித்தாண்டி தொடக்கம் ஓட்டமாவடி வரைக்குமான நியாயதிக்கத்துக்கு உட்பட்ட ஒரு சேவை நிறுவனம் ஆகும். இதை ஓட்டமாவடியின் ஒரு மூலைக்கு கொண்டு செல்வது எவ்வாறு பொருத்தம் ஆகும்? சித்தாண்டியில் இருந்து ஒரு வழக்கிற்கு வரும் ஒரு ஏழை தமிழ் மகன்/ மகள் பெருந்தொகை பணத்தை போக்குவரத்துக்கு செலவு செய்வதுடன் எவ்வளவு தூரம் பயணம் செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவர் என்பதை ஒரு கணம் சிந்தித்து பாருங்கள்? சித்தாண்டி முதல் வாழைச்சேனை வரையான மக்களே இது உங்களுக்கான உரிமை அதை அவர்கள் பறித்து கொண்டு செல்லுகின்றனர் ஆனாலும் நீங்கள் எல்லாம் இன்னும் உறக்கத்தில் இருப்பது தான் வேடிக்கையானது.

அடுத்து, இந்த பாதகமான தமிழர் துரோக செயல் பற்றி எந்த முஸ்லிம் பாராளுமன் உறுப்பினரும் வாய் திறக்க மாட்டார்கள். ஆனாலும் இவ்வளவு பெரிய சதுர பரப்பில் உள்ள தமிழர்களுக்கு இலகுவாக கிடைத்து கொண்டிருந்த ஒரு சேவையை ஒரு குறுகிய நிலப்பரப்பை உடைய ஓட்டமாவடிக்கு முஸ்லிம் கிராமம் என்ற ஒரே ஒரு காரணத்துக்காக சம்பந்தமே இல்லாத இடத்துக்கு மாற்ற நினைப்பது தமிழர்கள் கேனயன் தானே என்ற எண்ணத்தை தாண்டி வேறு எதுவும் இல்லை.

இதில் உள்ள இன்னுமொரு சுவாரசியம் என்னவெனில், வாழைச்சேனை நீதிமன்றத்தில் பல தமிழ் சட்டத்தாரணிகள் இருந்தும் இந்த விடயம் தொடர்பாக அவர்கள் எவருமே வாய் திறந்ததே இல்லை அது ஏன் என்று அவர்களுக்கும் அந்த கடவுளுக்கும் மட்டுமே தெரிந்த இரகசியம். இதே நிலைமை ஒரு தமிழர் அதிகம் இருக்கும் இடத்தில் முஸ்லிம்களுக்கு இப்படி ஒரு அநீதி நடந்து அந்த இடத்தில் ஒரே ஒரு முஸ்லிம் சட்டத்தரணி மட்டுமே இருந்தாலும் இப்படி ஒரு நடவடிக்கையை இவ்வளவு இலகுவாக எடுக்க முடியுமா என்று நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள தேவையில்லை.

ஆனாலும் ஒரே ஒரு நிம்மதி என்னவெனில், இந்த பிரச்சினையில் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் தலையிட்டு இப்போதைக்கு அதை தடுத்து நிறுத்தி உள்ளார். ஆனாலும் அதை நிரந்தரமாக தடுத்து நிறுத்த சகல பாராளுமன்ற உறுப்பினார்களும் கை கோர்க்க வேண்

# சத்தமின்றி

டும். இது சம்பந்தமாக இராஜாங்க அமைச்சர் வியாழந்திரனுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கும் தெரியாமல் போக வாய்ப்பு இல்லை ஆனாலும் அவர்களின் பக்கம் இருந்து எந்த நடவடிக்கையும் இதுவரை எடுத்ததாக தெரிய வில்லை. அவர்களுக்கு தெரியும் பிரச்சனை வரும் போது கண்டும் காணாதது போல இருந்து விட்டு தேர்தல் நேரத்தில் ஊர் ஊராய் போய் அந்த ஊரில் உள்ள தங்களின் அடிமைகளை வைத்து உசுப்பு ஏத்தி விட்டால் காணும் மற்றும் கொஞ்ச விளையாட்டு உபகரணமும் பூரணப்படுத்தப்படாத கொங்ரீட் றோட்டும் கொடுத்தால் போதும் எங்கள் மோட்டு இளைஞர்களும் மக்களும் தமது உரிமை பிரச்சனைகளை எல்லாம் மறந்து அடிபட்டு தமக்கு வாக்கு போடுவார்கள் என்று.

அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் ஹக்கீம் பாராளுமன்றத்தில் அரங்கேற்றிய நாடகம் என்னவெனில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தில் இருந்து வாகரைக்கு சொந்தமான சில கிராமங்களின் வாக்களர் பதிவேட்டை திடீர் என்று சொல்லாமல் கொள்ளாமல் வாகரைக்கு மாற்றி விட்டார்கள் என்று நீங்கள் இரவோடு இரவாக சொல்லாமல் கொள்ளாமல் தூக்கி வந்ததை ஏன் நாங்கள் சொல்லாமல்கொள்ளாமல் வாகரைக்கு தூக்கி போக முடியாதா? அன்று உண்மையில் நடந்தது இது தான், நரி தந்திரம் கொண்ட இந்த முஸ்லிம் அரசியல் வாதிகள் அந்நேரத்தில் காணப்பட்ட உள் நாட்டு போர் சூழலில் இராணுவகட்டுப்பாடுகளற்ற பிரதேசத்துக்கான போக்குவரத்து கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறை சிக்கல்களை காரணம் காட்டி வாகரை பிரதேச செயலகத்துடன் இருந்த ரிதென்னை ஜெயந்தியாயை பிரதேசங்களுக்கான நிர்வாக சேவைகளை 2002 ஆம் ஆண்டுக்கு முன் தற்காலிகமாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்துக்கூடாக வழங்கியதைப் பயன்படுத்தி 2005 ஆண்டு மேற்குறிப்பிட்ட பிரதேசங்கள் உள்அடங்கலாக மாங்கேணியில் இருந்து புணானை வரையான மக்களின் வாக்கு பதிவேட்டை (Vote list) அப்போதைய ஆட்சியாளர்களுக்கு வாகரையில் வாக்கு பதிவேடு இருந்தால் அந்த அரசுக்கு வாக்கு சரிவை புலிகள் உண்டு பண்ணுவார்கள் என்று தங்களது வழமையான நயவஞ்சக சூழ்ச்சியால் வாகரை செயலகத்தில் இருந்த வாக்கு பதிவேட்டை தற்காலிகமாக ஓட்டமாவடி பிரதேச செயலகத்துக்கு மாற்றி எடுத்ததை கிழக்கில் யுத்தம் முடிவடைந்த பின்னரான காலப் பகுதியான 2006.07 ல் கச்சேரியினால் அந்த வாக்கு பதிவேடு திரும்பவும் வாகரைக்கு மாற்றப்பட்டது.

இது தான் அன்று உண்மையில் நடந்தது ஆனால் எமது மட்டக்களப்பு மாவட்ட அனேகமான தற்போதைய தமிழ் உயர் அதிகாரிகளுக்கோ தமிழ் பாராளுமன்ற உறுப்பினார்களுக்கோ இது பற்றிய பூரண விளக்கம் இல்லை என்பது தான் இங்கே வருந்தப்பட வேண்டிய விடயம்.

அதிலும் இங்கு உள்ள வேடிக்கை என்னவென்றால் இலங்கை சட்டத்தின் படி ஒரு பிரதேச மக்களின் வாக்கு பதிவேட்டை இன்னொரு பிரதேச செயலகத்துக்கு மாற்றுவது என்றால் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டு அனுமதி அளிக்க வேண்டும் ஆனால் வாகரை பிரதேச செயலகத்தில் நடந்த இந்த சித்து விளையாட்டுக்கு அந்நேரத்தில் பாராளுமன்ற அங்கீகாரமும் எடுக்கப்படவில்லை அனுமதியும் எடுக்கப்படவில்லை.

இந்த கேடு கேட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த வாக்கு பதிவேடு என்ன காரணத்துக்காக என்ன அடிப்படையில் மேற்சொன்ன இந்த இடைப்பட்ட காலப் பகுதியில் வாகரையில் இருந்து ஓட்டமாவடிக்கு எந்தவிதமான அலுவலக நடைமுறை கோட்பாடுகளை பின்பற்றாமல் மாற்றப்பட்டது என்பதை மறைத்து தங்களின் நிரந்தர வாக்கு பதிவேட்டை திரும்பவும் வாகரைக்கு கொண்டு சென்றது போல பாராளுமன்றத்தையே முட்டாளாக்கி கூச்சலிட்டது வேடிக்கையிலும் வேடிக்கை.

இதில் கவனிக்கப்பட வேண்டி விடயம் யாதெனில் முற்று முழுதாக தமிழ் மக்களை முட்டாளாக்கி தமிழர் தரப்பு நியாயங்களை இருட்டடிப்பு செய்து தமிழர் வரலாற்றையே புரட்டி போட பராளுமன்றத்தில் முயற்சிக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினார்களை இத்தனை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் ஒரே ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மட்டுமே இது பற்றி பாராளுமன்றத்தில் எதிர்த்து வாதிட்டுள்ளார்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வேண்டுகோள் உங்களின் சுயலாபங்களை கை விட்டு இன்றைய மட்டக்களப்பு மக்களின் இக்கட்டான இந்த நிலமையை சாதுரியமாக கையாண்டு வெற்றி கொள்வதற்கு நீங்கள் அனைத்து கட்சிகளும் ஒன்றிணையாவிட்டலும் இந்த விடயத்துக்காக மட்டுமேனும் ஒரே கொள்கையோடும் ஒரே பாதையில் பயணிப்பதுடன் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி உங்களது பொறுப்புகளில் இருந்து தப்பி கொள்ளும் உங்கள் வழமையான கேவலம் கெட்ட உத்தியைகை விட்டு நில அபகரிப்பு பிரச்சனைக்கு உடனடி தீர்வை பெற்று கொள்ளுவது இன்றைய காலத்தின் கட்டாயமாக உள்ளது. இந்த இடத்தில் நீங்கள் விடும் தவறானது இந்த சந்ததியை மட்டும் அல்லாமல் எதிர் கால தமிழ் சந்ததியின் இருப்பையே கேள்வி குறியாக்கும் செயற்பாடாக காணப்படும் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை.

பாராளுமன்ற உறுப்பினர் சாந்திரகாந்தன் அவர்களே, உங்களின் சொந்த ஊரான வாழைச்சேனையில் உள்ள கருவாக்கேணி, முறாவோடை போன்ற இடங்களில் முன்னர் இருந்த பல ஏக்கர் அரச காணிகளை இப்பொழுது உங்களால் காட்ட முடியுமா? சகட்டு மேனிக்கு வேலி போடப்பட்டு சொந்தம் கொண்டாடும் (பாடசாலை மைதான காணியையும் விட்டு வைக்கவில்லை) குறித்த ஒரு முஸ்லிம் குழுவுக்கு பின்னால் நிற்பது முழுக்க முழுக்க இந்த அரசியல் கட்சி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினார்களே. இதில் மிக கொடுமையான விடயம் என்னவெனில், கறுவாகேணியில் காணி அனுமதி பத்திரத்துடன் உள்ள தமிழ் காணி உரிமையாளர்களே இன்று தங்களுடைய காணிக்குள் போகமுடியாத நிலமையே காணப்படுகின்றது. அதையும் மீறி போன தமிழர்களுக்கு வாள், இரும்பு கம்பிகள் மற்றும் பயங்கர ஆயுதங்களுடன் வந்து உயிர் அச்சுறுத்தல் விடப்பட்டமையால் தமிழ் காணி உரிமையாளர்கள் தங்களது காணிகளை கை விட வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர். இவ்வளவும் அரச அதிகாரிகளுக்கு (GS & DS) தெரியாமல் நடந்த கைங்கரியம் இல்லை அவர்களின் அசமந்த போக்கும் ஏன் வீண் தலையிடி என்ற தங்களின் தனி நலன் சார்ந்த மன




நிலையும் தான். (இதற்கு நல்ல உதாரணம், அண்மையில் செங்கலடி பிரதேச செயலகத்தில் இலஞ்சம் வாங்கி பிடிபட்டு சிறைவைக்கப்பட்டுள்ள காணி உத்தியோகஸ்தர்) தமிழர்களின் இந்த கையறு நிலமைக்கு முழுக்க முழுக்க பொறுப்பு கூற வேண்டியவர்கள் கிராம உத்தியேகஸ்தரும் பிரதேச செயளலாரும் தான். தங்களின் அரச கடமையை சரிவர நிறைவேற்ற தவறிய காரணத்துக்காக அவர்கள் மேல் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள முடியும். இந்த நில அபகரிப்புக்கு எதிராக உடனடியாக அவர்களால் சட்ட நடவடிக்கை எடுத்திருக்க முடியும், ஆனால் செய்யவில்லை. அவர்கள் இலஞ்சம் பெற்றதாக நான் இங்கே குறிப்பிடவில்லை ஆனால் அவர்கள் தங்களது கடமையில் இருந்து தவறிவிட்டனர் என்றே கூறுகின்றேன்.

கறுவக்கேணி மக்களில் சிலர் அரச காணி அனுமதி பத்திரம் இருக்கின்ற படியால் அவர்கள் நீதி மன்றத்தில் இந்தகாணி அபகரிப்புக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியும் ஆனால் அவர்களின் பொருளாதார நிலமை காரணமாக அந்த நடவடிக்கைக்கு போக முடியாத கையறு நிலமையில் உள்ளனர். நீங்கள் நினைத்தால் அந்த வழக்குகளை முன்னின்று நடத்தி அந்த ஏழை மக்களின் வாழ்விடத்தை திரும்பவும் பெற்று கொடுக்க முடியும்.

அடுத்ததாக மைலங்கரைச்சி மற்றும் நாசிவன்தீவு கிராமங்களில் உங்கள் கட்சி பெரும்பான்மை வாக்குகளை பெற்றது மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மை, ஆனாலும் இன்றைய நிலையில் மைலங்காரச்சி கிராமத்தின் ஆற்றோர காணிகள் அனைத்தும் இன்று முஸ்லிம் மக்கள் வசம். ஆற்றுக்கு வர முடியமல் மதில்கட்டி ஆற்று பாவனையை கூட தனி நபர் ஆட்சியின் கீழ் கொண்டு வர எடுக்கப்பட்ட நடவடிக்கை கூட அந்தகிராம மக்களின் போராட்டத்தால் கைவிடப்பட்டது. மற்றும் நாசிவன்தீவின் தமிழர் காணிகள் பல பெரும்தொகை பணத்துக்காக காதும் காதும் வைத்தால் போல் முஸ்லிம் அரசியல்வாதிகளின் கைகூலிகளுக்கு கைமாற்றம் செய்யப்படுவது உங்களுக்கு தெரியுமா? அந்த ஊருடன் தொடர்பு இல்லாத சில வெளி ஆட்கள் சில லட்சங்களுக்கு அந்த காணிகளை கொள்வனவு செய்து பல லட்சங்களுக்கு முஸ்லிம் கை கூலிகளுக்கு கைமாற்றம் செய்யப்படுகின்றது. இதனை தடுப்பதற்கு நீங்கள் உடனடி நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்புகின்றோம்.

அதிலும் கவலையான விடயம் என்னவெனில் பிரதேச சபையில் உள்ள சில வெளிக்கள ஊழியர்கள் போன்ற ஒரு சில பணத்துக்காக பிணம் தின்னும் கூட்டத்துடன் சேர்ந்த உங்கள் ஒரு சில கட்சிகாரர்கள் தான் மாற்றம் செய்ய முடியாத சில காணி ஆவணங்களை கூட குறுக்கு வழியில் மாற்றம் செய்துமாற்று இனத்துக்கு விற்பனை செய்து வருவது உங்களுக்கு தெரியாத ஒன்று இல்லை. இதில் பிரதேச சபை தலைவருக்கும் ஒரு பங்கு செல்வது அங்கு கடமை புரியும் உழியர்கள் அறிந்த உண்மை.

உங்கள் பெயரையும் உங்கள் கட்சியின் பெயரையும் சொல்லி உங்களை சுற்றி உள்ள குள்ள நரிகள் மக்களுக்கான எந்த நன்மையான காரியங்களையும் செய்தது கிடையாது. மாறாக உங்களின் கட்சியின் பெயரால் மண் கல் கள்ள காணி பிடித்தல் ஊடாக தங்களின் பைகளை

# சத்தமின்றி

நிரப்புவது மட்டும் இல்லாமல் கடைசியில் அந்த பழி உங்கள் கட்சியின் பெயரிலேயே மக்கள் மத்தியில் உலவுகின்றது. உங்களை சுற்றி உள்ளவர்களை நீங்கள் கண்காணித்து கட்டுப்படுத்து வீரகளேயானால் உங்கள் விருப்பம் போல் பல நன்மைகள் மக்களை இலகுவாக சென்றடையும்.

அடுத்ததாக உங்களின் போராட்டகால நண்பனின் பெயரால் உங்களினால் உருவக்கப்பட்ட குகனேசபுரம் மற்றும் ஆலங்குளம் கிராமங்கள் என்பன இன்று முஸ்லிம்களின் நிர்வாக பிரிவுக்குள் கொண்டு செல்ல நடக்கும் சதிக்கு நீங்கள் பலி ஆக விட மாட்டீர்கள் என்று அந்த கிராம மக்கள் திடமாக நம்புகின்றனர். நீங்கள் தமிழ் இனத்துக்கு செய்த துரோகங்களை மன்னித்து உங்களை நம்பி உங்கள் கட்சிக்கு வாக்கு போட்ட மக்களுக்கு இதை உங்களின் பிராயசித்தமாக நினைத்து இந்த பிரச்சனையில் இருந்து இந்த மக்களை விடுவிப்பீர்கள் என்று நம்புகின்றோம். இந்த மட்டக்களப்பை பொறுத்த மட்டில் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களில் உங்களுடைய குரலுக்கு மட்டுமே தற்போதைய அரசாங்கம் செவி சாய்க்கும் என்பது கண்கூடு. ஆகவே இப்பொழுது மிகவும் திட்டம் இட்டு மேற்கொள்ளப்படும் இந்த காணி அபகரிப்பு சம்பந்தமாக அரசுடன் பேசி உடனடி தீர்வை பெற்று கொள்ள வேண்டும் என்பது இந்த மக்களின் எதிர் பார்ப்பும் கூட. எங்களை பொறுத்த மட்டில் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் குரலும் உங்களின் இந்த ஆட்சியளர்கள் வைத்துள்ள நம்பிக்கையும் கைகோர்க்கும் இடத்தில் எமது தமிழ் இனம் இந்த சதியில் இருந்து மீள்வது என்பது மிக கடினமான ஒன்று இல்லை. இந்த இக்கட்டான நேரத்தில் ஒரு வரை ஒருவர் தூர் வாருவதை விடுத்து இந்த விடயத்தில் நீங்கள் இருபாராளுமன்ற உறுப்பினார்களும் ஒன்று சேர்ந்து ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்புகின்றோம். அண்மையில் மட்டக்களப்பு அரச அதிபரையே அமைச்சுக்கு அழைத்து இது சம்பந்தமாக அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் அறியாமல் இருக்க முடியாது.

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்களே முஸ்லிம் இனத்தவருக்கு யாரவாது ஒரு சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் "உம்" என்றாலே வரிஞ்சு கட்டி கொண்டு போகும் நீங்கள் இவ்வளவு அநியாயங்களும் தமிழ் மக்களுக்கு நடந்த பின்னும் நீங்கள் வாய் மூடி மௌனமாக இருப்பது உங்களை நேசிக்கும் ஒட்டுமொத்த மட்டக்களப்பு தமிழ் மக்களையும் உண்மையிலேயே வேதனைப்பட வைக்கும் செயல் அன்றி வேறு ஒன்றும் இல்லை. நீங்கள் தான்தோன்றி தனமாக காரமுனையில் பெரும்பன்மை இனத்துக்கு ஏதிராக முன்னெடுத்த ஆர்ப்பாட்டமானது மட்டக்களப்பு தமிழ் மக்கள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் என்ற தேவையில்லாத ஒருகருத்தினை உருவாக்கியது மட்டுமலலாமல் அந்த ஆர்ப்பாட்டத்தால் தமிழர் கண்ட நன்மை ஏதும் இல்லை!

ஆனால் எப்பொழுதும் தமிழர்கள் சிங்களவர்களை ஏற்று கொள்ள போவது இல்லை என்ற ஒரு எதிர்வினை மன தோற்றத்தை சிங்கள அரசியல்வாதிகள் மனதில் பதிய வைத்து தங்களின் கைங்கரியத்தை கனகச்சிதமாகநிறைவேற்ற இந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் தவறவில்லை.

இந்த மாவட்டத்தை பொறுத்த வரை நீங்களும் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தனும் இதய சுத்தியுடன் இந்தபிரச்சனையை கையில் எடுத்தால் மட்டுமே இந்த பிரச்சனைக்கு நிரந்தரமானதும் தமிழர் நலன் சார்ந்தது மான ஒரு நல்ல தீர்வினை பெற்று கொள்ள முடியும்.

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் அவர்களே... உங்களின் சொந்த பிரதேசத்தில் உள்ள சவுக்கடி மற்றும் தளவாய்போன்ற ஊர்களின் தற்போதைய நிலை பற்றி நீங்கள் ஏதேனும் தெரிந்து வைத்துள்ளீர்களா...??? காத்திரமான ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்துள்ளீர்களா...??? இந்த எல்லை கிராம தமிழ் மக்களின் காணி பிரச்சனையை விட உங்களுக்கு தலை போற வேறு விடயம் என்ன உள்ளது இந்த மட்டக்களப்பில்...??? ஐயா நீங்கள் ஒன்றை மட்டும் மனதில் வைத்து கொள்ளுங்கள். மட்டக்களப்பு மக்களை ஒவ்வொரு ஐந்து வருடத்துக்கு ஒரு முறை தொடர்ச்சியாக முட்டாள் ஆக்க முடியாது என்பதை!

இது வரை எந்த விதமான ஆக்கபூர்வமான பிரச்சனைக்கும் பாராளுமன்றத்தில் குரல் கொடுக்காமல் நித்திரையில் ருக்கும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினார்களே இந்த பிரச்சனைக்காவது உங்கள் நித்திரையை கலைத்து தமிழின இருப்புக்கான இந்த போராட்டத்துக்கு தயவு கூர்ந்து உங்கள் பங்களிப்பை வழங்குங்கள். இதிலும் நீங்கள் உங்கள் மென் போக்கை காட்டி தப்பிக்க நினைத் தால் அடுத்த தேர்தலுக்கு உங்களுக்கு என்ன படம் புகட்ட வேண்டும் என்பது இந்த மட்டக்களப்பு மக்களுக்கு தெரி யும். அத்துடன் இனிவரும் காலங்களில் இந்த பிரச்சனை யில் உங்கள் பங்களிப்பு என்ன வென்று உன்னிப்பாக கவனிக்கப்பட்டு தொடர்ச்சியாக இங்கே எழுதப்பட்டு கொண்டிருக்கப்படும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கேள்வி குறியாகி போய் இருக்கும் தமிழர் இருப்பு மற்றும் பூர்வீக வரலாறு மாற்றம் பற்றி தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. இந்த போராட்டமானது அடுத்தவனுக்கான போராட்டமாக தயவு செய்து பார்க்காதீர்கள், நாளைய எங்கள் பிள்ளைகளின் இருப்புக்கான போராட்டம் தான் இந்த போராட்டம்!

நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவு காலமும் உங்கள் ஆதரவாளனுக்காக முகபுத்தகத்தில் மற்ற கட்சிகாரனுடன் சண்டை போடுவதை விட்டு விட்டு ஒரு நிமிடம் சிந்தியுங்கள் உங்கள் பிள்ளைக்கான எங்கள் முன்னோர் விட்டு போன எங்கள் பூமியை மாற்றனுக்கு தாரைவார்த்து கொடுத்து விட்டு என் பிள்ளையை மற்றனிடம் கை ஏந்த வைக்க போகிறேனா...? உங்களுக்கான இறுதி அடக்கத்துக்கான ஆறு அடி நிலத்துக்காக உங்கள் பிள்ளை மாற்றான் காலை பிடிக்க வேண்டுமா? ஒரு நிமிடம் நின்று உங்கள் தலைவனை பார்த்தே கேளுங்கள் அவர்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற துடிக்கும் தமிழர் நில இழப்புமற்றும் வாக்கு பறிப்புக்கு ஏதிராக நீங்கள் பாராளுமன்றத்தில் எடுத்த நடவடிக்கை என்ன...? உங்கள் பக்கம் இருந்து இந்த பகல் கொள்ளைக்கு ஏதிராக எடுத்த நடவடிக்கை என்ன ஐயா என்று...! உங்களின் இந்த கேள்வி இந்த பாராளுமன்ற உறுப்பினர்களை கட்டாயம் சிந்திக்க வைக்கும் என்பது உண்மை. ஏனெனில் உங்கள் பலம் இல்லாமல் இந்த தமிழ் பாராளுமன்ற உறுப்னர்களால் தங்கள் காலத்தை ஒட்ட முடியாது.

ஒவ்வொரு கட்சியினதும் பாராளுமன்ற உறுப்பினார் களினதும் கடந்த கால கசப்பான சம்பவங்கள் கடந்து போனவையாகவே இருக்கட்டும் அதற்காக நீங்கள் சண்டை போடாமல் இனி எம்மினத்துக்கு என்ன தேவை



என்றறிந்து அதுக்காக ஒன்றிணைந்து உங்கள் பாராளுமன்ற உறுப்பினருடன் சண்டை போடுங்கள்.

இன்று உங்களின் சின்ன சின்ன தேவைகளுக்காக நீங்கள் உங்கள் பாராளுமன்ற உறுப்பினரை இது சம்மந்தமாக கேள்வி கேட்காது விட்டால் உங்கள் மனைவியின் வயிற்றில் உள்ள உங்கள் குழந்தையை நீங்களே எட்டி காலால் உதைப்பதற்க்கு சமனாகும். ஒரு அரசாங்க வேலைக்காகவும் ஒரு மண்/கல் அனுமதிக்காகவும் நீங்கள் செய்ய போகும் அனுசரிப்பானது உங்கள் பிள்ளையின் எங்கள் எதிர் கால சந்ததியின் தலையில் கல்லை தூக்கி போடுவதற்கு ஒப்பானது.

இதற்கு நல்ல ஒரு உதாரணம் அண்மையில் வாகரை ஆலங்குளம் தமிழ் மக்களுக்கு வாகரை பிரதேச செயலகத்தால் ஆலங்குளத்தில் வழங்கப்பட்ட காணியை துப்பரவு செய்ய சென்ற தமிழ் மக்களுக்கு படு பயங்கர ஆயுதங்கள் சகிதம் வந்த முஸ்லிம் அரசியல்வாதிகளின் காட்டு மிராண்டி கூட்டம் எந்த விதமான ஆவணங்களும் இன்றி அரச காணியை தங்கள் காணி என்று கூறி அந்த தமிழ் மக்களுக்கு எப்படி கொலை அச்சுறுத்தல் விடுக்கின்றது. இவர்களின் கொடூர முகம் விளங்கும். இத்தனைக்கும் அந்த ஆலங்குளம் மக்கள் வாழைச்சேனை காவல்துறையில் முறையிட்டும் இது வரை எந்த சட்ட நடவடிக்கையும் இல்லை. இதற்கு அந்த ஆலங்குளம் மக்களே சாட்சி.

இத்தனைக்கும் ஆலங்குளம் மக்களே இளையோரே நீங்கள் கொடி பிடிக்கும் எந்த கட்சியும் நீங்கள் பல முறை முறையிட்டும் இது வரை எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கையும் இல்லை. நீங்கள் வீதியில் இறங்கி போராடியும் எந்த கட்சியும் எட்டியும் பார்க்கவில்லை தானே. அற்ப சொற்ப சலுகைக்காக உங்கள் உரிமையை விலை பேசி விற்றால் இதை விட மோசமான நிலை வந்தாலும் வியப்பேதும் இல்லை.

மட்டக்களப்பு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கான வேண்டுகோள் உங்களுக்கும் உங்கள் பரம்பரைக்கும் எதிராக எவ்வளவு பெரிய சதி வலை ஆரம்பம் தொட்டு கனகச்சிதமாகபின்னப்பட்டு வருகின்றது என்பதை தெள்ள தெளிவாக எழுதி உள்ளோம். இதற்கு பிறகும் நீங்கள் வாய் மூடி மௌனிகளாக இருக்கும் பட்சத்தில் உங்கள் வீட்டை இந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் விலை பேசும் நாள் வெகு தொலைவில் இல்லை. இதன் உண்மை தன்மையை முஸ்லிம் கிராமங்களுக்கு அண்மையில் இருக்கும் கிராம மக்களை கேளுங்கள், சொல்லுவார்கள்!

ஒரு காலத்தில் காத்தான்குடிக்கும் ஆரையம்பதிக்குமான தூரம் சைக்கிள் பயணம் ஆனால் இன்று ஆரையம்பதிக்குள் தான் காத்தான்குடியின் ஒரு பகுதியும் நாவற்குடா கடற்கரை பக்கம் மற்றைய பகுதியும் இருக்கின்றது.

நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் நீங்கள் வாக்கு போட்டு பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்த உங்கள் பாராளுமன்ற உறுப்பினார்களில் யார் இந்த இன்னலின் போது எமக்காக குரல் கொடுக்கின்றார் யார் இவை எதை பற்றியும் கவலை கொள்ளாமல் இன்னும் மண் பேமிட் கல் பேமிட்டுக்கு பின்னால் திரிகின்றார், யார் மாகணசபையை இலக்கு வைத்து நடுநிலைவாதி வேசம் போடுகின்றார், யார் தாங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்றதையே மறந்து அடுத்த தேர்தல் வரைக்கும் உறங்கு நிலையில் இருக்கின்றார் என்று தெரிந்து வைத்து கொள்ளுங்கள் எதிர் கால மாகாணசபை தேர்தல் பாராளுமன்ற தேர்தலின் போது உங்கள்தெரிவுக்கு இலகுவாக இருக்கும்.

இதிலும் முக்கியாமாக ஆரையம்பதி, மஞ்சந்தொடுவாய், ஆறுமுகத்தான்குடியிருப்பு, தளவாய், வாழைச்சேனை, முறாவோடை, கறுவாக்கேணி, மைலங்கரச்சி, குகநேசபுரம், ஆலங்குளம், வட்டவான், மாங்கேணி, பெண்டுகள் சேனை, ஊத்துசேனை, வடமுனை, முறுத்தானை வாகனேரி மற்றும் இவைகளுடன் இணைந்து இருக்கும் அனைத்து எல்லை கிராம மக்களும் முக்கியமாக இளைஞர்கள் நீங்கள் அரசியல் உணர்ச்சிகளுக்கு அடிமையாகாமல் சற்று சிந்தித்து உங்களின் பிள்ளைகளுக்கு எதை கொடுக்க போகிறீர்கள் என்றுதீர்மானியுங்கள். உங்கள் மூதாதையார் நிலம் உங்கள் பிள்ளைக்கு சொந்தம் இல்லை என்ற நிலை இப்பொழுது!

ஆனால் உங்களை உசுப்பேற்றி உசுப்பேற்றி தான் இன்றைய சகல அரசியல் கட்சி பாராளுமன்ற உறுபினர்களும் வாக்குகளை பெற்று தாங்கள் சுக போகங்களை அனுபவிக்கின்றனரே தவிர உங்கள் பிரச்சனைகளுக்கு அவர்கள் இதய சுத்தியுடன் எதையும் செய்யவில்லை என்பது தான் நிதர்சனம். தயவு செய்து இந்த பிரச்சனைக்கு உடனடி தீர்வு எடுத்து தரும் வரை இந்த தமிழ் அரசியல் வாதிகளுடன் சேர்ந்து உங்கள் கெத்துக்காகவும், அற்ப சொற்ப சுக போகங்களுக்காகவும் உங்கள் இருப்புக்கான உரிமையையும் நாளையசந்ததிக்கான நில வள பயன்பட்டையும் தயவு செய்து புதை குழியில் தள்ளி விடாதீர்கள். நீங்கள் இவ்வளவு காலமும் அவர்களுக்காக கஸ்டப்பட்டதுக்கு கைமாறாக இந்த பிரச்சனைக்கு உடனடி தீர்வை பெற்று தருமாறு வற்புறுத்துங்கள். வெளிப்படையான செயற்பட்டை வற்புறுத்துங்கள் அதை விடுத்து வார்த்தை யாலங்களை நம்பாதீர்கள்.

மக்களே உங்கள் ஊரில் உள்ள சிலர் தங்களின் சொந்த மண் கல் பேமிட்டுக்காகவும் காணி பிடிப்புக்காகவும் கட்டட ஒப்பந்தத்துக்காகவும் இந்த அரசியல்வாதிகளின் வாலை பிடிது கொண்டு உங்கள் ஊரில் உள்ள அனைவரையும் மடையார் ஆக்கி தங்களினதும் தங்களுக்கு வேண்டிய அரசியல் வாதிகளினதும் கைங்கரியங்களை மிக கவனமாக நிறைவேற்றி உங்களையும் உங்கள் ஊரையும் குறுகிய காலத்துக்குள் சுடுகாடாய் ஆக்கும் காரியங்கள் தற்பொழுது திட்டமிட்டு நடந்து கொண்டிருக்கின்றது. இனியாவது இவர்களின் பேச்சை நம்பி முஸ்லிம்களின் அடிமை சாசனத்திக்குள் சிக்காமல் இப்படியான நபர்களை உங்கள் ஊரில் கால்வைக்க விடாமல் அடித்து துரத்துங்கள். உங்களின் இந்த நில சுரண்டலுக்கான தீர்வினை பெற்று தந்த பிறகு ஊருக்குள் வர அனுமதியுங்கள்.

மட்டக்களப்பு தமிழ் அரசியல்வாதிகளை நோக்கிய உங்களின் காத்திரமானதும் ஆக்கபூர்வமானதுமான செயற்பாடே உங்கள் எதிர் கால சந்ததியின் இருப்பையும் உங்களுக்கான இறுதி அடக்கத்துக்கான ஒரு ஆறு அடி நிலத்தை சுதந்திரமாக பெற்று கொள்ளுவதையும் தீர்மானிக்கும் என்பதில் மாற்று கருத்து கிடையாது என்றார்




# இயற்கை வளம் பல்லுயிர் பாதுகாப்பு: 10 விதிகள் மரம் நடுவது எப்படி?



மரம் நடுவதற்கான 10 விதிமுறைகளை அறிவியலாளர்கள் பரிந்துரைத்துள்ளனர். இதைக் கவனமாக பின்பற்றுவது சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக இருக்கும்.

மரம் நடுவது நன்மை தரும் பருவநிலை மாற்றம் மற்றும் பல்லுயிர் பெருக்கத்தைக் காக்க உதவும் என மரங்கள் பல பலனை தரும். ஆனால் இடத்திற்கு தகுந்தாற்போல ஒரு மரத்தை நடவில்லை என்றால் அதுவே தவறாக முடிந்துவிடும் என்கின்றனர் லண்டனில் உள்ள க்யூ தாவரவியல் பூங்காவை சேர்ந்த நிபுணர்கள்.

அதேபோல மரம் நடுவதற்கு முன் நாம் இருக்கும் காடுகளை அழிக்காமல் காப்பதும் முக்கியமான ஒன்று. பூமியில் வாழ்வதற்கு காடுகள் மிக அவசியம்.

உலகில் உள்ள நான்கில் மூன்று பங்கு மரங்கள், உயிரினங்களுக்குக் காடுகள்தான் இருப்பிடம். கரியமில வாயுவை உள்வாங்கி, உணவு, எரிபொருள் மற்றும் மருந்து எல்லாம் அளித்து வருவது காடுகள்தான்.

ஆனால் ஒவ்வோர் ஆண்டும் பெரும் பங்கிலான காடுகள் அழிக்கப்படுகின்றன.

"இந்த பூமியின் எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டும் என்றால் சரியான மரங்களை தகுந்த இடங்களில் நட வேண்டும்," என்கிறார் லண்டனில் உள்ள சர்வதேச தாவரவியல் தோட்ட பாதுகாப்பை சேர்ந்த ஆராய்ச்சியாளர் பால் ஸ்மித்.

உலகம் முழுவதும் அழிக்கப்பட்ட காடுகளை ஈடுகட்ட மரக்கன்று நடும் பணி நடைபெற்று வருகிறது.

ஆனால் மரங்களை அதற்கு தகுந்த இடங்களில் நடவில்லை என்றால் அது மோசமான விளைவையே தரும்.

இதோ மரம் நடுவதற்கு முன் ஒருவர் மனதில் வைத்து கொள்ள முக்கிய விதிகள்

**1. முதலில் இருக்கும் காட்டை பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்**

காடுகள் எவ்வாறு உள்ளதோ அதை அப்படியே விட்டு விட வேண்டும். அதுதான் முதல் விதி. எந்த மாற்றமும் செய்யப்படாத பழைய காடுகள் அதிகளவிலான கரியமில வாயுவை உள்வாங்குகின்றன.

நெருப்பு, புயல் மற்றும் வறட்சியை வலுவாக தாக்கு பிடிக்கின்றன. "வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் காடுகள் அழிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்பதை நாங்கள் அழுத்தமாக சொல்லி வருகிறோம். மேலும் இருக்கும் காடுகளை பாதுகாப்பது நமது தலையாய கடமை," என்கிறார் லண்டன் க்யூ தாவரவியல் பூங்காவை சேர்ந்த பேராசிரியர் அலெக்சாண்ட்ரே.

**2. உள்ளூர் மக்களை சேர்த்துக் கொள்ளுங்கள்**

மரக்கன்றுகள் நடும் விழாக்களில் அந்த பகுதியை சேர்ந்த உள்ளூர் மக்களை சேர்த்துக் கொள்வது அந்த திட்டத்தின் வெற்றியை உறுதி செய்யும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உள்ளூர் மக்கள்தான் அந்த காடுகளையும், மரங்களையும் கவனித்துக் கொள்ள வேண்டும். அதேபோல அந்த பகுதியில் நடப்படும் மரங்கள் அந்த பகுதியின் மக்களுக்குத்தான் முதலில் அதிக நன்மையை தரும்.

**3. பல நோக்கங்கள் வேண்டும்**

மரம் நடுவது என்பதை ஒரே கண்ணோட்டத்துடன் பார்க்காமல், பருவநிலை மாற்றத்துக்கு எதிரான தீர்வு, பல்லுயிர் பெருக்கம், பொருளாதார நன்மைகள் போன்ற அனைத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**4. சரியான இடத்தை தேர்ந்தெடுங்கள்**

புல்தரை அல்லது அதிக ஈரத்தன்மை கொண்ட இடங்களில் மரங்களை நடுவதைவிட முன்பு காடாக இருந்து அழிக்கப்பட்ட இடங்களில் மரங்களை நடுங்கள்.

**5. தானாக வளரும் மரங்களை வளரவிடுங்கள்**

அதேபோன்று புதியதாக ஒரு மரக்கன்றை நட்டு அதை வளர்ப்பதைக் காட்டிலும் தானாக வளரும் மரங்களை கவனித்துக் கொள்ளுங்கள். இது பல விதத்தில் செலவு களை குறைக்கும். மேலும் சிறந்த பலனை தரும் ஒன்றாகவும் அது இருக்கும்.

**6. சரியான மரத்தை தேர்ந்தெடுங்கள்**

மரங்களை நடத் திட்டமிடும்போதே சரியான மரங்களை தேர்வு செய்வது அவசியம். எந்த பகுதியில் மரம் நட திட்டமிட்டுள்ளீர்களோ அந்த பகுதியில் இயல்பாக வளரும் மரங்களை தேர்வு செய்யுங்கள்.

அதில் அரிதான் மரங்களையும், பொருளாதார ரீதியில் நன்மை பயக்கும் மரங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள். ஆனால் அந்த பகுதியை புதியதாக ஆக்கிரமிக்கும் தன்மை கொண்ட மரங்களை தேர்வு செய்யாதிருங்கள்.

**7. பருவநிலைகளுக்கு ஏற்றாற்போல**

ஒரு பகுதியில் மரம் நடத் திட்டமிடும்போது அந்த பகுதியின் பருவநிலை குறித்தும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே அந்த பகுதியின் பருவநிலைகளுக்குத் தகுந்த மர விதைகளை தேர்வு செய்ய வேண்டும். மேலும் அது எதிர்காலத்தில் பருவநிலைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஒத்துப் போவதாகவும் இருக்க வேண்டும்.




**8. எங்கு வாங்குவதென திட்டமிடுங்கள்**

அந்த உள்ளூர் பகுதியில் வளரக்கூடிய மரம் என்றால் அதை வேறு எங்கோ சென்று வாங்குவதை காட்டிலும் அதை அந்த உள்ளூர் மக்களுடன் இணைந்து பெறுவதற்கான முயற்சியில் ஈடுபடுங்கள்.

**9. உள்ளூர்வாசிகள் அறிவு மற்றும் அறிவியல்**

உள்ளூர்வாசிகள் சொல்வதுடன் அறிவியல் தகவல்களையும் இணைத்துக் கொண்டு யோசித்துத் திட்டமிடுங்கள். நீங்கள் பெருமளவில் மரம் நடத் திட்டமிட்டுள்ளீர்கள் என்றால் அதை முதலில் சிறிய அளவில் செய்து பழகுங்கள்.

**10. பொருளாதார பலன்கள்**

மரங்கள் நடப்படும் நடவடிக்கைகள் தொடர வேண்டுமானால், அந்தப் பகுதியில் இருக்கும் ஏழைகள் உள்ளிட்ட அனைவருக்கும் அவற்றின் மூலம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பொருளாதார ஆதாயம் கிடைக்க வேண்டும்.

நன்றி: பிபிசி

## சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

"இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்."



**Amman Women & Child Development Center**
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai — 4 67 490 4955

**Hermans Girls Home**
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai — 97 76 058 5344

**Jesus Lives Girls Home**
Main St., Kalmuanai - Amparai — 01 94 67 492 1161

**Methodist Girls Home**
Wesly School Rd, Kalmuanai - Amparai — 94 67 222 9182

**RKM Sharatha Girls Home**
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai — 05 94 67 222 3600

**Seephe Divi Child Delelopment Centre**
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai — 94 67 226 1144

**Sri Indasara Child Development Centre**
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai — 94 27 562 2919

**St. Maryís Boys Home**
Yard Rd, Kalmunai - Amparai — 01 94 71 354 5782

**Swami Vipulananatha Boys Children Development Centre**
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai — 94 67 227 7514

**Canaan Harvest Childrenís Home**
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla — 94 77 229 2022

**Up Country Children Home**
19/6, Badulupitiya Rd - Badulla — 94 55 222 3335

**Arutpani Girls Home**
Beach Rd, Navakkuda - Batticaloa — 94 77 6849

**Assisi Boys Home**
Main Rd, Kurukulmadam - Batticaloa — 94 65 225 0313

**Benthel Boys Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa — 94 77 632 8577

**Benthel Girlís Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa — 94 77 632 8577

**Bethel Girls Children Home**
Vipulanada Rd, Valichenai - Batticaloa — 94 77 515 3078

**Eravur Children Care Home**
Meerakerny Rd, Eravur - Batticaloa — 94 77 996 6345

**Good Shepherd Children Home**
Post Office Rd, Valaichenai - Batticaloa — 94 65 225 7400

**Hari Boys Home**
New Kalmuani Rd - Batticaloa — 94 65 222 3653

**Jeevananthan Girls Home**
Main Rd, Pudukuduirippu - Batticaloa — 94 65 365 0438

**Kattankudy Boys Home**
Kattankudy 01 - Batticaloa — 94 65 224 5308

**London Sivan Kovil Girls Home**
Main Rd, Settipalayam - Batticaloa — 94 65 205 6336

**Managayarkarasi Girls Home**
Maruthadi Rd - Batticaloa — 94 65 205 7310

**Manikkavasagar Boys Home**
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa — 94 77 191 3037

**Methodist Girls Home**
Bar Rd, Kotamunai - Batticaloa — 94 65 222 5402

**Miyani Boys Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa — 94 77 459 0298

**Miyani Girls Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa — 94 77 792 6410

**Pariyowan Boys Home**
Trinco Rd, Santhurukondan - Batticaloa — 94 05 222 2524

**Ramakrishana Boys Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa — 94 65 222 2752

**Ramakrirushana Girls Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa — 94 65 222 2752

**Sakthi Girls Home**
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa — 94 65 225 0745

**Shakthi Girls Home**
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa — 94 65 364 2290

**Shanthi Bawan Girls Home**
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa — 94 65 222 2524

**Spaks Girls Home**
Main Rd, Periya Kallaru - Batticaloa — 94 67 222 1875

**Thilahawathiyar Girls.Children Home**
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa — 94 77 629 8461

**Thilahawathiyar Girls Home**
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa — 94 65 225 1166

**Thiruniyanasampathar Gurukulam**
Main Rd, Kaluthavalai - Batticaloa — 94 65 225 0277

**Trust Village Womens Development Center**
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa — 94 76 789 7573

**Vidhyajothi Boys Home**
Central Rd - Batticaloa — 94 77 481 6576

**Vipulanantha Children Home**

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101
**Vivehanada Children Home**
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442
**Yoga Suwami Saiva Girls Children Home**
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420
**St.Joseph Elders Home**
Trinco Rd- Batticaloa 94 71 851 1951
**Swami Vipulananthar Elder Home**
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202
**Ozanam Centre**
Sathurukondan - Batticaloa 94 65 365 8636
**Uthayam Association of Visually Handicapped**
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

**Elim Boys Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824
**Elim Girls Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962
**Forth Sq Girls Child Development Center**
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109
**Hindu Board Boys Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304
**Hindu Board Girls Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082
**Holy Family Girls Child Development Center**
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270
**Karunai Girls Child Development Center**
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334
**Karunalayam Annai Krishnabai Girls C. D. C.**
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873
**Karunalayam Boys Children Development Center**
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002
**Salvation Army Girls Child Development Center**
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696
**SOS Village Child Development Center**
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711
**Sri Pramanatha Girls Child Development Center**
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004
**Thurkkapuram Girl Child Development Center**
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894
**Valluvar Girlsí Child Development Center**
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513
**Mother Teresa Elder Home Amithi Illam**
Kondavil - Jaffna 94 21 223 0302
**Sivapoomi Elders Home**
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230
**Sivapoomi School ForChildren with Special Needs**
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894
**Vaalvagham-Home for the Vissually Handicapped**
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

**Aruvucholai Boys Child Development Center**
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313
**Aropanam Boys Child Development Center**
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088
**Gandhi Nilaya Chidren Home & Training Centre** - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461
**Holy Family Girls Child Development Center**
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115
**Karuna Nilayam Girls Child Development Center**
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836
**Mahadeva Saiva Boy Child Development Center**
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121
**Mahadeva Saiva Girls Child Development Center** (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119
**Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)**
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118
**Sencholai Boysí Child Development Center**
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308
**Sencholai Girlí Child Development Center**
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504
**Thangamma Elders Home** -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619
**Trist Children Home**
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694
**Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home**
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162
**Association. to Empowerthe Special Needs Children**
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776
**Killinochchi Special Needs Newtwork**
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

**Annai Girlsí Child Development Center**
Uppukulam - Mannar 94 23 222 2483
**Anpu Sakotharar Boys Child Development Center**
Keeri - Mannar 94 77 534 4427
**Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center**
Pesalai - Mannar 94 23 205 0095
**Sivanarul Boys Child Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998
**Sivanarul Girls Children Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804
**Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory**
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

**Saradha Mission Child Development Center**
Kirigalpotta - Matale 94 66 205 1721
**St. Francis Child Development Center**
Vihaara Rd - Matale 94 77 438 4851

**Anpu Boysí Child Development Center**
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502
**Barathy GirlChild Development Center**
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234
**Ladani Girls Child Development Center**
Silawaththai - Mullaitivu 94 77 422 8853
**Nallayan Girls Child Development Center**
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034
**Pari Girlsí Child Development Center**
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034
**Iniya Vazhvu Illam**
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

**Happy Home Child Development Center**
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174
**Maranatha Child Development Center**
Hatton - Nuwara Eliya 94 51 222 2489
**Rainbow Child Development Center**
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680
**Shalom Child Development Center**
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

**Annai Saratha Children Home**
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506
**Anpu Illam**
167, Central Rd - Trincomalee 94 26 222 1214
**Four Square**
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170
**Grace Girls**
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644
**Hasanath Boys**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**Hasanath Girls**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**My Fatherís House Boys Children Homes**
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861
**Rawlathul Athfal**
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438
**Rewathe Child Development Center**
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328
**Sivayogasamayam Swami Gangadaranatha Children Home**
64 Main St. - Trincomalee 94 26 222 2049
**Sri Sanmuga Boys** 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234
**Sri Sanmuga Girls** 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521
**Thapovanam Boys**
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Thapovanam Girls** Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Deva Anpu Children Home**
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859
**Hindu Anpakam Children Home**
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683
**Salvatorian Girls Home**
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577
**Sri Ahilandeswary Children Home** Kovilkulam - Vavuniya 94 24 222 1685
**Mother Teresa Elder Home** Pampaimadu -Vavuniya 94 24 205 4494
**Sivan Elders Home**
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827
**Thanagamma Eleders**
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

# தமிழர்களை நோக்கி வரும் எதிர்க்கட்சிகள்

## அரசியல் ஆய்வாளர் நிலாந்தன்

ஜனவரி 13, 2021

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் சஜித் பிரேமதாச ஒரு சந்திப்பை ஒழுங்குபடுத்தியிருந்தார். ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணிக்கு ஆதரவான தொழில்சார் வல்லுநர்களுக்கான தேசிய அமைப்பும் புத்திஜீவிகள் மன்றமும் மேற்படி சந்திப்பை ஒழுங்குபடுத்தியிருந்தன. யாழ்ப்பாணத்தில் உள்ள டில்கோ உல்லாச விடுதியில் இரவு உணவுடன் நடந்த அச்சந்திப்பில் புத்திஜீவிகள் மன்றத்தைச் சேர்ந்த பேராதனை பல்கலைக் கழகத்துப் புத்திஜீவிகள். வந்திருந்தார்கள். அவர்களுடைய நண்பர்களான யாழ் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறையைச் சேர்ந்த புலமையாளர்களும் அதில் பங்குபற்றினார்கள்.

சஜித் பிரேமதாச தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிகளை முன்னிறுத்தியே முதலில் உரையாடினார். ஐக்கிய மக்கள் சக்தியை அவர் ஒரு புதிய கூட்டணியாக ஒரு புதிய தொடக்கமாக உருவகித்தார்.அங்கு கூடியிருந்தவர்களில் ஒருவர் இனப்பிரச்சினைக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்வு என்ன என்று கேட்ட போது சஜித் 13வது திருத்தத்தை முன்வைத்தார். 13வது திருத்தம் தோல்வியுற்று விட்டது என்பதனை யாழ் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறையைச் சேர்ந்த ஒரு புலமையாளர் சுட்டிக்காட்டியிருக்கிறார். தமிழ் மக்கள் 13ஐக் கடந்து சமஸ்டி போன்ற தீர்வு முன்மொழிவுகளை மேசையில் வைத்து விட்டார்கள். என்று மேற்படி புலமையாளர் சுட்டிக்காட்டிய போது இனங்களுக்கிடையே நம்பிக்கையின்மைதான் பிரச்சினைகளுக்கு காரணம் என்றும் அந்த நம்பிக்கையை கட்டியெழுப்பினால் சரி என்றும் சஜித் கூறியிருக்கிறார். இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்றும் வலியுறுத்தியுள்ளார்.

உரையாடலின் போக்கில் அவர் 13ஆவது திருத்தத்தை பற்றித் தெரிவித்த கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால் நாட்டின் எல்லா பகுதிகளுக்கும் உரிய பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்ப்பதற்குரிய ஒரு வழியாக அதை அவர் முன்வைப்பதாகத் தெரிகிறது என்று அச்சந்திப்பில் பங்குபற்றிய ஒருவர் கூறினார்.

இதற்கும் சில கிழமைகளுக்கு முன்பு சம்பிக்க ரணவக்க வடபகுதிக்கு வந்திருந்தார். கிளிநொச்சியில் கைக்கடக்கமான ஆட்களோடு நடந்த ஒரு தேனீர் சந்திப்பில் அவர் கூறியிருக்கிறார் சமஸ்டி என்ற சொல் சிங்கள மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்த கூடியது என்று. ஆனால் ஒரு சமஸ்டி தீர்வை தான் ஏற்றுக் கொள்வதாகவும் கூறியிருக்கிறார். சமஸ்ரி என்று தலைப்பு வைக்காமல் ஒரு தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்கலாம் என்ற தொனிப்பட கருத்துக் கூறியுள்ளார்.

அவர் வருவதற்கு சில கிழமைகளுக்கு முன்பு உதய கமன்பில யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். "கடந்த காலத்தில் நடந்த இரத்தம் சிந்திய நிகழ்வுகளை மறக்க முடியாவிட்டாலும், அவற்றை மறந்து அவற்றிற்கு மன்னிப்புக் கொடுத்து தற்போது உள்ள பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்க முடியும் என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும்" என்று கூறினார்.

சஜித் பிரேமதாச, உதய கம்மன்பில, சம்பிக்க ரணவக்க, அனுரகுமார திஸாநாயக்க போன்றோர் ராஜபக்சேவுக்கு எதிராக முன்னிறுத்தப்படக்கூடிய எதிர்த்தரப்பு ஆளுமைகளாக பார்க்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களிடம் ராஜபக்சவுக்கு எதிராக மூவினத்து மக்கள் ஆணையைப் பெறத்தக்க வழிவரைபடங்கள் எவையும் கிடையாது என்பதைத்தான் இனப்பிரச்சினை தொடர்பான அவர்களுடைய தீர்வுகள் நமக்கு காட்டுகின்றன. சிங்கள பௌத்த பெருந் தேசியவாதத்தை பகைத்துக் கொண்டு தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை தர அவர்கள் தயாரில்லை. அதற்காக சிங்கள வாக்காளர்கள் மத்தியில் இறங்கி வேலை செய்யவும் அவர்கள் தயாரில்லை. எனவே அவர்களால் ராஜபக்சக்களுக்கு எதிராக நின்றுபிடிக்க முடியுமா என்பது சந்தேகம்தான்.

சில நாட்களுக்கு முன் ஜனாதிபதி தெரிவித்த ஒரு கருத்தை இங்கு கவனிக்க வேண்டும்... "நான் கொவிட்டினால் இழந்த இரண்டு வருடங்களை சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும் என பொதுமக்களிடமிருந்து எனக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது" என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்." கண்டியை சேர்ந்த இளைஞர் ஒருவர் இந்த யோசனையை முன்வைத்துள்ளார் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். "கண்டி தலதா மாளிகைக்கு வழிபாட்டிற்காக சென்றவேளை நான் மக்களுடன் உரையாடிக்கொண்டிருந்தேன். அவ்வேளை இளைஞர் ஒருவர் முன்வந்து சேர் நீங்கள் கொவிட்டினால் இரண்டு வருடங்களை இழந்துள்ளீர்கள் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் ஏன் அதனை பெற்றுக்கொள்ள முடியாது என கேள்வி எழுப்பினார்" என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதாவது நாடு இப்பொழுது எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கான பழியை வைரஸின் மீது போட்டுவிட்டு மீண்டும் ஒரு ஆட்சிக்காலத்தை பெறுவதற்கு கோத்தபய தயாராக இருக்கிறாரா என்று அவரை எதிர்ப்பவர்கள் சந்தேகிக்கிறார்கள். ஜெயவர்த்தன செய்ததைப் போல ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடத்தி அவர் தன்னுடைய ஆட்சிக் காலத்தை நீட்டித்துக் கொள்ளலாம் என்றும் தென்னிலங்கையில் ஊகிக்கப்படுகிறது.

நாடு இப்பொழுது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளை ஒரு குறிப்பிட்ட காலம் வரை சமாளித்து விட்டு அதன்பின் சீனாவிடமிருந்து உதவியை பெற்று பொருளாதாரத்தை நிமிர்த்தி விட்டால் மக்கள் தாங்கள் பட்ட







கஷ்டங்கள் அனைத்தையும் மறந்து விடுவார்கள் என்று ராஜபக்சக்கள் எதிர்பார்க்கிறார்கள். அந்த அடிப்படையில் அடுத்த தேர்தலை நோக்கி அவர்களிடம் ஏதோ ஒரு திட்டம் இருக்கக்கூடும் என்ற ஒரு விளக்கமும் ஒரு பகுதி விமர்சகர்களால் முன் வைக்கப்படுகிறது. இலங்கையின் பொருளாதாரம் மிகவும் சிறியது. சீனா போன்ற ஒரு பெரிய நாடு உதவுமாக இருந்தால் இலங்கைத் தீவு வெகு சுலபமாக இப்போது எதிர் கொள்ளும் நெருக்கடிகளிலிருந்து நிமிர்ந்து விடும். எனவே கோத்தாபய ராஜபக்ச தன்னுடைய அடுத்த பதவி காலத்திலும் கண் வைத்திருப்பதாக ஊகிக்கப்படுகிறது.

இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில் எதிர்க்கட்சிகள் மேலும் துடிப்பாகவும் ஒன்று திரண்டும் செயற்பட வேண்டி இருக்கிறது. ஆனால் அண்மை வாரங்களாக வடக்குக்கு வருகை தந்த தென்னிலங்கைத் தலைவர்கள் தெரிவிக்கும் தகவல்களை தொகுத்துப் பார்த்தால் மூன்று இனத்தவர்களையும் கவரத்தக்க ஜனவசியம் எதிர்க் கட்சித் தலைவர்கள் மத்தியில் பெரும்பாலானவர்களுக்கு இல்லை என்று தெரிகிறது. இனப்பிரச்சினைக்கு துணிச்சலான ஒரு தீர்வை முன்வைத்து அதற்காக சிங்கள மக்கள் மத்தியில் ரிஸ்க் எடுத்து உழைக்க தயாராற்ற எல்லா சிங்கள தலைவர்களும் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தை ஏதோ ஒரு விதத்தில் பாதுகாப்பவர்கள்தான். சிங்கள பௌத்த பெருந் தேசியவாதத்தை பாதுகாப்பது தான் அவர்களுடைய அரசியல் இலக்கு என்றால் அவர்களால் ராஜபக்சக்களை எதிர்கொள்வது கடினம்.

ஏனென்றால் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் 2009க்கு பின்னரான வளர்ச்சிதான் யுத்த வெற்றி வாதமாகும். 2018 ஈஸ்டர் குண்டு வெடிப்போடு அது தன்னை அடுத்த கட்டத்துக்கு முஸ்லீம்களுக்கு எதிரானதாகவும் அப்டேட் செய்துவிட்டது. எனவே யுத்த வெற்றி வாதத்தை எதிர் கொள்வதற்கு ஒப்பீட்டளவில் மூன்று இனத்தவரின் வாக்குகளையும் கவரத்தக்க ஒரு தலைவர் தேவை. தனிச் சிங்கள வாக்குகளால் அதை சாதிக்க அதை நன்கு விளங்கி வைத்திருக்கும் காரணத்தால் தான் சஜித்தும் உதய கமன்பிலவும் சம்பிக்க ரணவக்கவும் வடக்கை நோக்கி வருகிறார்கள். சரிக்கும் பிழைக்கும் அப்பால் ரணில் விக்கிரமசிங்க 2015இல் அப்படி ஒரு தலைவராக தோன்றினார். ஆனால் அவர் தானும் தோற்று தான் பெற்றெடுத்த குழந்தையான நிலைமாறுகால நீதியையும் தோற்கடித்து விட்டார்.

இப்பொழுது சஜித் பிரேமதாசவும் உதய கம்மன்பிலவும் சம்பிக்க ரணவக்கவும் தமிழ் வாக்காளர்களை குறிவைத்து வடக்கு கிழக்கிற்கு வந்து போகிறார்கள். அவர்கள் மறுபடியும் ஒரு தேர்தல் நாடகத்தை ஆடப் போகிறார்கள் என்று தெரிகிறது. சஜித்தின் வடக்கு விஜயத்தின் போது தமிழ் மக்களை கவர்வதற்கு அவர் கையாண்ட வழிமுறைகள் ஏற்கனவே கடந்த பொதுத் தேர்தலின்போது அங்கஜன் பயன்படுத்திய உத்திகள்தான். வடமராட்சியில் கூட்டத்தில் பங்கு பற்றுமாறு ஒலிபெருக்கியில் ஊர் ஊராக அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த அழைப்பின் போது பொங்கல் பொதி ஒன்று தரப்படும் என்று உறுதி கூறப்பட்டிருக்கிறது. அதேபோல சில கிராமங்களில் வீடுகள் தோறும் ஆண்களுக்கான சேர்ட்கள் வழங்கப்பட்டுள்ளன. பொங்கல் பொதியோடு வந்த சஜித் பிரேமதாச இனப்பிரச்சினைக்கான தீர்வு பொதியோடு வரவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். பொங்கல் பொதியைக் காட்டி தமிழ் மக்களை கவரலாம் என்று அவர் நம்புகிறாரா? இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவரிடம் விசுவாசமான திட்டங்கள் உண்டு என்பதனை அவர் இன்று வரையிலும் நிரூபித்திருக்கவில்லை.

அவரைப் போன்று யாரோ ஒருவரை முன்னிறுத்தி தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையக வாக்குகளை திரட்டுவதன் மூலம் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி விடலாம் என்று சில மேற்கு நாடுகளும் நம்பக்கூடும். ஆனால் தமிழ் மக்களுக்கு தேவையாக இருப்பது ஆட்சி மாற்றம் அல்ல. இலங்கைத்தீவின் நான்கு தேசிய இனங்களின் இருப்பையும் ஏற்றுக்கொண்டு ஒரு கூட்டாட்சிக் கட்டமைப்பை வாக்குறுதி அளிக்கத் தேவையான துணிச்சலை கொண்ட ஒரு சிங்களத் தலைவர்தான் ராஜபக்ஷக்களுக்கு எதிராக இப்பொழுது தேவை. மூன்று ஆண்டுகளில் தோல்வியுற்ற 2015இன் ஆட்சி மாற்றம் அதைத்தான் தமிழ் மக்களுக்கு கற்றுக் கொடுத்திருக்கிறது.

# தளபதி கேணல் கிட்டு அவர்களின் சிந்தனையிலிருந்து

இலங்கையில் எந்தெந்தப் பகுதிகள் மீது சிங்கள விமானங்கள் வீசும் குண்டுகள் விழுந்திருக் கின்றனவோ,அந்தப் பகுதிகளைக் கொண்டதே எமது தமிழீழம்.

எங்கள் தலைவிதியை நிர்ணயிப்பது, எங்கள் உரிமைகளை நிர்ணயிப்பது, எங்கள் நாட்டை நிர்ணயிப்பது, நாங்கள் மட்டும் தான்.

உலகில் நடைபெறும் புதிய அரசியல் மாற்றங்களையும் பார்க் கின்றோம். அதனால் நாமும் இறைமையுள்ள சுதந்திர அரசை அமைத்துக் கொண்டு, மற்ற அரசான சிறீலங்காவுடன் சமமான அந்தஸ்துடன் சேர்ந்து வாழ முடியும். அதை விடுத்து சிறீலங்காவின் அதிகாரத்துக்குள் எமது பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்றால் அது யாராலும் முடியாத விடயம். அதை நாம் ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை.

உலகில் எல்லார் கருத்தையும் கேள், சிந்தி, நன்றாகச்சிந்தி, நீயாகச் சிந்தி, யாரும் உனக்காக சிந்திக்க மாட்டார்கள்.

சேவை செய்வதுதான் உண்மையான இன்பம் உணமையான இன்பத்தை உணரக்கற்றுக்கொள்.

நாடிருந்தும்
நாடோடியாக
நாளெல்லாம்
நாடெல்லாம்
ஓடுகின்றேன்
ஓடுவதற்கு உடல்வலு தேவையில்லை
மனவலு இருந்தால் மட்டும் போதும்
ஓடுவதற்கு கால் எனக்குத் தேவையில்லை
போதிய உளஉரம் வேண்டும்
ஓடுவதால் மீண்டும் மீண்டும் உறுதி பெறுகின்றேன்
நாம் ஓடாமல் இருப்பதற்கு
ஓர் சுதந்திர நிலம் அமைக்க வேண்டுமென்று!

உமது படிப்பையும் வேலையும் ஒரு வேலைக்கூரிய கடமையாகச் செய்யாமல் அதற்கு முழு அர்த்தம் கொடுக்கக் கூடிய மாதிரியாக செய்க...

நான் உல்லாச விரும்பி அல்ல அது என் இயல்பு அல்ல உல்லாசத்தை விரும்பினால் உல்லாசமாக இருக்கலாம் அது என்னால் முடியாது.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கைக்கும் அர்த்தம் இருக்கிறது, ஆனால் எம்முடைய வாழ்க்கையின் அர்த்தத்தை நாம்தான் தேடிக்கொள்ள வேண்டும்.

அறிவும் வயதும் அனுபவமும் உயர்வும் கிடைக்கும் பொழுது நாம் பணியவேண்டும் பணிவு என்பது உலகையும் மக்களையும் புரிந்துகொண்டு அவர்களுக்காக உழைத்தல் என்பதையே குறிக்கும்.

சிந்தனையில் எளிமையாக வாழவும் மனித சேவையும் எப்பொழுதும் முக்கியமாக் கருத வேண்டும்.

மேற்குலக நாடுகளிலே பலமாற்றங்களும் அந்த மாற்றங் களை ஏற்றுக்கொள்ளும் வகையில் வழிப்புணர்வும் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த மாற்றங்கள் ஆசியாவில் இன்னும் ஏற்படவில்லை. ஆனால் அதற்காக நாம் மனஞ்சோர்ந்து விடலாகாது. தொடர்ந்து போராட வேண்டும்.

நாம் ஒரு தேசிய இனம். எமது தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமைஎமக்கு உண்டு.
இதை இப்படியும் கூறலாம். எமது அரசியல் அந்தஸ்தைத் தீர்மானிக்கும் உரிமையும் எமக்கு உண்டு.
நாம் இவற்றை மறுக்கும் சிறீலங்கா அரசின் கீழ் இருக்க வேண்டிய அவசியம் எமக்கில்லை. நாம் தமிழீழம் என்னும் தனிநாட்டுக்காகவே போராடுகின்றோம்.

வாழ்க. வாழ்க. நலமுடன் வாழ்க. அதைவிட மற்றவர் களுக்காக வாழ்க. அதைவிட மக்கள் சேவை செய்க. அதை விட நல்லதையே நினைக்க. மேலும் நல்லதே செய்க...வாழ்க, வாழ்கவென வாழ்த்துகிறேன்.

சிந்தனையும் தேடலுமே ஒருவனை உயர்த்த முடியும். ஆனால் எப்போதும் மனித சிந்தனை மற்றவர் களுக்காகவும் மனித இனத்தை முன்னேற்றுவதற் காகவுமே இருக்க வேண்டும். அதை விடுத்து தமது விற்பன்னத்தைக் காட்டவும், மற்றவர்களை விமர்சிக்கவும் மட்டும் இருக்க கூடாது.



**பொங்கிடும் கடலில் புலிமறவீரர் போய்வரக்கூட முடியாதா? – நாம் எந்தையர் கடலில் எழுந்திடக் கூட இந்திய நாடு தடைதானா? தடைதானா...தடைதானா...**

நாம் எமது மக்களுக்கு அமைதியையும் சுபிட்சத்தையும் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் போராடிக் கொண்டிருக்கிறோம்.

நாம் கேட்கின்ற அடிப்படை உரிமை, எமது மண்ணிலே எமது மக்கள் உயிர் வாழ்வதற்கான உரிமைதான்.
அதைவிடுத்து மாகாணசபையாலோ அல்லது அதைவிடக் கூடிய அதிகாரங்களைக் கொண்ட சபையாலோ எமது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது.
எமது மக்களின் பாதுகாப்பைப் பூரணமாக உறுதிப்படுத்தப்படும் வடிவத்தையோ நாம் தேடிக் கொண்டிருக்கிறோம்.

எமக்கு ஏ.கே 47 ஒன்றும் பெரிதல்ல.
நாம் எமது ஆயுதங்கள் என்று குறிப்பிடுவது எமது பாதுகாப்பு வடிவத்தையே.
தமிழ் மக்களுக்குப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வேண்டும். சிங்களப் படைகளை நாம் எமது பாதுகாப்புக்கு உத்தரவாதமாக ஏற்க முடியுமா? சிலர் நினைக்கலாம் நாம் ஆயுதங்களில் காதல் கொண்டவர்கள் ஆயுதப் போராட்டத்தைத் தவிர வேறு வழி தெரியாதவர்கள் என்று. ஆனால் நாம் அப்படியல்ல. அரசியலையும் உலகின் உடைமுறைகளையும் நன்கு புரிந்ததனால்தான் கூறுகின்றோம், நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கப் போராடித்தானாகவேண்டும்.




விளம்பரம் என்பது
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு

437.345.4203

**முக்கிய அறிவித்தல்**

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com



# சிறீலங்கா வங்குரோத்தின் விளிம்பில்

## - கார்டியன் 02.01.2022 -



சிறீலங்காவில் முன்னொரு போதும் இல்லாத அளவிற்கு பணவீக்கம் அதிகரிக்கின்ற நிலையில் - உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்ற நிலையில் சிறீலங்கா தீவிரமடையும் நிதி மற்றும் மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொள்கின்றது - இதனால் 2022 இல் நாடு வங்கு ரோத்து நிலையை அடையலாம் என்ற அச்சம் காணப் படுகின்றது.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தின் வீழ்ச்சி கொவிட்டினால் ஏற்பட்ட உடனடி தாக்கம் காரணமாகவும் சுற்றுலாத்துறை வீழ்ச்சி காரணமாகவும் ஏற்பட்டுள்ளது ஆனால் அதற்கான பிரதான காரணமாக அரசாங்கத்தின் அதிகளவு செலவீனங்களும் அரசவருமானத்தை பாதித்துள்ள வரிசலுகைகளும் சீனாவிற்கு பெருமளவிற்கு செலுத்தப்படும் கடன்களும், ஒரு தசாப்தத்தில் மிகவும் குறைவான அந்நிய செலவாணி கையிருப்பும் காணப்படுகின்றது.



உள்நாட்டு கடன்கள் மற்றும் வெளிநாட்டு பிணைமுறிகளிற்கு செலுத்துவதற்காக அரசாங்கம் பணத்தை அச்சடிப்பதால் பணவீக்கம் உருவாகியுள்ளது.

கொரோனா பெருந்தொற்று ஆரம்பத்தின் பின்னர் 500000 பேர் வறுமைக்கோட்டின் கீழ் தள்ளப்பட்டுள்ளனர் என உலக வங்கி மதிப்பிடுகின்றது இது வறுமைக்கு எதிரான ஐந்து வருட போராட்டத்திற்கு சமமானதாகும்.

நவம்பர் மாதம் 11 வீதமாக காணப்பட்டது அதிகரித்து வரும் விலைகள் காரணமாக முன்னர் சிறந்த பொருளாதார நிலையிலிருந்தவர்கள் கூட தங்கள் குடும்பங்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சிரமப்படுகின்றனர் - அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலையில் பலர் காணப்படுகின்றனர்.

சிறீலங்காவில் பொருளாதார அவசரநிலையை ராஜபக்ச அறிவித்த பின்னர் - அத்தியாவசிய உணவுப்பொருட்கள் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட விலைகளில் விற்கப்படுவதை உறுதி செய்யும் அதிகாரம் இராணுவத்திற்கு வழாங்கப் பட்டது. ஆனால் இது சிறிதளவும் மக்களின் துன்பங்களை தணிக்கவில்லை.

தலைநகர் கொழும்பில் ஒரு ஓட்டுநரகா தொழில்புரியும் அனுருத்த பரணகம இவ்வாறு தெரிவித்தார்.

அதிகரித்துவரும் உணவுப்பொருள் விலையை சமாளிப்பதற்காகவும் எனது காரிற்கான கடனை செலுத்துவதற்காகவும் நான் இன்னொரு வேலையும் செய்தேன் ஆனால் அதுவும் போதாது என அவர் தெரிவித்தார்.

கடனை திருப்பி செலுத்த முடியாத நிலையில உள்ளேன் அது கடினமாக உள்ளது, மின்கட்டணம் - குடிநீர் விநியோக கட்டணம் காய்கறிகளிற்கான பணம் என அனைத்தையும் செலுத்திய பின்னர் எதுவும் மிச்சமில்லை என அவர் தெரிவித்தார்.

தனது கிராமத்தை சேர்ந்த வியாபாரி எப்படி 1 கிலோ பால்மா பக்கெட்களை 100 கிராம் பக்கெட்களாக மாற்றி விற்கின்றார் என்பதை அவர் தெரிவித்தார்.

அவரது வாடிக்கையாளர்களால ஒருகிலோ பால்மா பக்கெற்றினை கொள்வனவு செய்யும் ஆற்றல் இல்லை என்பதால் அவர் அவ்வாறு செய்கின்றார் என அவர் குறிப்பிட்டார்.

ஒரு வாரத்திற்கு ஒரு கிலோ பீன்ஸ் வாங்கிய நாங்கள் தற்போது 100 கிராம் வாங்குகின்றோம் என அவர் தெரிவித்தார்.

வேலைவாய்ப்பு இழப்பும் சுற்றுலாத்துறையால் இழக்கப்பட்ட வருமானமும் (வழமையாக மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பத்து வீதம் பங்களிப்பு) குறிப்பிடத்தக்கவையாக காணப்படுகின்றன. சுற்றுலா போக்குவரத்து துறையில் 200000 பேர் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர்என உலக சுற்றுலா போக்குவரத்து பேரவை தெரிவிக்கின்றது.

நிலைமை மோசமடைந்ததால் கடவுச்சீட்டு அலுவலகத்தின் முன்னால் பெரும் வரிசைகள் காணப்படுகின்றன - நான்கில் ஒரு இலங்கையர் தான் நாட்டை விட்டு வெளியேற விரும்புவதாக தெரிவிக்கின்றார்.

முதிய பிரஜைகளை பொறுத்தவரை இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்பட்ட உற்பத்தி குறைந்த 1970களை நினைவுபடுத்துவதாக தற்போதைய நிலை காணப்படுகின்றது. அக்காலத்தில் அடிப்படை பொருட்களிற்கு பெரும் தட்டுப்பாடு காணப்பட் டதுடன் பால்மா அரிசி சீனி போன்றவற்றிற்கு மக்கள் பல இடங்களில் நீண்ட வரிசையில் நிற்க்கும் நிலை காணப்பட்டது.

சிறீலங்கா மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் டபில்யூ ஏ விஜயவர்த்தன சாதாரண மக்களின் நெருக்கடிகள் நிதிநெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும் என தெரிவிக்கின்றார் - அதனால் அவர்களின் வாழ்க்கை மேலும் நெருக்கடி மிகுந்ததாக மாறும் என அவர் தெரிவிக்கின்றார்.

பொருளாதார நெருக்கடி மீளமுடியாத அளவிற்கு செல்லும்போது நாடு நிதிநெருக்கடிக்குள் சிக்குவது தவிர்க்க முடியாதது என அவர் தெரிவிக்கின்றார்.

பொருளாதார நெருக்கடி நிதி நெருக்கடி காரணமாக உற்பத்தி குறைவடைந்து உணவுப் பாதுகாப்பு குறைவடையும், அந்நிய செலாவணி நெருக்கடியால் இறக்குமதி செய்ய முடியாத நிலையேற்படும் அந்த சூழலில் அது பாரிய மனிதாபிமான நெருக்கடியாக காணப்படும் என அவர் தெரிவிக்கின்றார்.

சிறீலங்கா எதிர்கொள்ளும் முக்கிய நெருக்கடியாக பாரிய கடனை திருப்பி செலுத்தவேண்டிய நிலை காணப்படுகின்றது - குறிப்பாக சீனாவிற்கு-சீனாவிற்கு ஐந்து பில்லியன் டொலர்களை கடனாக செலுத்த வேண்டிய நிலையில் சிறீலங்கா காணப்படுகின்றது கடந்த வருடம் தனது மோசான நிதி நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக சிறீலங்கா சீனாவிடமிருந்து மேலும் ஒரு பில்லியன் டொலர் கடனை பெற்றது.

அடுத்த 12 மாதங்களில் சிறீலங்காவின் அரசாங்க தனியார் துறையினர் 7. 3 பில்லியன் டொலர்களை வெளிநாட்டு உள்நாட்டு கடன்களாக செலுத்தவேண்டும்.

ஜனவரியில் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை பிணைமுறி கட்டணமாக செலுத்தவேண்டும்.

எனினும் நவம்பர் வரை சிறீலங்கா அரசாங்கத்தின் கையிருப்பில் 1.6 பில்லியன் டொலர்கள் மாத்திரம் காணப்பட்டன.

ஈரானிற்கான கடந்த கால கடன்களை தேயிலை மூலம் செலுத்த முயல்வதாக அமைச்சரவை பேச்சாளர் ரமேஸ் பத்திரன தனது வழமையான பாணியில் தெரிவிக்கின்றார், மிகவும் அவசியமாக தேவைப்படுகின்ற வெளிநாட்டு நாணய கையிருப்பை சேமிப்பதற்காக ஒவ்வொரு மாதமும் ஐந்து மில்லியன் டொலர்கள் பெறுமதியான தேயிலையை வழங்க இணங்கியுள்ளதாக அவர் தெரிவிக்கின்றார்.

ஜனவரி மாதத்தில் அந்நிய செலாவணி கையிருப்பு ஜனவரி மாதத்தில் 437 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்படும் என எதிர் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சா டிசில்வா சமீபத்தில் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பெப்ரவரி 2022 முதல் ஒக்டோபர் வரையிலான காலப்பகுதியில் 4.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தவேண்டியிருக்கும் என தெரிவித்த அவர் நாடு முழுமையாக வங்குரோத்து நிலைக்கு தள்ளப்படும் என குறிப்பிட்டார்.

சிறீலங்காவால் கடன்களை தடையின்றி செலுத்த முடியும் என மத்திய வங்கி ஆளுநர் அஜித் கப்ரால் உறுதியளித்துள்ளார்.

ஆனால் நாடு கடனை திருப்பிசெலுத்துவதில் குறிப்பிடத்தக்க ஆபத்துக்கள் உள்ளன இது பேரழிவுடன் கூடிய பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தும் என விஜயவர்த்தன குறிப்பிடுகின்றார்.

இதேவேளை அனைத்து கிருமிநாசினிகளையும் களைகொல்லிகளையும் தடைசெய்து முன் எச்சரிக்கையின்றி விவசாயிகளை இயற்கை உரங்களை பயன்படுத்த செய்யும் ராஜபக்சவின் மே மாத தீர்மானம் பல விவசாயிகளிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவர்கள் உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தி பழகியவர்கள், அளவுக்கதிகமாக பயன்படுத்தியவர்கள், தீடிரென இவர்கள் ஆரோக்கியமான பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கான களைகள் மற்றும் பூச்சிகளை எதிர்த்து போராடுவதற்கான திறனை இழந்தனர்.

பலர் அச்சம் காரணமாக பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதை தவிர்த்தனர்,இதன் காரணமாக இலங்கையில் உணவுப் பற்றாக்குறை மேலும் தீவிரமடைந்தது.

நெல், கோதுமை பயிரிடுவதற்கான செலவுகள் பெருமளவு அதிகரித்துள்ளன, உரமானியத்திற்கு அரசாங்கத்திடம் பணம் இல்லை, எங்களின் பல விவசாயிகள் பணத்தை முதலீடு செய்ய தயங்குகின்றார்கள், ஏனென்றால் எங்களால் இலாபம் ஈட்ட முடியுமா என்பது எனக்கு தெரியாது என ரஞ்சித் குலுகல தெரிவித்துள்ளார்.

பிரச்சினைகளிற்கு தற்காலிக தீர்வை காண்பதற்கான மக்கள் மத்தியில் பிரபலமற்ற கொள்கைகளை நீக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ள அரசாங்கம்.

இந்தியாவிலிருந்து உணவு எரிபொருள் மருந்து பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கடன்வசதிகளை வழங்குவது இந்தியாவுடன் நாணய பரிவர்த்தனை போன்ற தற்காலிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது, மேலும் சீனா பங்களாதேசிடமிருந்து கடன்களை பெறுவதுடன் ஓமானிலிருந்து பெட்ரோலியத்தை பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

எனினும் இந்த கடன்கள் குறுகிய காலதீர்வையே வழங்குகின்றன, மேலும் உயர் வட்டிவீதத்தில் குறுகிய காலத்திற்குள் இவற்றை திருப்பிவழங்கவேண்டும் - இது சிறீலங்காவின் கடனை மேலும் அதிகரிக்கின்றது.

சிறீலங்காவில் சுகமான வாழ்க்கை வாழ்ந்து தற்போது சிரமப்படுபவர்களில் ஒருவர் அனுஸ்க சானுக - இவர் ஒரு தனிப்பட்ட பயிற்சியாளர்- பெருந்தொற்றிற்கு முன்னர் நாங்கள் வாழ்ந்த வாழ்க்கையை எங்களால் வாழ முடியாது காய்களின் விலைகள் ஐம்பது வீதத்தினால் அதிகரித்துள்ளன என அவர் தெரிவிக்கின்றார்.

அரசாங்கம் உதவி வழங்குவதாக உறுதியளித்தது ஆனால் எதுவும் கிடைக்கவில்லை, நாங்கள் எங்களால் முடிந்தளவிற்கு சமாளிக்கின்றோம், எவ்வளவு காலத்திற்கு இதுபோல தொடர முடியும் என்பது தெரியவில்லை என அவர் தெரிவித்தார்.

நன்றி: தினக்குரல்



எரிக்கப்பட்டவர்கள் குண்டு வீசி கொல்லப்பட்டவர்கள் இரசாயனகுண்டு தாக்குதலில்

**முள்ளிவாய்க்கால்**

# GTA CHIROPRACTIC CENTRE

*We are specialized in*

- Motor Vehicle Accidents
- Slip & Fall
- WSIB
- Extended Health Care
- Sports Injuries
- Physiotherapy
- Chiropractic
- Orthotics Shoes
- Massage Therapy
- Acupuncture



**Health is Wealth**

Pathmaraj (Pat) Pathman

Tel: 416-321-0482 Cell: 416-528-5318

Fax: 416-321-0486

GTA Square Mall 5215 Finch Ave, E#206

Scarborough, ON, M1S 0C2

www.gtachiro.ca | Email: gtaphysio@gmail.com



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# R.S தங்கப் பட்டறை

நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லவிதமான திருத்த வேலைகளையும் லேசர்
மூலம் செய்து கொள்ளவும்

குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான
மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத்
தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்

திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்



பழைய நகைகளை மாற்றி
இன்றய காலத்துக்கேற்ப
புதிய வடிவங்களில்
செய்துகொள்ளவும்

தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171

S.மூர்த்தி

Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough



# சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர் பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203



# Nickon நிக்கொன்

Photo & Video — போட்டோ & வீடியோ

Digital Album — டிஜிட்டல் அல்பம்



உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...




தமிழ் மரபுத் திங்கள்
Tamil Heritage Month
தாயப் தேசத்தின் நினைவு சுமந்து நடப்போம்!
மண்மீட்பினை தம் இரத்தத்தோடும் கனவோடும் சுமந்து
சரித்திரமாகிய எம் வீரர் பணி தொடருவோம்!
இடரிலும் தளரிலும் சிக்கும் எம் வாழ்வை மீட்டு
நிலவு பொழியும் எம் முற்றத்தில் திளைப்போம்!
இந்தப் புத்தாண்டில், வரும் பொங்கல் திருநாளில்
புது வாழ்வுக்குள் காலடி எடுத்து வைக்க
வாழ்த்துகின்றோம்!
சங்கத்தமிழ்



## தொல்லியல் சுவடுகள்...

பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், யாழ். பல்கலைக்கழகம்

# அம்பாறை மாவட்டத்தின் வரலாற்றில் இருந்து மறைந்து போகும் ஒரு சைவத் தமிழ்க் கிராமம்







அண்மையில் மட்டக்களப்பின் சமூக ஆர் வலரும், வரலாற்றுப் பட்டதாரியுமான திரு. வை.சத்தியமாறன் இணையதளம் ஒன்றில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள புராதன சிவன் ஆலயம் ஒன்றின் புகைப்படங்களைப் பிரசுரித்து அவ்வாலயம் தமிழர்களால் பாது காக்கப்படவேண்டும் என்ற தனது ஆதங் கத்தை வெளிப்படுத்தியிருந்தார். அப்புகைப் படங்களில்இருந்து அது ஒரு புராதன ஆலய மாக இருக்கலாம் என்பதை கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் எஸ். சிவகணேசனிடம் எடுத்துக் கூறிய போது அவ்விடத்தில் ஆய்வு செய்வதற்கான சகல ஏற்பாடுகளையும் அவர் மேற்கொண்டிருந் தார். அவரின் முயற்சிக்கு பல்கலைக்கழக துணைவேந்தர், கலைப்பீடாதி ஆகியோர் வழங்கிய ஆதரவும், உதவிகளும் ஆய்வுக் குழுவினரைப் பெரிதும் உற்சாகப்படுத்தியது.

இந்த ஆய்வுக்குழுவில் வரலாற்றுத் துறை தலைவர் எஸ். சிவகணேசன், மற்றும் விரி வுரையாளர் செல்வி கிறிஸ்ரினா நிரோசினி, ஊடகவியலாளர் திரு.வை.சத்தியமாறன் ஆகியோருடன் கிழக்குப் பல்கலைக்கழக சமூ கவியல்துறைத் தலைவர் கலாநிதி தில்லை நாதன் அவர்களும் இணைந்து கொண்டமை ஆலயம் அமைந்துள்ள வட்டாரத்தின் சமூக நிலமைகளை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவியது. இவ்வாலயம் அம்பாறை மாவட் டத்தில் தீகவாபி, குடுவில் ஆகிய வட்டாரங் களை உள்ளடக்கிய ஆலங்குளம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இவ்வட்டாரத்தில் புழக்கத்தில் இருந்து வரும் பல இடப்பெயர்கள் பண்டுதொட்டு இங்கு தமிழர்கள் வாழ்ந்து வந்ததன் அடையாளங்களாகக் காணப் படுகின்றன. ஆயினும் தற்போது இங்கு ஒரு தமிழ்க் குடியிருப்பைத் தானும் காணமுடிய வில்லை. இந்நிலையில் ஆலயத்தைச் சுற்றாடலில் பரந்த அளவில் வாழ்ந்து வரும் ஏனைய இன மக்கள் தமிழர்கள் இங்கு வாழ வில்லை எனவும், அவர்கள் கரும்புத் தோட் டங்களில் வேலைசெய்வதற்காக இங்கு வந்த போது அவர்களின் வழிபாட்டிற்காகவே முன் பொரு காலத்தில் கட்டப்பட்ட ஆலயமே தற் போது அழிவடைந்த நிலையில் காணப் படுகிறது என அவர்கள் எம்மிடம் கூறிய புதுக்கதை எமக்கு அதிர்ச்சியான செய்தியாக இருந்தது. ஏனெனில் இற்றைக்கு ஐந்து சகாப் தங்களுக்கு முன்னரே குடுவில் என்ற இடத் தில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிக் கல்வெட் டுக்களை ஆய்வு செய்த பேராசிரியர் பரண விதான அக்கல்வெட்டுக்களில் ஒன்றை ஆதார மாகக் காட்டி இற்றைக்கு 2200 ஆண்டு களுக்கு முன்னரே இவ்விடத்தில் வாழ்ந்த “திஸ” என்ற தமிழ்ப் பெண்ணின் தலைமை யில் தமிழ் வணிகர்கள் ஒன்று சேர்ந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டதை உறுதிப்படுத்தி இருந்தார். பேராசிரியர் இந்திர பாலா இலங்கையில் 2300 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் மொழியால் ஒரு இனக் குழுவாக வாழத் தொடங்கியதற்கு இக்கல் வெட்டையும் முக்கிய ஆதாரமாகக் காட்டுகின் றார். அண்மையில் கிழக்கிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வில் எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 2000 ஆண்டு களுக்கு முற்பட்ட இச்சாசனங்கள் தமிழ் மொழி யில், தமிழ் வரிவடிவத்தில் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் நாகன், ணாகன், தம்பன், வண் ணக்கன் முதலான பெயர்கள் பொறித்த சாச னங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இச்சா சனங்கள் பற்றி பேராசிரியர் பத்மநாதன் அண் மையில் வெளியிடப்பட்ட நூல் ஒன்றில் விரி வாக ஆராய்ந்துள்ளார். இவ்வகையான மட்பாண்டச் சாசனங்கள் தமிழகத்தை அடுத்து கிழக்கிலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள் ளமை கிழக்கிலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றுக்கு புதுவெளிச்சமூட்டுவதாக உள் ளது. தொல்லியல் அறிஞர்கள் தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு பெருங்கற்காலப் பண் பாடு







என்ற புதிய நாகரிகத்தை அறிமுகப் படுத்தியவர்கள் நாக இன மக்கள் எனக் கூறு கின்றனர். இப்பண்பாட்டு மக்கள் கிழக்கிலங் கையில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய மட்பாண் டங்களில் நாகன், ணாகன் முதலான பெயர் கள் இடம்பெற்றிருப்பது கிழக்கிலங்கையில் வாழ்ந்த பூர்வீக தமிழர்கள் நாக இனக் குழு வைச் சேர்ந்தவர்கள் என்பதை மேலும் உறுதி செய்வதாக உள்ளது. இவ்வரலாற்றுப் பின் னணியிலேயே அம்பாறை ஆலங்குள ஆலயத்தின் தோற்றத் திற்கான காரணங் களை நோக்குவது



பொருத்தமாகும்.

நீண்ட காலத்திற்கு முன்னரே ஆலங் கேணி யில் வாழ்ந்த தமிழர்கள் இவ்வாலயத்தைக் கைவிட்டதன் காரணமாக தற்போது இவ் வாலயம் பெருமளவுக்கு அழிவடைந்து ஆல மரங்களுக்கு மத்தியில் வழிபடப்பட முடியாத ஆபத்தைத் தரும் வெறும் கட்டிடமாகக் காணப் படுகின்றது. ஆலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும் வளர்ந்துள்ள பெரிய ஆலமரங் களின் கிளைகளும், வேர்களும் ஆலயச் சுவர் கள் சிலவற்றிற்கு பாதுகாப்பு அரண்களாக உள்ளன. இவ்வாலயம் சிறிய விமானத் துடன் கூடிய கர்ப்பக்கிரகம், அந்தராளம், முன் மண்டபம், பலிபீடம், கொடிக்கம்பம் என்பவற் றைக் கொண்டு கட்டப்பட்டதை ஆய்வுக் குழு வினரால் அடையாளப்படுத்த முடிந்தது. நீண் டகால வரலாற்றைக் கொண்டிருக்கும் இவ் வாலயம் பிற்காலத்தில் சீமேந்து கொண்டு மீள் உருவாக்கம் செய்யப்பட்டதை ஆலயத்தின் கட்டிடவடிவங்களும் விமானத்தின் கலை வடி வங்களும் உறுதி செய்கின்றன. ஆயினும் இவ்வாலயம் மிகத் தொன்மையான தென் பதை ஆலயத்திற்கு உள்ளேயும், வெளி யேயும் புதையுண்டு காணப்படும் பெருமளவு செங்கற்கள் உறுதிசெய்கின்றன. அதிலும் கற் பக்கிரகம், அந்தராளம் என்பவற்றின் உட் பாகங்கள் முழுக்க செங்கற்களால் கட்டப் பட்டவையாகக் காணப்படுகின்றன. செங்கற் கள் கொண்டு கட்டப்பட்ட அந்தராளத்தின் முன்பக்கச் சுவர் சீமேந்து கொண்டு பூசப்பட்ட நிலையில் செங்கற் சுவர் தெளிவாகக் காணப் படுகிறது. இந்த வேறுபாடுகளைக் கொண்டு செங்கற்களால் கட்டப்பட்ட கர்பக்கிரகம், அந் தராளம் ஆலயத்தின் தொடக்ககால நிலையில் அதன் வெளிப்புறம் மட்டும் பிற்காலத்தில் சீமேந்து கொண்டு மீள் உருவாகம் செய்யப் பட்டதாகவும், முன் மண்டபம், பலிபீடம் முத லான கட்டிடங்கள் ஆலயம் தோன்றிய கால அத்திவாரங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டதாக அல்லது ஆலயத்தை விரிவு படுத்த பிற்காலத்தில் சீமேந்து கொண்டு கட்டப் பட்ட ஆலய பாகங்களாக இருக்கலாம் எனக் கூறமுடியும்.



இவ்வாலயத்தின் தோற்றகாலத்தை உறுதி யாகக் கூறக்கூடிய கல்வெட்டுக்களோ, விக்கிர கங்களோ இதுவரை



கிடைக்கவில்லை. ஆல யத்தின் கர்பக்கிரகம், அந்தராளம் என்பவற் றிற்கு உள் நுளைய முடியாதவாறு பெரிய ஆல மர வேர்கள் காணப்படுகின்றன. அதற்குள் கொடிய விசப்பாம்புகள் குடியிருப்பதற்குரிய தடயங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. இதனால் அச்சமின்றி அக்கட்டிடப் பகுதி களுக்குச் சென்று ஆய்வினை மேற்கொள்ள முடியவில்லை. இருப்பினும் வெளியில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டு கர்பக்கிரகத்தில் தெய்வ விக்கிரகங் களை வைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பீடம் முழுமையாக சிதைவடைந்துள்ளமை தெரி கின்றது. அவ்விடம் ஆழமாகத் தோண்டப் பட்டு பீடம் இருந்த இடம் பெரும் குழியாகக் காணப்படுகின்றது. பீடத்தின் பின்பக்கச் சுவ ரில் இருக்கும் திருவாசி புகைபடர்ந்த நிலை யில் அதன் கலைவடிவங்கள் தெளிவற்றுக் காணப்படுகின்றன. இருப்பினும் எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டு இவ்வாலயம் மிகப் பழமையானது என்பதை உறுதிப்படுத்த முடிகிறது. அவற்றுள் கர்பக்கிரகத்தின் மேற் பக்கச் சுவரில் குறுக்காகவைக்கப்பட்ட நான்கு கற்பலகைகள் மீது மேல் நோக்கி வட்டமாக இரு தளங்களில் கட்டப்பட்ட விமானத்தின் அமைப்பு, விமானம் அமைப்பதற்குப் பயன் படுத்தப்பட்ட செங்கற்களின் அமைப்பும், அவற் றின் நீள அகலங்கள், கர்பக்கிரம், அந்தராளம் என்பவற்றின் வடிவமைப்பு, அவற்றின் நீள, அகலங்கள், வாசற்பகுதிகளில் அமைக்கப்பட்ட அகலமான கற்தூண்கள் என்பன 11 ஆம் நூற் றாண்டைச் சேர்ந்த பொலநறுவை, திருமங் களாய் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட சோழர் கால ஆலயங்களை நினைவுபடுத்து வதாக உள்ளன. எதிர்காலத்தில் தொல்லியல் திணைக்கள அனுமதியுடன் இவ்வாலயப் பகுதியில் விரிவான தொல்லியல் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டால் இவ்வாலயத்தின் தோற்றகாலம், அதன் கலைமரபுகள், வழி படப்பட்ட தெய்வங்கள், காலரீதியான ஆலய வளர்ச்சி, மாற்றம், ஆலயத்திற்கு சொந்தமாக இருந்த அசையும், அசையாத சொத்துக்கள், ஆலயத்தைப் பராமரித்த மக்கள், வழிபாட்டு மரபுகள் தொடர்பான பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும் என்பதில் ஐயமில்லை.

அம்பாறை மாவட்டத்தின் வரலாற்றில் இருந்து மறைந்து போகும் ஒரு சைவத் தமிழ்க் கிராமம்.


உலக வணிகம்
ULAGA VANIKAM
2022
BUSINESS DIRECTORY
இதோ அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்
உலக வணிகத்தின்
இரண்டாம் பதிப்பு வெகு விரைவில்
உங்கள் கைகளில்



# தமிழீழ மக்கள் தமக்கான அரசியல் அரங்கைத் தாமே அமைக்க வேண்டும்!

## புத்தாண்டுச் செய்தி - நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

ஜனவரி 01.2022

தமிழ் மக்கள் தமக்கான அரசியல் அரங்கைத் தாமே வடிவமைத்து, இந்த அரங்கை நோக்கி அனைத்துலக சமூகத்தை இழுக்க வேண்டும் என தனது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன், தாயக அரசியற் தலைவர்கள் பலரது செயல் குறித்து தனது எச்சரித்துள்ளார்.

தற்போது நடப்பதைப் பார்த்தால் தாயக அரசியற் தலைவர்கள் பலர் தெரிந்தோ தெரியாமலோ ஏனைய சக்திகள் போடும் அரசியல் அரங்கத்தில் ஏறி நின்று ஆடுவது போல் தெரிகின்றது என தெரிவித்துள்ள பிரதமர் வி.உருத்திரகுமாரன், இது தமிழீழ மக்களுக்குப் பயன் தரும் செயலாக அமையாது என எச்சரித்துளளதோடு, ஏனையோருக்குச் சேவை செய்யும் செயலாக மட்டும் அமைந்து விடும் ஆபத்தைக் கொண்டது என்பதனையும் எமது தலைவர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும் இடித்துரைத்துள்ளார்.

பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்களது புத்தாண்டு செய்தியின் முழுமையான வடிவம் :

மலர்ந்துள்ள புதிய ஆண்டு தமிழீழத் தேச மக்களுக்கும், தமிழக மற்றும் உலகத்தமிழ் மக்களுக்கும் நல்லாண்டாக அமைய வேண்டும் என வாழ்த்துவதோடு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் எனது அன்பினையும் வெளிப்படுத்திக் கொள்வதில் நான் பேருவகையடைகிறேன்.

உலகளாவிய ரீதியில் மனித குலத்தை அச்சுறுத்தி வரும் கொரோனாப் பெருந்தொற்றினை எமது மக்கள் தடுப்பூசியினைப் பெறுவதன் மூலமும், சுகாதார முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் மிக அவதானமாக எதிர்கொள்ள வேண்டும் என்ற வேண்டுதலையும் இத் தருணத்தில் உங்களிடையே முன்வைக்க விரும்புகின்றேன்.

இப் பெருந்தொற்றை வெற்றி கொள்வதற்கு மனிதகுலம் தனது சக்தியையெல்லாம் திரட்டிப் போராடிக்கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் இப் புதிய ஆண்டு மலர்கிறது. 2021 ஆம் ஆண்டின்போது கொரோனா வைரஸ் கிருமிக்கெதிரான தடுப்பூசி பரவலாக உபயோகத்துக்கு கொண்டு வரப்பட்டதனால் அதுவே பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்து வருகின்றது. இது எமக்கெல்லாம் பெரு நம்பிக்கை தருவதாக இருக்கிறது.

இருப்பினும், உலக நாடுகள் அனைத்திலும் தடுப்பூசி கைக்கெட்டியது சமத்துவமான முறையில் அமையவில்லை என்பதும் பொருளாதார வளம் குறைந்த நாடுகள் பலவற்றிடையே தடுப்பூசி குறைந்த வீதமான மக்களுக்கே வழங்கப்பட்டுள்ளது என்பதும் கசப்பான உண்மைகள். உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்கின்ற மக்களிடையே தடுப்பூசி பயன்பாட்டில் நம்பிக்கையற்ற ஒரு பகுதியினர் தடுப்பூசியைப் பெறுவதில் தயக்கம் காட்டி வருகின்றமையும் பெருந்தொற்றை எதிர்கொள்வதற்கு சவாலாக அமைந்திருக்கிறது. உலக நாடுகள் அனைத்திலும் கொரோனாப் பெருந்தொற்றை எதிர்கொள்ளும் நடவடிக்கைகள் சீரான முறையில், சமத்துவமாக அமையும்போதுதான் இத் தொற்றைக் கட்டுப்படுத்துவது சாத்தியப்படும் என்ற புரிந்துணர்வோடு உலகத் தலைவர்கள் 2022 ஆம் ஆண்டில் நடந்து கொள்ள வேண்டும் என்ற செய்தியினையும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் இத் தருணத்தில் வெளிப்படுத்த விரும்புகிறேன்.

கடந்து சென்ற ஆண்டின் போது தமிழீழ தேசியப்பிரச்சனை மேலும் கூர்மையடையாவிடினும் அது அனைத்துலகப்பரிமாணம் கொண்டதோர் பிரச்சனையாக நீடித்து வருகிறது. இதற்குப் புலம் பெயர் தமிழ் மக்களின் பல்வேறு அரசியற் செயற்பாடுகளும் பங்களிப்புச் செய்திருக்கின்றன. தாயகத்திலும் தமிழ் மக்கள் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தமது சுதந்திர உணர்வை வெளிப்படுத்தி வருகிறார்கள். 2021 இல் நிகழ்த்தப்பட்ட பொத்துவில் முதல் பொலிகண்டி வரை எனும் போராடடம் எமது மக்கள் தமது சுதந்திர உணர்வினை வெளிப்படுத்தியதற்கு நல்லதோர் உதாரணமாக அமைந்திருந்தது.

2021 ஆம் ஆண்டில் தாயகத் தமிழ்த் தலைவர்கள் 13 ஆம் திருத்தச்சட்டத்தைச் சுற்றித் தமது அரசியலைச் செய்து கொண்டிருந்தமையினை அவதானிக்க முடிந்தது. தமிழீழத் தேசியப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வாக 13 ஆம் திருத்தச் சட்டம் அமையாது எனவும், எனினும் நடைமுறையில் இருக்கும் 13 ஆம் திருத்தத்தின் கீழ் அமைந்த மாகாணசபைகளை இல்லாதொழிக்கும் முயற்சியை சிறீலங்கா அரசு எடுக்குமானால் அதனை எதிர்க்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை பல தாயகத் தமிழ் அரசியல் தலைவர்கள் கொண்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. ஆனால், இவ் அரசியல் கதையாடல் நடைபெறும் முறையானது குறிப்பிட்ட 13 ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் அமைந்த மாகாண சபைகள் தமிழர் தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வாக முடிச்சுப்போடும் முயற்சிக்குத் துணைபோவதாக அமைந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுவதனைத் தவிர்க்க முடியவில்லை.

இதனால், 2022 ஆம் ஆண்டின்போது இவ் விடயத்தை அணுகுவதற்குத் துணை செய்யும் வகையில் தமிழர் தேசத்தின் சார்பில் சில கருத்துக்களை இவ் வருட புதுவருடச் செய்தியில் பதிவு செய்ய விரும்புகிறேன். ஏற்கெனவே உள்ளூராட்சி மட்டத்தில் மாநகரசபைகள் இருப்பதுபோல், நக ராட்சி மன்றங்கள் இருப்பதுபோல், கிராமசபைகள் இருப்பது போல் நாடு தழுவியரீதியில் அமைந்த அதிகாரப்பரவலாக் கலின் ஓரம்சமாக மாகாணசபைகள் இருப்பது வேறு. ஆனால் தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வாக மாகாணசபைகள் அமையும் என நம்புவதோ அல்லது பேசுவதோ வேறு. மேலும் 13ம் திருத்தச் சட்டம் வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் ஒரே அலகாக இருக்க வேண்டுமென உறுதி




செய்யவில்லை.

தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வாக அமைவதில் மாகாணசபைகள் ஏற்கனவே தோல்வி கண்டு விட்டன. மாகாணசபைகளைச் செத்த பிணம் என்று தாயகத் தமிழ்த் தலைவர் ஒருவர் வர்ணித்ததுமுண்டு. மாகாணசபைகளை தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வுடன் எவரும் முடிச்சுப் போடுவதைத் தாயகத் தமிழ்த் தலைவர்கள் நிராகரிக்க வேண்டும். இந்திய அரசுடன் உரையாடும் போது மாகாணசபைகளை தோல்வியடைய வைத்ததில் சிங்கள இனவாதத்தினதும், பேரினவாதமயப்படுத்தப்பட்ட சிறீலங்கா அரசினதும் பங்கைச் சுட்டிக்காட்டி வாதிட்டு அடுத்த கட்ட ஏற்பாடு குறித்துப் பேச வேண்டும்.

இந்தியச் சூழலும் இலங்கைச் சூழலும் மாறுபட்டவை. இந்தியாவில் பல்வேறு மொழி பேசும் மாநிலங்கள் உள்ள சூழலில் ஒன்றிய அரசுக்கும் மாநிலங்களுக்கும் ஒரு வகையான அதிகார இழுபறிச்சமநிலையும் சமரசநிலைக்கான வாய்ப்பும் உள்ளது. இலங்கையின் இரு மொழிச் சூழலில் தமிழ் மொழியும், அம் மொழியைப் பேசும் மக்களும் சிங்கள அரசால் இனவழிப்புக்குள்ளாக்கப்படும் சூழல் நிலவுகிறது. இச் சூழலில் தமிழர் தாயகத்தில் வாழும் தமிழ் மக்கள் அரசிடம் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர். இதற்கு உதவக்கூடிய வகையில், தமிழ் மக்கள் வசம் தனித்துவமாக அதிகாரங்கள் உள்ள அரசியல் ஏற்பாடு ஒன்றே தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வாக அமைய முடியும். மாகாணசபைகள் போன்று நாடு தழுவிய பொது ஏற்பாடுகள் தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வாக ஒரு போதும் அமைய முடியாது. 13 ஆம் திருத்தச்சட்டத்தின் கீழ் அமைந்த மாகாணசபைகளின் தோல்விக்கு இதுவொரு முக்கிய காரணமாகும்.

சிறீலங்கா அரச கட்டமைப்புக்குள் தமிழ் மக்களுக்குத் தேவையான தனித்துவமான அதிகாரங்கள் கொண்ட ஒரு தீர்வு முறையை எட்ட முடியாது. இதனால்தான் தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வினைச் சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசாக தமிழ் மக்கள் அடையாளம் கண்டார்கள். மாவீரர்களின் ஈகத்தினாலும் குருதியினாலுமே தமிழ் மக்களின் இலட்சிய தாகம் வலுப்பெற்றது.

இத் தீர்வு சாத்தியமில்லையெனக் கூறுபவர்களோ அல்லது தாயகச்சூழலில் தமிழீழம் பற்றிப் பேசமுடியாத நிலையினால் வேறு தீர்வுகள் பற்றிப் பேசுபவர்களோ தமிழ் மக்கள் மீதான சிங்களத்தின் இனவழிப்பைத் தடுக்கக் கூடிய தீர்வுமுறைகளை தமக்குள்ள வரையறைகளுக்குள் பேச முடியும். பேச வேண்டும்.

இவ்வாறு பேசும்போது, தமிழ் மக்கள் தமக்கான அரசியல் அரங்கைத் தாமே வடிவமைக்க முடியும். நாம் இவ் அரங்கை நோக்கி அனைத்துலக சமூகத்தை இழுக்க வேண்டும். ஆனால் இப்போது நடப்பதைப் பார்த்தால் நமது தாயக அரசியற் தலைவர்கள் பலர் தெரிந்தோ தெரியாமலோ ஏனைய சக்திகள் போடும் அரசியல் அரங்கத்தில் ஏறி நின்று ஆடுவது போல் தெரிகிறது. இது தமிழீழ மக்களுக்குப் பயன் தரும் செயலாக அமையாது. ஏனையோருக்குச் சேவை செய்யும் செயலாக மட்டும் அமைந்து விடும் ஆபத்தைக் கொண்டது எனபதனையும் எமது தலைவர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும்.

2022 ஆம் ஆண்டில் நாம் தமிழீழ தேசநிர்மாணத்தை மேலும் வலுப்படுத்தி வளம்படுத்த வேண்டும். தமிழர் தேசத்தை வலுப்படுத்தி வளம்படுத்தல் என்ற சிந்தனையுடன் நமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். தாயக ஒருமைப்பாட்டை வலுப்படுத்தி, சிங்களத்தின் தாயகக்கபளீகரத்தைத் தடுத்து நிறுத்தி, தமிழ் மொழியின் சிறப்பை நிலைநிறுத்தி, தாயக மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வைப் பலப்படுத்தி, சமூகநீதியைக் கொண்டாடும் மக்களாக, மாவீரர்களை வழிகாட்டிகளாகக் கொண்டு நாம் நமது தேசத்தை நிர்மாணம் செய்ய வேண்டும். சாதி, சமூக, பிரதேச, பாலின, பொருளாதார வேறுபாடுகளால் கூறு போடப்பட்ட மக்களாக இல்லாது தமிழீழ தேச மக்கள் நாம் எனத் தலை நிமிர்ந்து நிற்கும் வகையில் நமது தேச நிர்மாணம் அமைய வேண்டும்.

இதற்குத் தமிழ்த் தேசியம் தன்னைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். குறுந்தேசியவாதமாக அல்லாது அனைத்து மக்களையும் சமத்துவமாக மதிக்கும் பண்பு கொண்டதாக அமைய வேண்டும். புதிய உலகச்சூழலுக்கமையத் தன்னை வடிவமைத்துக் கொள்ள வேண்டும். தன்னை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்குத் தாயகத்திலும் புலம் பெயர்ந்தும் வாழும் தமிழீழ மக்கள், தமிழக மக்கள், உலகத் தமிழ் மக்கள் இணைந்து அடம்பன் கொடி திரள்வதுபோல அணி திரள வேண்டும். பெண்களதும் இளையோர்களதும் பங்கு சமூகத்தில் அதிகரிக்கப்பட வேண்டும். மலர்ந்துள்ள புதிய ஆண்டில் இத்தடத்தில் தமிழ்த் தேசியம் வலுப்பெறும் வகையில் நமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்வோம்.

தமிழ் மக்கள் பெருமை மிகுந்த மரபுக்குச் சொந்தக்காரர். பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனப் பரந்த உலகப்பார்வை கொண்டு வாழ்ந்தவர்கள். தமிழ் மக்களின் இச் சிறப்பை நிலைநிறுத்தியவாறு எமது உரிமைகளை வென்றெடுத்து தமிழீழத் தனியரசை அமைப்பதற்கு அயராது உழைப்போம் என புத்தாண்டு மலர்ந்துள்ள இத் தருணத்தில் உறுதி எடுத்துக் கொள்வோமாக என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்களது புத்தாண்டுச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிட்டு நினைவு சிறுவர் பூங்கா







தமிழீழ தேசத்தின் பண்டைய இராசதானியாகிய நல்லூர் நகரிலே இன்று அனைவரது கவனத்தையும் ஈர்ந்து நிற்கும் ஓர் மையமாக விளங்குவது கிட்டு நினைவு சிறுவர் பூங்கா என்றால் அது மிகையாகாது. இக்கிட்டு நினைவு சிறுவர் பூங்கா, அதன் அமைவிடம் குறித்தும் அது வடிவமைக்கப்பட்டுள்ள சிறப்பு குறித்தும் அவ் வடிவமைப்புகள் விளம்பி நிற்கும் நமது கட்டடக்கலை மற்றும் குடிசார், இயந்திர தொழில் நுட்ப ஆற்றல் குறித்தும் நிறைந்த செய்திகளை உலகுக்கு பறைசாற்றும் பௌதீக சான்றாக விளங்குகிறது.

இப்பூங்காவின் அமைவிடமானது வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் முத்திரைச் சந்தியிலே, பண்டைய யாழ்ப்பாண இராசசியத்தின் எச்சங்களான சங்கிலியன் தோப்பு, யமுனா ஏரி, சங்கிலியன் சிலை, மந்திரி மனை போன்றவை சூழவுள்ள பகுதியிலே தெரிவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளமையானது சமகால சந்ததியினருக்கும், வருங்கால சந்ததியினருக்கும் “நாம் ஆண்ட பரம்பரை“ என்ற பெருமிதத்தை மீண்டும் நம்பிக்கையோடு வலியுறுத்திக் காட்டுவதாயுள்ளது. இப்பகுதியானது ஏற்கனவே நிழல்தரும் உயர்ந்த மரங்களால் சூழப்பட்டுள்ளதால் இயற்கையாகவும் பூங்காவிற்கான ஒரு இரம்மியமான உணர்வை ஏற்படுத்துவதாயுள்ளது.

தவிரவும், தீர்மானிக்கப்பட்டுள்ள யாழ் நகர பெருந்திட்டத்தின்படி இப்பகுதியானது பண்பாட்ட வலயமாக வரையறுக்கப்பட்டுள்ளமையும் இங்கு கவனிக்கத்தக்கது. அவ்வகையில் திட்டமிடப்பட்ட எதிர்கால யாழ் நகர நிர்மாணத்தின் ஆரம்ப பௌதீக









உருவமாக இப் பூங்காவானது அதன் காலத்தின் தேவைகுறித்தும் கருத்துத் தேவை குறித்தும் பொருத்தமான முறையில் உருப்பெற்றுள்ளமை சிறப்பானதாகும். இதன்மூலம் இப்பூங்கா அமைந்துள்ள நிலப்பகுதிகூட, அதன் உச்ச பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ள தன்மையும் இங்கு நோக்கற்பாலது.

சமூக ரீதியாக இப் பூங்காவின் நிர்மாணம் குறித்து நோக்கும் போது அது இக் காலத்தின் கட்டாயமாகக் கருதப்படுகிறது. குறிப்பாக இன்றைய போர்க்கால சூழலில் வளரும் சிறார்களின் ஆரோக்கியமான மன வளர்ச்சியை உறுதிப்படுத்தி அவர்

களைத் தன்னம்பிக்கையும் உற்சாகமும் கருத்துத் தெளிவும் உள்ள வருங்கால பிரசைகளாக உருவாக்குவதில், இது போன்ற மாறுபட்ட மன உணர்வைத் தூண்டக்கூடிய பொழுது போக்கு ஊடகங்கள், மார்க்கங்கள் அவசியமாகின்றன. இவ் வகையில் கலைபண்பாட்டு நிகழ்வுகள், விளையாட்டு நிகழ்வுகள் என்பவற்றுடன் இத்தகைய உளவியல் ரீதியான மேம்பாட்டைக் கொடுக்கக்கூடிய பூங்காக்கள் அமைவதும் மிகவும் அவசியமாகிறது.

இத் தேவையைப் பரிபூரணமாகப் பூர்த்தி செய்யும் வகையில் இப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு உருவங்களும், உபகரணங்களும் மிகவும் அவதானமாகவும், நுணக்கமாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ் விளையாட்டு மாதிரிகள் யாவும் குழந்தைகள் மனதில் முதலில் பிரமிப்பையும் பின்னர் அதனை அணுகி அனுபவிக்கும் தூண்டுதலையும் பின்பு அவற்றை அனுபவித்து மகிழ்ந்த வெற்றிக்களிப்பையும் ஏற்படுத்துவதானது உளவியல் ரீதியாக குழந்தைகள் மனதில் பாரிய வளர்ச்சியையும் தன்னம்பிக்கையையும் புத்துணர்ச்சியையும் உண்டாக்குவதாயுள்ளது.

கூட மிகக் குறுகிய காலத்தில் பூரணமாக செயலுருவம் பெறுகின்றதென்றால் அது நமது தேசத்தின் அரசியல் ரீதியான அணுகுமுறையில் ஓர் முக்கிய பரிணாம வளர்ச்சியை கூட்டி நிற்கிறதெனலாம். இதன் மூலம் இராணுவ ரீதியாக மட்டுமன்றி அரசியல் சமூக ரீதியாகவும் தமிழீழ அரச நிர்வாகத்தின் தெளிந்த நோக்கும் பரந்து பட்ட அணுகுமுறையும் தமிழீழ தேசத்துக்கு மட்டுமன்றி முழு உலகுக்குமே ஆணித்தரமாக எடுத்தியம்பப்படுகிறது. இந்த நோக்கிலே இப் பூங்காவானது **"கிட்டு நினைவு சிறுவர் பூங்கா"** எனப் பெயரிடப்பட்டுள்ளமை அதன் பொருத்தப்பாட்டையும் நோக்கத்தையும் தெளிவாகவே கூட்டி நிற்கிறது.

வரலாற்று சமூக, அரசியல் ரீதியான முக்கியத்துவங்கள் மட்டுமன்றி இப் பூங்கா நிர்மாணமானது யாழ். நகர உட்கட்டுமான அபிவிருத்தி குறித்தும் திடமான அத்திவாரக் கற்களைப் பதிந்துள்ளது. உதாரணமாக இப் பூங்கா அமைவுடன் தொடர்பாக வளைவுகள் திருத்தி நேர்த்தியாக்கப் பட்ட நல்லூர் செம்மணி வீதியானது நகர வீதியமைப்பு வளர்ச்சி குறித்து வரவேற்கத்தக்க ஒரு அம்சமாகிறது.

தவிர இதன் தொடர்பாக புனரமைக்கப்பட்ட இப்பகுதி வடிகால் அமைப்பும் இத்தகைய திட்டமிட்டு தீர்மானிக்கப்படும் பூங்காக்களின் விரிவாக்கமானது ஒர பிரதேசத்தின் உட்கட்டுமான வளர்ச்சிக்கு அளிக்கக்கூடிய மறைமுகப் பங்களிப்பை விளக்குவதாயுள்ளது. இது ஒரு நகராக்கத்தின் முழுமையான அபிவிருத்திக்கு ஓர் பக்கபலமாகும்.

இத்தகைய முக்கியத்துவங்களைக் கொண்ட இப் பூங்காவானது அதன் வடிவமைப்பு, நிர்மாணம் குறித்தும் தன்னகத்தே கொண்டுள்ள அம்சங்களை அணுகி ஆராயும்போது அதன் சிறப்பு விஸ்வரூபமாக விரியும் தன்மை வியந்து அனுபவிக்கக்கூடியது. 12,650 சதுர மீற்றர் பரப்பளவுடைய நீள் சதுர வடிவிலான இப் பூங்காவின் பிரதான வாசல் கச்சேரி நல்லூர் வீதியில் அமைக்கப்பட்டுள்ள நோக்கமானது நிர்வாக வலயத்திலுள்ள கச்சேரியிலிருந்து பண்பாட்டு வலயத்திலுள்ள பூங்காவுக்கு சம்பிரதாய ரீதியாக அணுகும் முறையை சாத்தியப் படுத்தவே என்பது இங்கு சிறப்பாகக் கவனிக்கத்தக்கது. இப்



பிரதான வாசலுக்கு நேர் உட்புறமாக அமைக்கப்பட்டுள்ள தளபதி கிட்டுவின் சிலை, பூங்காவின் பிரதேசத்தினை மையப் படுத்தி அதன் உள் அமைப்புகளை இடமும் வலமுமாக சீரான முறையில் பங்கிட்டவகையில் அமைந்துள்ளது சிலையின் முக்கியத்துவம் மேலும் வலுவூட்டப்படும் வண்ணம் சிலையைச் சூழவும் அகழி போன்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு அவ் அகழியின் நடுவே தனித்துவமாக உயர்ந்த நிலையில் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இதனுடன் அலை வடிவான அதன் விளிம்பு அமைப்பும் சேர்ந்து தமிழீழம் குறித்த எதிர் காலக் கனவுகளுடன் கடலில் சங்கமமான தளபதி கிட்டுவின் நினைவுகளை உணர்வு பூர்வமாக மீட்டுத் தரும் வகையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. நாளாந்த பாவனைக்குரிய மேற்கு வாசலானது பண்டைய வரலாற்று சான்றுகளை நினைவுறுத்தும் வண்ணம் சங்கிலியன் சிலையைச் சுற்றி வருவதாகவும், கிழக்கு வாசலானது பாதசாரிகளின் நெரிசலைத் தவிர்த்து வாகனங்கள் உட்செல்லவும் வெளிச்செல்லவும் அனுகூலமாக உரிய வாகனத்தரிப்பிட வசதிகளைக் கொண்டதாகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



பூங்காவின் மையப்பகுதியைச் சார்ந்துள்ள பிரமாண்டமான பிரதான விருந்தினர் மண்டபமானது ஓர் தனித்துவத்தை வெளிப்படுத்தும் வகையில், பல்கோண அமைப்பில், உயர்ந்த கூரையுடன் பரந்த இடப்பரப்புடன் பார்ப்பவர் மனதில் மதிப்புக்குரிய மனப்பதிவை ஏற்படுத்தும் வகையில், கம்பீரமாகவும், அழகாகவும் அமைப்பாகவும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இக் கட்டிடத்தின் கூரைவேலைப்பாடுகள், தள வேலைப்பாடுகள் மற்றும் வாசல் கதவுகள் யாவும் மிகவும் நுணுக்கமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட வகையில் அக்க கட்டிடத்தின் சிறப்பை மேலும் மெருகூட்டும் வண்ணம் இணைக்கப்பட்டுள்ளன.




இப்பூங்காவின் மற்றுமோர் சிறப்புமிக்க அம்சமாக செயற்கை மலையமைப்பு மாதிரி ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நமது தமிழீழ பிரதேச எல்லையுள் அந்நியமான ஓர் நிலவுருவம் இங்கு மிகவும் தத்ரூபமான முறையில் எளிமையாகவும் அழகாகவும் பார்ப்பவர்களுக்கு பரிச்சயப்படுத்தப்பட்டுள்ளது. இம்மாதிரி உருவில் மலைசார் பிரதேச அம்சங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆனால் இயல்பாக அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இதிலுள்ள குகை போன்ற அமைப்பானது ஆரம்பகால பொறியியல் தொழில் நுட்ப வளைவு (Arch) தத்துவ அடிப்படையில்



அமைத்துக்கட்டப்பட்டுள்ளது. இக் குகை அமைப்பினுள் நீர் வாழ் உயிரினங்களுக்கான காட்சியகம் ஒன்றும் மிகவும் தத்ரூபமாக ஆழக்கடலுடன் சென்று இவற்றைப் பார்த்துணரும் வண்ணமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மாதிரி உருவில் நீர் அருவி ஒன்று மலையிலின்றும் உற்பத்தியாகி கடலில் சங்கமமானது போன்ற வடிவமைப்பும் மிகவும் அவதானமாக அணுகப்பட்டுள்ளது.

இதேபோன்று ஆரம்ப கால தொழில்நுட்ப தத்துவ அடிப்படையில் இரண்டு மலைகள் ஒரு தொங்கு பாலத்தால் இணைக்கப்பட்டு அதனூடாக பாதசாரிகள் பாதுகாப்பாக போக்குவரத்து மேற்கொள்ளும் தன்மையும் காட்டப்பட்டுள்ளது. தவிர மரத்தினை மட்டுமே கொண்டு ஓர் எளிய வடிவலான இரண்டடுக்கு கொட்டகை ஒன்று பார்வைக்கு ரம்மியமாகவும் அதேநேரம் சௌகரியம் தரும் காற்றோட்டமுள்ள ஓர் கோடை கால குடில் அமைப்பிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவை தவிர இயற்கையான சூழலில் இளைப்பாறிய வண்ணம், ஆறுதலாக இருந்து வாசிக்க வசதியாக ஓர் நூலகமும் ஓர் ஒதுக்குப்புறமாக அமைக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் பசி தாகம் தீர்த்து புத்துணர்ச்சி பெற வசதியான முறையில்ஓர் சுவையகம் இங்கு அமைக்கப்பட்டுள்ளதுடன் புதுமையும் வசதியும் கொண்ட இருக்கை வசதிகளுக்கு அவற்றை எடுத்துச் சென்று சுவைக்கவும் இங்கு வாய்ப்புகள் விரிந்து வழங்கப்பட்டுள்ளன. மேலும் நவீன வசதிகளுடனான கழிவகற்றும் கூடமும் மிகவும் நேர்த்தியாகவும் அதேவேளை பூங்கா அமைவுகட்கு ஒத்திசையாகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய வசதிகள் யாவும் இப் பூங்காவிலுள்ளேயெ கவனத்தில் எடுத்த வகையில் நிறுவப்பட்டுள்ளன தன்மையானது இப் பூங்கா வழங்கும் முழுமைத் திருப்தியை மேலும் உறுதி செய்வதாயுள்ளது. இப் பூங்காவின் சிறப்பினை மேலும் பிரகாசிக்கச் செய்யும் வணண்ம் இங்கு மின் இணைப்பு வேலைகள் பொருத்தமாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக (குவிய விளக்குகள் ) (Spot Light) தோட்ட மின் விளக்குகள் கூரை மின்விளக்குகள், சுற்றுமதில் எங்ஙனும் மாவீரருக்கு வணக்கம் செய்யும் விளக்குகள் என யாவும் பூங்காவின் அமைப்பையும் அவற்றின் முக்கியத்துவங்களையும் பொருத்தமான அளவில் மேலும் சிறப்பூட்டுமாறு இணைக்கப்பட்டுள்ளன.

தவிரவும் இங்கு நிறுவப்பட்டுள்ள அனைத்து விளையாட்டு உருவங்களும், உபகரணங்களும் சிறுவர்களின் அதி உச்ச பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதேவேளை அவர்களைப் பூரணமாகத் திருப்திப்படுத்தும் வகையிலும் இலகுவாகக் கையாளக்கூடிய வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மேலும் விளையாட்டுக் கருவிகள் (மேரிக்கொறவுண்) (Merry Go Round) சுயமாக இயங்கக்கூடிய வகையில் எளிய பொறிமுறைத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் பூங்கா நிர்மாணம் குறித்து விசேடமாக குறிப்பிட வேண்டிய அம்சம் யாதெனில் இங்கு பொருத்தமான தொழில்நுட்ப தத்துவங்கள் மிகவும் திறமையாக கையாளப்பட்டுள்ளமையும் உபயோகிக்கப்பட்ட மூலப்பொருட்கள் யாவும் உள்ளூரிலேயே உற்பத்தியாக்கப்பட்டவை. என்பதுவுமேயாகும். உதாரணமாக கொங்கிறீற் உபயோகத்துடன் உருவாக்கப்படும் மலையும் குகையும் போன்ற அமைப்பு இங்கு முருகைக்கல் உதவியுடன் கருப்பெற்றுள்ளமையைக் குறிப்பிடலாம். மேலும் இந்த நிர்மாணப்பணியாவற்றிலும் உள்ளூரில் தயாரிக்கப்படும் சீமெந்தே உபயோகிக்கப்பட்டமையும் விசேட கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

இவ்வகையில் இன்றைய போர்க்கால சூழ்நிலையில் பொருளாதாரத்தடை மூலம எழுந்துள்ள அழுத்தங்களைக் குறைக்கும் நோக்கிலான தன்னிறைவுப் பொருளாதார இலட்சியத்தின் ஓர் வெற்றித் தூணாக இப் பூங்கா நிர்மாணத்தைக் குறிப்பிடலாம்.











மிகவும் குறுகிய காலத்தில் நேர்த்தியான முறையில் வரையறுக்கப்பட்ட உள்ளூர் மூலப்பொருட்களுடன் உள்ளூர் ஆளணியினரை மட்டுமே கொண்டு இப் பூங்கா உருவாகிய தன்மை யானது நம் பொறியியல் துறையின் ஆற்றலுக்கும் திறமைக்கும் ஓர் முத்திரையைப் பதித்துள்ளதென்றால் அது மிகையாகாது. குறிப்பாக நமது பிரதேசத்தில் தொழில் நுட்ப வல்லுனர்களின் வெளியேற்றம் ஏற்படுத்தியிருந்ததாக கருதப்பட்ட பாரிய வெறு மை நிலை என்பது இப் பூங்கா நிர்மாண வெற்றியுடன் பொய்ப் பிக்கப்பட்டுள்ளதுடன், உள்ளூர் மூலப் பொருட்களின் உப யோகம் கொண்டிருந்த சஞ்சல சந்தேகங்களும் சாம்பலாக்கப் பட்டுள்ளது. இவ்வகையில் இப்பூங்கா நிர்மாணம் குறித்த சகல பணிகளையும் முழுமையாகப் பொறுப்பேற்று வடிவமைத்து நிர்மாணித்து சாதனை படைத்துக் காட்டியுள்ள **"கரம் நிறுவனத்தினர்"** பாராட்டுக் குரியவர்கள்.




நன்றி: சித்திரை – ஆனி. 1995 நிர்மாணி

# துயர் பகிர்வு



மண்ணில்
25.09.1950

விண்ணில்
12.01.2022

## அமரர் திருமதி. சரோஜினிதேவி நடராஜா

**அனலைதீவு, தமிழீழம் [பிறப்பிடம்], அனலைதீவு மற்றும், Mississauga, CA [வதிவிடம்]**

யாழ். அனலைதீவைப் பிறப்பிடமாகவும், கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சரோஜினிதேவி நடராஜா அவர்கள் 12.01.2022, புதன்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற ஆறுமுகம், புஷ்பமணி தம்பதிகளின் அன்பு மகளும்,

காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் கமலம் தம்பதிகளின் அன்பு மருமகளும்,

நடராஜா அவர்களின் ஆருயிர் மனைவியும்,

சயந்தன், காலஞ்சென்ற ஜெயக்குமார், சுதாஜினி , தவரூபன் ஆகியோரின் பாசமிகு தாயரும்,

ரேவதி, விஜயகாந், ரெனாட்டா ஆகியோரின் அன்பு மாமியாரும்,

அபிநயன், காவியா, மலியா, ரெயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியை விபரம்**

**நிகழ்வு இடம்:** St. John's Dixie Cemetery & Crematorium
737 Dundas St. E. Mississauga ON L4Y 2B5

**பார்வைக்கு:** ஞாயிறு, 16.01.2022 நேரம்: மாலை 05:00 மணி – 09:00 மணி
திங்கள், 17.01.2022 நேரம்: காலை 07:00 மணி – 07:30 மணி

**கிரியை:** திங்கள், 17.01.2022 நேரம்: காலை 07:30 மணி – காலை 09:00 மணி

**தகனம்:** திங்கள், 17.01.2022 நேரம்: காலை 09:00 மணி

**தகன இடம்:** St. John's Dixie Cemetery & Crematorium
737 Dundas St. E. Mississauga ON L4Y 2B5

தொடர்புகளுக்கு
சயந்தன் (மகன்): 416.803.7335
சுதாஜினி (மகள்) : 647.204.2354, ரூபன் (மகன்): 647.273.1167

– நண்பர்கள் –


29ஆம் ஆண்டு
வீரவணக்கம்
மேஜர் வேலன் (மலரவன்)
(சுந்தரலிங்கம் சுந்தரவேல்)
வியாபாரிமூலை, பருத்தித்துறை
கடற்புலி கப்டன் நாயகன்
(சிவலிங்கம் கேசவன்)
பொலிகண்டி, வல்வெட்டித்துறை
கேணல் கிட்டு
(சதாசிவம் கிருஷ்ணகுமார்)
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
கடற்புலி கப்டன் ஜீவா
(நடராசா மார்க்ஜெயராஜ்)
கொய்யாத்தோட்ட ஒழுங்கை,
பாசையூர், யாழ்ப்பாணம்
கடற்புலி லெப். தூயவன்
(மகாலிங்கம் ஜெயலிங்கம்)
கண்டிவீதி, யாழ்ப்பாணம்
கடற்புலி குணசீலன்
(சேகரன்குருஸ் மைக்கல்ஜீவா)
2ம் குறுக்குத்தொரு,
உதயபுரம், மணியம்தோட்டம்
கடற்புலி லெப். நல்லவன்
(சிவஞானசுந்தரம் ரமேஸ்)
மணியந்தோட்டம், கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
லெப். கேணல் குட்டிசிறி
(இராசையா சிறிகணேசன்)
சுதமலை வடக்கு, யாழ்ப்பாணம்
கடற்புலி கப்டன் றொசான்
(அரத்தினசிங்கம் அருணராசா)
அரசடி வீதி,
நலலூர், யாழ்ப்பாணம்
இந்திய ஆக்கிரமிப்புச் சதிக்கு உள்ளாகி
தமிழர் கடலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
வேங்கைகளின் இருபத்து ஒன்பது ஆம் ஆண்டு
நினைவு வணக்க நாள் – 16.01.2022
கடற்புலி லெப். அமுதன்
(அலோசியஸ் ஜான்சன்)
2ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை
வடக்கு, யாழ்ப்பாணம்
சங்கத்தமிழ்